
காஞ்சிபுரம்
மாவட்டச்
சிறப்பிதழ்







# தமிழரசு

செப்டம்பர் 1–15, 1998 ரூ.3







# நமது அன்றாட பழக்கவழக்கங்களால், எய்ட்ஸ் வராது. அதற்கு நீங்களே ஒரு உதாரணம்.

காலையில் எழுந்தது முதல் ராத்திரி படுக்கப் போகும் வரை நீங்கள் எத்தனையோ பேரைச் சந்திக்கிறீர்கள். ஓட்டலுக்குச் செல்கிறீர்கள், சினிமா பார்க்கிறீர்கள், நெரிசலான பஸ்ஸில் பயணம் செய்கிறீர்கள், பலருடன் கை குலுக்குகிறீர்கள்.

இவர்களில் யாருக்காவது எச்ஐவி/ எய்ட்ஸ் பாதித்து இருக்கலாம்.

**சாதாரண பழக்கவழக்கங்களின் மூலம் எய்ட்ஸ் பரவுவதாக இருந்தால், உங்களையும் எய்ட்ஸ் பாதித்திருக்க வேண்டும்.**

**ஆனால் அப்படி இல்லையே...**

ஏனெனில், கை குலுக்குவதாலோ, உணவைப் பகிர்ந்து கொள்வதாலோ, தொடுவதாலோ, தும்மலினாலோ, கழிப்பிடத்தை அனைவரும் உபயோகிப்பதாலோ, எய்ட்ஸ் பரவுவதில்லை.

எனவே எய்ட்ஸ் பாதித்தவரைக் கண்டு நீங்கள் ஒதுங்க வேண்டியதில்லை. உங்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை.

அவர்களும் நம்மைப் போன்றவர்கள்தான். அவர்களுக்கு எப்பொழுதும் போல நாம் அன்பும், ஆதரவும் காட்டுவோம்.

**சிறிதளவு ஆதரவு பெருமளவு சுமையைக் குறைக்கும்.**

**குழந்தை பிறப்பைத் தடுப்போம்**
**எய்ட்ஸ் வந்தோரைக் காப்போம்**

மேலும் விவரங்களுக்கு அணுக வேண்டிய முகவரி :
**தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு**
417, பாந்தியன் ரோடு, சென்னை - 600 008.
தொ.பே.: 8255467, 8255261, 8254917.
24 மணிநேர தொ.பே.: 8256882, 8256864.

Mudra:TNSACS:6259:98

# இந்த இதழில்...


- தொழில்துறையில் தனி முத்திரை பதித்துவருகிறது தமிழ்நாடு ........ 2
- அரசு ஆணைகள் ........ 4
- நேர்மையான நிர்வாகம் ........ 7
- அண்ணா நினைவகம் ........ 9
- காஞ்சி-சட்டமன்ற உறுப்பினர் சந்திப்பு ........ 10
- களைகட்டி வரும் காஞ்சி நகராட்சி ........ 14
- முன்னேறி வரும் இம்மாநிலத்தில் முதலீடு செய்வதின் மூலம் இலக்கு அடிப்படையிலான எம்முயற்சிகளில் பங்கு பெறுக-முதல்வர் அழைப்பு . 17
- நமக்கு நாமே ........ 20
- சிறுசேமிப்பு ........ 22
- அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் ........ 25
- தமிழ்நாடு அரசின் வீடியோ செய்திப்படங்கள்: சென்னைத் தொலைக்காட்சியில் 30 நிமிடம் இலவசமாக ஒதுக்கித் தரவேண்டும் ..... 33
- புராணங்களில் காஞ்சி ........ 38
- செவ்வாழை(சிறுகதை) **–அறிஞர் அண்ணா** ........ 41
- சட்டமன்றத்தில் **அண்ணா** ........ 46



# தமிழரசு

திருவள்ளுவராண்டு 2029
ஆவணி
செப்டம்பர் 1-15, 1998
மலர் : 30 இதழ் : 5
விலை ரூ.3


## திருக்குறள்

*இன்சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாம்*
*செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்.*

**ஒருவர் வாயிலிருந்து வரும் சொல் அன்பு கலந்ததாகவும், வஞ்சனையற்றதாகவும், வாய்மையுடையதாகவும் இருப்பின் – அதுவே இன்சொல் எனப்படும்.**

**– கலைஞர் திருக்குறள் உரையிலிருந்து...**

## அட்டைப்பட விளக்கம்

**முதல் பக்க அட்டைப் படம்:**

**அண்ணா அருங்காட்சியகம் – சென்னை**

**கடைசிப் பக்க அட்டைப் படங்கள்:**

**தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் திறப்புவிழா**
**திருநெல்வேலி மாவட்டம் – பொன்னாக்குடி சமத்துவபுரம் திறப்பு விழா**

# தொழில் துறையில் தனிமுத்திரை பதித்துவருகிறது தமிழ்நாடு

## தகவல் தொழில்நுட்ப நிறுவனத் தொடக்க விழாவில் கலைஞர் பெருமிதம்!

"டானிடெக்"கைப் (தமிழ்நாடு தகவல் தொழில் நுட்பப் நிறுவனம்) பொறுத்தவரையில், நான் ஒரு சில விவரங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

தமிழகம் தொழில் துறையில் தனி முத்திரையைப் பதிக்கின்ற வகையில் வியக்கத்தகுந்த முன்னேற்றம் கண்டு வருவதை நீங்கள் எல்லோரும் மிக நன்றாக அறிவீர்கள்.

இந்தியாவிலேயே தொழில்துறையில் தமிழகம் இப்பொழுது மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளது.

இந்த முன்னேற்றத்தைத் தொடர்ந்து காப்பாற்றுவதோடு நின்றுவிடாமல், தேவையான கட்டமைப்பு வசதிகள், மேம்பட்ட வேலைத்திறன், திறமை வாய்ந்த மனித வளம் ஆகியவற்றைத் தொழில் தொடங்குவோருக்கு அளிப்பதுடன் – ஒளிவுமறைவற்ற – சாதகமான தொழில் கொள்கையை இந்த அரசு தொடர்ந்து கடைப்பிடிப்பதன் மூலம் தொழில் துறையில் தமிழகம் முதலிடத்தை எட்டிப்பிடிக்கும் என்பதில் நான் உறுதியுடன் இருக்கிறேன்.

தகவல் தொழில்நுட்பத் தொழில் முன்னேற்றத்திற்காக இந்த அரசு தனது முழு ஒத்துழைப்பினை வழங்கி வருவதோடு – "புதிய தகவல் தொழில் நுட்பக் கொள்கையை" அறிமுகம் செய்து தமிழகத்தில் இத்தொழிலைத் தொடங்க முன்வருவோருக்கு மிகப் பெரிய அளவில் சலுகைகளையும், ஊக்கத்தினையும் வழங்கி வருகிறது.

- முத்திரைத்தாள் கட்டணம், சொத்துவரி மாற்றம், கட்டமைப்பு வசதிக்கான பதிவுக் கட்டணம் ஆகியவற்றிலிருந்து முழு விலக்கு.
- விற்பனை வரி விலக்கு
- மின்வெட்டிலிருந்து விலக்கு
- நகர அமைப்பு விதிமுறைகளிலிருந்து விலக்கு

போன்ற எண்ணற்ற சலுகைகளை இந்த அரசு வழங்கிவருகிறது.

**14.5.98** அன்று தொழில் மானியக் கோரிக்கை விவாதத்திற்குப் பதிலளித்து நான் பேசியபோது

"

*காஞ்சிபுரம் மாவட்டத்தில் பெரும் தொழிற்சாலைகள் பல இந்த இரண்டாண்டு காலத்தில் வேரூன்றியுள்ளன, 11.1.1998ல் அந்த வகையில் மாண்புமிகு முதல்வர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது டானிடெக்.*

*மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர், முன்னாள் மத்தியத் தொழில் துறை அமைச்சர் திரு.முரசொலிமாறன் ஆகியோரும் அவ்விழாவில் கலந்து கொண்டனர்.*

"




"இந்த மையம் நிறுவ தொழில் நிறுவனங்களின் உதவிகளுக்காகவும், நடைமுறை வசதிகளுக் காகவும், இந்திய நிறுவனங்கள் சட்டம் 56ன் பிரிவு 25ன் கீழ் தமிழ்நாடு தகவல் தொழில் நுட்ப மையம் பதிவு செய்யப்பட்டுள்ளது – என்றும்

''இந்த மையம் முதலில் அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைந்து செயல்பட்டு பின்னர் படிப்படியாக சுயநிதிப் பல்கலைக்கழகமாக வளர்ச்சியடையும்.'' என்றும் குறிப்பிட்டேன். அதன்படி, இந்தத் தமிழ்நாடு தகவல் தொழில் நுட்ப மையம் (டானிடெக்) இன்று தொடங்கி வைக்கப்படுகிறது.

## முன்னணி மாநிலம்

தகவல் தொழில் நுட்பவியல் துறையில் தேவைப்படும் மனித வளத்தை உருவாக்குவதில் தமிழகம் இந்தியாவில் முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது.

மத்திய அரசின், மின்னணுவியல் துறை தொடர்பாக ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் ஆவணத்தில் கூறப்பட்டுள்ள விவரங்கள்படி

- மின்னணுவியல்
- தகவல் தொடர்பு
- கணிப்பொறி அறிவியல்

ஆகிய பாடப் பிரிவுகளில் அகில இந்திய அளவில் ஆண்டுதோறும் தகுதிபெறும் மாணவர்கள் எண்ணிக்கை 16,355.

அவர்களில் தமிழகத்தைச்சேர்ந்தவர் மாத்திரம் 8,448 மாணவர்கள் என்பதை நான் மிகுந்த பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன். அதாவது 51 விழுக்காட்டினர், கணிப்பொறி, தகவல் தொழில் நுட்பம், மின்னணுவியல் ஆகிய பாடப்பிரிவுகளில் ஆண்டுதோறும் தமிழ்நாட்டிலே தேர்ச்சிபெற்று வெளிவருகிறார்கள்.

## முளைவிட்டிருக்கும் முயற்சி

இந்த அரிய முயற்சி இன்றைக்கு முளைவிட்டிருக்கின்றதென்றாலுங் கூட, இது பெரு விருட்சமாக மாறி, தமிழகத்தைத் தொழில் வளம் நிறைந்த பூமியாகவும், தமிழகத்தில் வேலையில்லாத் திண்டாட்டத்தை வீழ்த்துகின்ற நிலையை உருவாக்குகின்ற ஒரு கருவியாகவும் இன்றைக்கு நாம் தொடங்குகின்ற இந்த முயற்சி அமையுமென்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது.

இதற்கான நல்ல ஆக்கத்தையும், ஊக்கத்தையும் அளிக்கின்ற வகையிலே பல நிபுணர்கள் நமக்கு உதவிக்கரம் நீட்டிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களில் முதன்மையானவராக நம்முடைய விட்டல் அவர்கள் விளங்குகிறார்கள். அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். என் சார்பில் மட்டுமல்ல; தமிழக மக்களின் சார்பாக இதை அறிவிக்கின்றேன்.

# அரசு ஆணைகள்

தமிழக முதல்வர் **கலைஞர்** அவர்கள் முன்னிலையில் 7-9-98 அன்று தமிழ்நாடு அரசுக்கும் - "வேர்ல்ட் டெல்" (World Tel) நிறுவனத்துக்கும் இடையே ஒப்பந்தம் ஒன்று உருவாகியுள்ளது.

ஒப்பந்தத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் தலைமைச் செயலாளர் திரு.ஏ.பி.முத்துசாமி, இ.ஆ.ப., அவர்களும், "வேர்ல்ட் டெல்" நிறுவனத்தின் சார்பில் அதன் தலைவர் திரு.சாம் பிட்ரோடா அவர்களும் கையெழுத்திட்டுள்ளனர்.

இதன்படி, தமிழகம் முழுவதிலும் சமுதாய இண்டர்நெட் மையங்கள் நிறுவப்படும்; இதன் மூலம் தமிழக மக்கள் தகவல் தொடர்பு வசதிகளை எளிதாகப் பெற்றுப் பயனடைய முடியும். இது, மக்களின் அத்தியாவசியத் தேவைகளுக்கு உதவும். இந்த மையங்கள் 2 முதல் 20 தனி கணிப்பொறிகளைக் கொண்டு செயல்படும்.

இம்மையங்களைப் பயன்படுத்தும் பொதுமக்களிடம் நியாயமான கட்டணங்களை வசூலிக்கலாம். இத்துடன் இந்த மையங்கள் தொலை நகலி (FAX), தொலைபேசி (PCO), நகலி (PHOTO COPYING), ஈ.மெயில் (E-Mail), ஈ-காமர்ஸ் முதலிய நவீன தகவல் தொழில் வசதிகளையும் அமைத்துக் கொண்டு இயங்கும்.

இந்த சமுதாய இண்டர்நெட் மையங்கள், மற்ற நவீன தகவல் தொடர்புப் பயன்பாட்டுகளுடன் கல்வி, சுகாதாரம், பொதுவிநியோகம் முதலிய அரசுத்துறைகள் செயல்படுத்தும் பல்வேறு திட்டங்கள் தொடர்பான தகவல்களை மாநிலம் முழுவதிலும் பரப்புவதற்கும் பெரும் துணைபுரியும்.

ஜவுளித்துறை, தோல்பதனிடுதல், இரயில் பெட்டி தயாரித்தல், கனரக வாகனங்களை உற்பத்தி செய்தல், தகவல் தொழில்நுட்பத்துறையில் புதிய தொழிற்சாலைகளை உருவாக்குதல், உயர்தர விவசாய மற்றும் உணவு பதப்படுத்துதல் மற்றும் கனிம வேதியியல் தொழில்களைத் தமிழகத்தில் - சிங்கப்பூர் இந்தியா வர்த்தகத் தொழில் மற்றும் அமைப்பின் மூலம் புதிதாகத் தொடங்கவும், தற்போதுள்ள தொழில்களை மேம்படுத்தவும் உதவிட மாண்புமிகு தமிழக முதல்வர் **கலைஞர்** அவர்களின் முன்னிலையில் தலைமைச் செயலகத்தில் சிங்கப்பூர் இந்திய வர்த்தகத் தொழில் அமைப்புடன் இம்மாதம் முதல் வாரத்தில் ஒப்பந்தம் கையெழுத்தானது.

இந்தியாவில் உள்ள அமெரிக்க வர்த்தக ஆலோசனைக் குழுவும் (ABC), அமெரிக்காவில் உள்ள இந்திய வர்த்தக ஆலோசனைக் குழுவும் (USIBC) இணைந்து 1999-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 20, 21 ஆகிய தேதிகளில் சென்னை மாநகரில் 'தென்னிந்தியாவை நோக்கி" என்ற தலைப்பில் தொழில் கருத்தரங்கம் ஒன்றைப் பெரிய அளவில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளன.

சுமார் 75 அமெரிக்க நிறுவனங்கள் பங்குகொள்ளும் இக்கருத்தரங்கின் முன்னேற்பாடுகள் குறித்து, மாண்புமிகு தமிழக முதல்வர் **கலைஞர்** அவர்களை சென்னையில் உள்ள அமெரிக்கக் கான்சல் ஜெனரல் திருமதி. மிச்சல் சிசன், இந்திய அமெரிக்கக் கூட்டு வர்த்தக ஆலோசனைக் குழுத் தலைவர் திரு.என்.சங்கர், அமெரிக்க வர்த்தக ஆலோசனைக் குழுத் தலைவர் திரு.சாம்சிங், மகேந்திரா போர்டு நிறுவனத்தின் தலைவர் திரு.பார்க்கர் ஆகியோர் தலைமைச் செயலகத்தில் சந்தித்து ஆலோசனை நடத்தினார்.

தலைமைச் செயலர் திரு.ஏ.பி.முத்துசாமி, தொழிற்துறைச் செயலர் திரு.எம்.எஸ்.சீனிவாசன் ஆகியோர் இச்சந்திப்பின்போது உடன் இருந்தார்கள்.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 (4வது படிவத்தின்படி) கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சி அமைப்புகளுக்கான இருபத்தி ஒன்பது இனம் சார்ந்த உரிமைகள், கடமைகள் மற்றும் பொறுப்புகளில் முதல் தவணையாக வேளாண்மை முதலாகப் பல அரசு ஆணைகள் ஏற்கெனவே வெளியிடப்பட்டுவிட்டன.

தற்போது கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட ஊராட்சிகளில் உள்ள உபரி நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் தனியான மூலதனப் பணிகளுக்குக் கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மாவட்ட ஊராட்சி/ ஊராட்சி ஆய்வாளர் (மாவட்ட ஆட்சித்தலைவர்), ஊரக வளர்ச்சி இயக்குநர் மற்றும் அரசால் ஒப்புதல் அளிக்கக்கூடிய நிதி வரம்பினை நிர்ணயம் செய்து சில நிபந்தனைகளுடன் அரசால் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டைப் போலவே இந்த ஆண்டும் குறுவைப்பருவத்தில் இணைக் கொள்முதல் நடைமுறையைப் பின்பற்றுவது என்று முடிவெடுக்கப்பட்டது.

மத்திய அரசு நிர்ணயித்துள்ள விலையுடன் கடந்த ஆண்டைப் போலவே இந்த ஆண்டும் இடைநிகழ் செலவாகக் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.35 வழங்குவதென்றும் முடிவெடுக்கப்பட்டது.

மேலும் தரக்கட்டுப்பாடு குவிண்டால் ஒன்றுக்கு ரூபாய் ஐந்தாக இருக்குமென்றும் முடிவெடுக்கப்பட்டது.

ஒப்பந்தப் புள்ளிகளை இறுதி செய்வதிலும், பணிகளைத் தொடங்குவதிலும் ஏற்படும் நீண்டகால தாமதத்தைத் தவிர்ப்பதற்கான வழிமுறைகளை அமைச்சரவை ஆய்வு செய்து மேற்பார்வைப் பொறியாளர் ஒப்பந்தப்புள்ளி கருத்துருவை ஒப்பந்தப் புள்ளிகள் பெற்ற நாளிலிருந்து 15 நாட்களுக்குள் தலைமைப் பொறியாளருக்கு அனுப்ப வேண்டுமென்றும், தலைமைப் பொறியாளர், மேற்பார்வைப் பொறியாளர்களிடமிருந்து பெற்ற ஒப்பந்தப் புள்ளி கருத்துருவை அரசாங்கத்திற்கு ஏழு நாட்களுக்குள் அனுப்பவேண்டுமென்றும், அரசாங்கம் அதன் மீது முடிவெடுத்து 15 நாட்களுக்குள் ஆணைகள் வழங்கவேண்டுமென்றும், ஆணைகள் பெறப்பட்ட பதினைந்து நாட்களுக்குள் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டு பணிகள் தொடங்கப்படவேண்டுமென்றும் முடிவெடுக்கப்பட்டது.

தொழில்நுட்ப அனுமதி வழங்குவதில் தற்போதுள்ளதை விட மூன்று மடங்கு அதிகமாக நிதி அளவை உயர்த்துவதென்றும் முடிவெடுக்கப்பட்டது. இதன்படி செயற்பொறியாளருக்கும், கோட்டப் பொறியாளருக்கும் ஆறு இலட்சம் ரூபாயும், மேற்பார்வைப் பொறியாளருக்கு முப்பது இலட்சம் ரூபாயும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறே ஒப்பந்தப் புள்ளிகளை ஏற்கும் அதிகார அளவையும் மூன்று மடங்காக உயர்த்தி, பொறியாளருக்கு வழங்கப்பட்டுள்ளது.


ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேலான பணிகளைப் பத்திரிகைகளில் கட்டாயம் விளம்பரப்படுத்த வேண்டுமென்றிருப்பதை தாமதம் ஏற்படுவதைத் தவிர்க்கவேண்டுமென்ற நோக்கத்திற்காகப் பத்து இலட்சம் ரூபாய்க்குமேல் உள்ள பணிகளை மட்டும் பத்திரிகைகளில் விளம்பரம் செய்தால் போதுமென்றும் அதற்குக் கீழே உள்ள பணிகளை விளம்பரக் கையேடுகள் மற்றும் விளம்பரப் பலகைகளின் மூலமாகவும் விளம்பரம் செய்தால் போதுமென்று முடிவெடுக்கப்பட்டது.

சென்னை மாநகரிலே அடுக்கு மாடிக் கட்டடங்களைக் கட்டுவதற்கு அனுமதி வழங்குவது பற்றி அமைச்சரவையில் ஆய்வு செய்யப்பட்டு, இந்தியாவில் உள்ள மற்ற மாநகரங்களில் உயர் மாடிக் கட்டடங்கள் கட்டுவதற்கு - மாடிகளின் எண்ணிக்கைகளைப் பொறுத்தோ உயரத்தைப் பொறுத்தோ எந்தவிதமான உச்ச வரம்பும் கிடையாது. இதனைக் கருத்தில்கொண்டு சென்னை மாநகரில் அடுக்கு மாடிக் கட்டடங்கள் கட்டுவதற்கு 40 மீட்டர் உயரம் என்ற உச்ச வரம்பை 60 மீட்டர் வரை அனுமதிக்கலாம் என்று முடிவெடுக்கப்பட்டது.

சென்னை மாநகரில் அனுமதி அளிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறுதலாக, அனுமதியின்றி விதி மீறல்களுடன் கட்டப்பட்ட கட்டடங்களை வரைமுறை செய்ய இணக்கக் கட்டணமோ (Compounding Fee) அல்லது அபராதமோ விதித்து சட்டத் திருத்தம் கொண்டுவர முடிவு செய்யப்பட்டது.

பெரிய தொழில்களுக்கு விற்பனைப் வரியை பத்தாண்டுகளுக்கு ஒத்திப் போடுதல் அல்லது ஐந்தாண்டுகளுக்கு விற்பனை வரியைத் தள்ளுபடி செய்தல் என்ற சலுகைகள் ஏற்கெனவே அனுமதிக்கப்பட்டுள்ளன. இந்த இரண்டு சலுகைகளில் ஏதாவது ஒன்றைப் பெறுவதற்குத்தான் இதுவரை பெரிய தொழில்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு வந்தது. தற்பொழுது பெரிய தொழில்களில் நிலவிவரும் தேக்க நிலையை மனதில்கொண்டு மராட்டிய மாநிலத்தில் உள்ளதைப் போல ஒரு தொழிற்சாலைக்குப் பத்தாண்டுகாலம் வரை விற்பனை வரி ஒத்திவைப்பு அனுமதிக்கப்பட்டு இந்த வரி ஒத்திவைப்பு அமலில் இருக்கும்போதே இடையிலே அவர் விற்பனை வரி தள்ளுபடிச் சலுகையினை கோருவாரேயானால் அதற்கு அனுமதி வழங்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. இந்தச் சலுகை 1.10.98 முதல் அமலுக்கு வரும்.

# காஞ்சிபுரம் மாவட்டம்




**கா**ஞ்சிபுரம் மாவட்டம் காஞ்சிபுரம் செங்கற்பட்டு, மதுராந்தகம் ஆகிய மூன்று வருவாய்க் கோட்டங்களையும்- தாம்பரம், திரும்பெரும்புதூர், காஞ்சிபுரம், உத்திரமேரூர், மதுராந்தகம், செய்யூர், செங்கற்பட்டு, திருக்கழுக்குன்றம் ஆகிய 8 வட்டங்களையும், 13 ஊராட்சி ஒன்றியங்களையும் கொண்டது. இதன் பரப்பளவு 3368.90 ச.கி.மீ. மொத்தம் மக்கள் தொகை 26,11,485. இதில் ஆண்கள் - 13,32,650, பெண்கள்-12,78,835 பேர்.




# நேர்மையான நிர்வாகம்

வெ. இறையன்பு இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித் தலைவர்

காஞ்சிபுரம் மாவட்டம் சென்னைக்கு அடுத்ததாக நகர்மயமான மாவட்டம். சென்னையை ஒட்டி 3 நகராட்சிகளும், 14 நகரப் பஞ்சாயத்துக்களும் அமைந்திருக்கின்ற காரணத்தால் ,சென்னை மாநகராட்சிக்கு ஒப்ப பொதுமக்கள் குடிமை வசதிகளை எதிர்பார்க்கும் மாவட்டம். எனவே, மற்ற மாவட்டங்களிலிருந்து நிர்வாகம் முற்றிலும் மாறுபட்டதாக விளங்குகின்ற இம்மாவட்டத்தை இன்னபிறவற்றோடு ஒப்பிட இயலாது.

மாவட்ட நிர்வாகத்தைப் பொறுத்தவரை வருவாய்த்துறையில் நிறைய நில எடுப்பு, நில உரிமமாற்றம், நகர்ப்புற நிலவரி, தொழிற் பூங்காங்களுக்கு நிலம் கையகப்படுத்துதல், நெடுஞ்சாலை விரிவாக்கம், அணுமின் நிலையத்திற்கு நிலம் தேர்வு செய்தல் போன்ற பணிகள் மாவட்டத்தின் வளர்ச்சியை மட்டுமின்றி மாநிலத்தின் தொழில் முதன்மைக்கு வழிவகுக்கிற பணிகளாய் விளங்குகின்றன.

விழிப்புணர்வு மிகுந்த மாவட்டம் என்பதாலும், தலைநகருக்குத் தலைமாட்டிலேயே



ஏகாம்பரேசுவரர் திருக்கோயில் – காஞ்சிபுரம்

இருப்பதாலும், வளர்சித்துறை, பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை, மின்துறை, சுகாதாரத் துறை, சிறுதொழில்துறை போன்ற எல்லாத் துறைகளுமே மிகுந்த பொறுப்புணர்வுடன் செயல்பட்டால்தான் அரசுத் திட்டங்களை முழுவதுமாக மக்கள் அனுபவிக்க முடியும் என்கிற யதார்த்தம் இம்மாவட்டத்தில் எப்போதும் உண்டு.


சுற்றுலாத்தலங்கள் நிறைந்திருப்பதால் வருடத்தில் பல நாட்கள் முக்கியப் பிரமுகர்கள் வருகையைச் செவ்வனே கவனிப்பது இன்றியமையாத ஒரு பணி.

இந்தப் பின்னணியை மனதில் வைத்து காஞ்சிபுரம் மாவட்டத்தில் கடந்த இரு ஆண்டுகளாக நடைபெற்ற பணிகளைப் பார்க்க வேண்டும்.

சென்னையில் நடக்கின்ற அனைத்துக் கட்டடப் பணிகளுக்குமான மணல் வேண்டுமா? — காஞ்சி மாவட்டத்தின் மடியில்தான் கை வைக்க வேண்டும்— கருங்கல் வேண்டுமா — எங்கள் மாவட்ட மலைகளின் வகிடுகளிலிருந்துதான் வழித்தெடுக்க வேண்டும்— செங்கல் வேண்டுமா — எங்கள் ஏரிகளிலிருந்துதான் சவுடு மண்ணைச் சலித்தெடுக்க வேண்டும்.

ஆனால் அதே நேரத்தில் குடிநீர் ஆதாரங்கள் கெடாமல், ஏரிக்கரைகள் பலவீனப்படாமல் கள்ளத்தனமாக அவை கடத்தப்படாமல் பாதுகாக்கிற பொறுப்பு மாவட்ட நிர்வாகத்தின் தோள்களின் மீது பொறுப்பாகச் சுமத்தப்படுகிறது.

கல் உடைக்கும் தொழிலில் கொத்தடிமைகள் இருப்பதைத் தடுப்பதும், பட்டுத்தொழிலில் உள்ள சிறார் தொழிலாளர்களை விடுவிப்பதும் கல்வியை இனிமையான அனுபவமாக மாற்றும் முயற்சியும், நகர்ப் பஞ்சாயத்துக்களில் குடிநீர்



சாதி மதங்களே பிறப்பு அடிப்படையிலான ஏற்றத் தாழ்வின் நிலைக்களன்கள்; இவற்றைத் தகர்க்க வேண்டும்; அப்பொழுதுதான் நாம் உருப்படுவோம்; இந்த நாடும் உருப்படும்.

**தந்தை பெரியார்**

வசதியை மேம்படுத்துவதும், மழை அதிகமாகப் பொழியுமிடங்களில் வடிகால் வசதி ஏற்படுத்துவதும், ஏரிக்கரைகளைப் பலப்படுத்துவதும் நீர்வரத்துக் கால்வாய்களைத் தூரெடுப்பதும், சுற்றுலாத்தலங்களைச் சுற்றி சாலைகளைச் செப்பனிடுவதும், குளங்களை வளப்படுத்துவதும், தொல்பொருள் ஆராய்ச்சித் தலங்களைச் சீர்கெடாமல் பாதுகாத்தலும், நகர்ப்புறத்திற்கு அருகில் இருப்பதால் நிலமதிப்பைக் கருத்தில் கொண்டு பேராசையுடன் நீளும் ஆக்கிரமிப்புகளை அவ்வப்போது அகற்றுவதும், தனியார்ப் பள்ளிகளுக்கு இணையாக ஏழை எளியவர்கள் மட்டுமே பயிலுகிற அரசுப் பள்ளிக்கட்டடங்களை மேம்படுத்துவதும், மலைக்குன்றுகளில் கிராம மக்களின் ஒருங்கிணைப்போடு மரம் நட்டு வனங்களை மறுபடியும் படரவிடுதல், பூமியில் மறைந்துபோன கால்வாய்களைக் கண்டுபிடித்தல் போன்ற எண்ணற்ற பணிகள் மாவட்டத்தில் முழு வீச்சில் நடந்துகொண்டிருக்கின்றன.

ஊரக வளர்ச்சித்துறையின் மூலம் நடக்கும் பணிகள் தரத்துடன் நடைபெறுகின்றனவா என்பது தீவிரமாகக் கண்காணிக்கப்படுகின்றன.

"Paver" மூலமாகச் சாலைப்பணிகள் நடைபெறுவது மக்களுக்கு மிகுந்த திருப்தியைத் தந்திருக்கின்றது.

சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியின் மூலம் பல ஆக்கப்பூர்வமான பணிகள் நடைபெறுகின்றன.

மாவட்டம் சிறுசேமிப்பில் மாநிலத்தில் முதல் இடம் பெற்றிருக்கிறது. செங்கல்பட்டு, மதுராந்தகம், வாலாஜாபாத், திருப்பெரும்புதூர், திருக்கழுக் குன்றம் பேருந்து நிலையங்கள் விரைவில் புதுப்பிக்கப் படவிருக்கின்றன.

அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் மூலம் கிராமங்களில் கூட சோடியம் ஆவி விளக்குகள், கிராமப்பள்ளிகளிலும் அருமையான ஆய்வுக்கூடங்கள் என 2005 ஆம் ஆண்டிற்கான தேவைகளையும் அனுமானித்துப் பணிகள் செய்யப் பட்டிருக்கின்றன.

"நமக்கு நாமே" திட்டத்தின் கீழ் பல அரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாடுகள் குறித்த விழிப்புணர்வால் பல்வேறு வினாக்கள் எழுப்பப்பட்டிருக்கின்றன.

திறந்த நிர்வாகம் (Transparency) இன்றைய கட்டாயமாக மாறியிருக்கின்றது.

"தமிழக அரசு" பல்வேறு நிலைகளில் நேரடியாக நடத்துகிற ஆய்வின் பயனாக மிகுந்த பொறுப்புணர்வோடு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இம்மாவட்டத்தில் நேர்மையான நிர்வாகம் நடத்த வேண்டுமெனக் காட்டுகின்ற அதீத விருப்பம் இம்மாவட்டத்தை நிச்சயம் மேம்பட்ட ஒரு மாவட்டமாக இன்னும் சில ஆண்டுகளில் மலரச் செய்யும் என்பது உறுதி.




# அண்ணா நினைவகம்

பைந்தமிழ்த் தேர்ப்பாகனாகவும், செந்தமிழ்த் தேனீயாகவும் விளங்கி, தந்தை பெரியாரின் கொள்கைகளுக்குப் பட்டை தீட்டிச் சுடர்விடச் செய்த பெருமையுடையவர் **பேரறிஞர் அண்ணா** அவர்களாவார்.

அவர் பிறந்து வளர்ந்த பெருமையுடைய ஊர் காஞ்சிபுரம்.

கூட்டுறவுச் சங்கங்கள், அரங்கங்கள், அரசு நிறுவனங்களுக்கு மட்டுமல்ல; இவ்வூரில் உள்ள பல தனியார் அமைப்புகளுக்கும் கூட, அகிலப் புகழ்பெற்ற அண்ணா பெரியடப்பட்டிருப்பதைக் காணலாம்.

அவர் பிறந்த ,இல்லம் உள்ள சின்ன காஞ்சிபுரம். வரகுவாசல் தெரு, இப்போது - 'முதலமைச்சர் அண்ணாதுரை தெரு' என்று பெயர் மாற்றப்பட்டு புதுப்பொலிவோடு விளங்குகிறது.

தமிழகத்தைத் தன் எழுத்தாலும் பேச்சாலும் விழிப்புறச் செய்திட்ட அந்த எழுஞாயிறு மறைந்த பின் - அந்த இல்லம் தமிழக அரசால் பெற்ப்பட்டு - பேரறிஞர் அண்ணா நினைவு இல்லம் ஆக்கப்பட்டது.

இப்போது மாண்புமிகு முதல்வர் **கலைஞர்** அவர்களின் ஆலோசனைப் படி - அவ்வில்லத்தில் அண்ணா பிறந்து வளர்ந்த காலம் முதல் - அரசியல் ஈடுபாடு - அரசுப் பதவி - அயல்நாட்டுப் பயணம் - அறிஞர் பெருமக்கள் சந்திப்பு - உடல் நலக் குறைவு - அமெரிக்காவில் சிகிச்சை சென்னையில் மறைவு.... போன்ற பல்வேறு வாழ்க்கை நிகழ்ச்சிப் படங்கள் வரிசையுற வனப்புற வைக்கப்பட்டுள்ளன.

வண்ணம் பூசல் போன்ற மராமத்துப் பணிகளும் செய்யப் பட்டிருக்கின்றன.

இவ்வாறான செலவுகளுக்காக - கலைஞர் அரசு ரூ.4.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்திருந்தது; எல்லா வகையான நினைவகக் குறை பாடுகளும் அந் நிதி மூலம் சீர் செய்யப்பட்டு விட்டன.

அண்ணா அவர்கள் உடுத்திய வேட்டி - சட்டை, பயன்படுத்திய பேனா முதலான பொருட்கள், அவர் நடத்திய "திராவிட நாடு" - "காஞ்சி" ஆகிய பத்திரிகைகள். அவர் எழுதி வெளிவந்த புத்தகங்கள் எல்லாம் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

அவர் தொடர்பாகப் பிறர் எழுதிய நூற்கள் பல (தனியார் வெளியீடுகள்), விலைக்கு என வெளியே வைக்கப் பட்டிருக்கின்றன.

# "எல்லா சாலைகளும் சரி செய்தாச்சு, இனிமே புதுசா ரோடு போட்டாத்தான் உண்டு!"

**திரு.பி.முருகேசன், எம்.எல்.ஏ., பெருமிதம்**

காஞ்சிபுரம் மாவட்டத் தலைநகரான காஞ்சி சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் திரு.பி.முருகேசன் அவர்களைப் போய்ப்பார்த்து — "மாவட்ட மலர் போடவிருக்கிறோம்; தொகுதி மேம்பாடு பத்தி ஏதாவது சொல்லுங்களேன்?" என்றோம்.

"முன் கூட்டி தெரிவிக்காமெ இப்பிடி திடும்னு வந்து நின்னா எப்பிடிங்க?" என்று சிரிப்போடு கேட்டுவிட்டுப் "பரவாயில்லை உட்காருங்க" என்றார்.

பெருமூச்சோடு அவர் எதிரே அமர்ந்தோம் நாம்.

"இந்த ஊர்ல முன்னேல்லாம் குடிநீர்தாங்க நீண்டகாலப் பிரச்சினை. தேர்தல் காலத்துல ஓட்டு கேட்கப் போனா...வேற ஒண்ணும் பண்ணவேணாம்; மொதல்ல நல்ல தண்ணி கிடைக்க வழி பண்ணுங்கம்பாங்க. 1989 வரைக்கும் அந்த நிலைமைதான். அந்தச் சமயத்துல, உலக வங்கி ஒரு ஐந்து நகராட்சிங்களைத் தேர்ந்தெடுத்து, இது மாதிரி விஷயங்கள்ல நிதிஉதவி பண்றதா அறிவிப்பு வந்தது. தலைவர் கலைஞரைப் போய்ப்பார்த்து அந்த அஞ்சோட எங்க காஞ்சிபுரத்தையும் சேர்த்தே ஆகணும்னு கெஞ்சினேன். அவரும் சம்மதிச்சி...காஞ்சிபுரம் குடிநீர்த் தட்டுப்பாட்டை நீக்கறதுக்குன்னு பன்னிரெண்டு இலட்சம் ரூபாய் அனுமதிச்சார். அப்பாடான்னு வந்து வேலையைத் துவங்கினா...செலவு பதினெட்டு இலட்சத்துல போயி நின்னுது. மக்கள்கிட்டேயும் வசூலிச்சி, சமாளிச்சி, நல்ல விதமா அதைச் செய்துமுடிச்சேன். இன்னம் ஒரு இருபது இருவத்தஞ்சி வருஷ காலத்துக்கு, இந்த ஊர்ல குடிதண்ணீர்த் தட்டுப்பாடே வராதுங்க".




"காஞ்சிபுரத்துக்கு எங்கேயிருந்துங்க குடிநீர் வருது?"

"திருப்பாற் கடல்லேர்ந்து வருது" என்று அவர் சொல்லவும் — அவருடைய தலைமையில் இயங்கும் காஞ்சிபுரம் கைத்தறிக் கூட்டுறவுச் சங்க அலுவலர் ஒருவர் உள்ளே வரவும் சரியாக இருந்தது. "கொஞ்சம் பொறுப்பா, அப்புறம் பார்ப்பம்!" என்று வேகமாகச் சொல்லிவிட்டு எம்.எல்.ஏ., நம்பக்கம் திரும்பினார்.

"எம்.எல்.ஏ. தொகுதி மேம்பாட்டு நிதி மூலமா நீங்க செய்யறதையெல்லாம் கூட சொல்லலாம்க" என்றோம் நாம்.

"சொல்றேன், சொல்றேன். தொகுதி மக்களோட இன்னொரு நீண்ட காலப் பிரச்சினை பாலாற்றுப் பாலம். ஆத்துல தண்ணி பெருகினா, இந்தப் பக்கம் இருந்து அந்தப் பக்கமோ அந்தப் பக்கம் இருந்து இந்த பக்கமோ யாரும் வர முடியாது. தலைவருக்கும் இது தெரியும். ஆகவே, நான் இதுபத்தி கோரிக்கை வெச்சதுமே 20 கோடி ரூபாய்ல அந்தப் பாலாற்றுப் பாலம் கட்டிமுடிக்க ஏற்பாடாயிட்டு. இன்னொரு மேம்பாலமும் 18 கோடி ரூபாய்ல — என் தொகுதியில இந்த ரெண்டு பாலத்துக்கும் அரசு நிதி ஒதுக்கீடு செய்தாச்சு. சீக்கிரமே கால்கோள்

விழா நடத்தப்போறோம். அப்புறம், பாசன வசதிக்காக ஒரு பதினஞ்சாயிரம் ஏக்கருக்குப் பாலாற்றிலிருந்தும், சென்னை யிலிருந்தும் தண்ணீர் வரத்துக்கு ஏற்பாடு செய்யறதா.



காஞ்சிபுரம் புதிய பேருந்து நிலையம்

கலெக்டர் ஒத்துகிட்டிருக்கார். எம்.எல்.ஏ. நிதிபத்திக் கேட்டீங்களே? அதுல — பாலாற்றிலிருந்து அவலூர் ஏரிக்கும், செவிலிமேட்டுக்கும், முரசவாக்கத்துக்கும், தாமல் ஏரிக்கும்னு ஏழெட்டு நீர்வரத்துக் கால்வாய்களை வெட்டித் தூர்வாரி முடிச்சிருக்கேன்; கலைஞர் உதவியால் செஞ்ச இந்த வேலையையெல்லாம் பார்த்துட்டு காஞ்சி மாவட்ட ஜனங்க அதிசயிச்சுப் போறாங்க சார்!"

"மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் அருகே ஒரு பால வேலை நடக்குதுங்களே?"

''ஆமாம். அது வேகவதி ஆறு. வீராணம் ஏரிக்குன்னு பண்ணின பெரிய பெரிய பைப்புங்களை உபயோகிச்சு அந்த வேலை நடந்து கிட்டிருக்கு. அப்புறம் 96—97ல் பதினெட்டு இலட்ச ரூபாய் செலவுல ஒரு மேம்பாலம் கட்டி முடிச்சம்."

"சாலை வசதி எல்லாம்?..."


''பிரமாதமா பண்ணிகிட்டி ருக்கமே! சாதாரண நெடுஞ் சாலைகளை யெல்லாம் தேசிய நெடுஞ்சாலை தரத்துக்கு அருமையா மாத்திருக்கமே

பார்க்கலே?" என்று கேட்டு அவர் பெருமிதப்பட —

''பார்த்தோம், பார்த்தோம்!'' என்று நாமும் மகிழ்வோடு சொன்னோம்.

''இதுமாதிரி வேலைங்களுக்கெல்லாம் — இப்ப இருக்கிற கலெக்டர் இறையன்பும் சரிங்க முன்னே இருந்த கலெக்டர் ராஜமாணிக்கமும் சரி, நல்லா ஒத்துழைச் சாங்கிறதெ நான் கட்டாயம் சொல்லி யாகணும்க. அவர் இருந்தப்ப...இங்கே சென்னை — காஞ்சிபுரம் ரோடு சந்திப்புல அடிக்கடி ஆக்ஸிடெண்ட் நடக்கும்; ரெண்டு மூணு நாளைக்கு ஒரு தரம் ரெண்டு மூணு பேரு சாவாங்க. ஒரு தடவை ஆறு பேரு, சுமோ கார் ஆக்ஸிடெண்ட் ஆகி செத்துட்டாங்க. உடனே போயி ராஜமாணிக்கம் கலெக்டர் கிட்ட சொன்னேன்; இதுக்கு ஏதாவது செய்யணும்னு முந்தியே பல தடவை சொல்லிருக்கேன். உடனே அவர் எஸ்.இ.கிட்டே சொல்லி...அந்த இடத்துல ரவுண்டானா மாதியா கட்ட வழி பண்ணினார். அப்புறம் தாங்க அந்த விபத்தெல்லாம் குறைஞ்சிது. இப்பகூட இந்த ரோடு அங்கே போயி சேர்ற இடத்துல, இந்தப் பக்கமும் அந்தப்பக்கமும் மரங்கள் அடர்த்தியா இருக்கிறதால அந்த ரோட்ல வர்ற போற

தூர் எடுக்கப்பட்ட கம்பக்கல் கால்வாய்



வண்டிங்க சரியாத் தெரியறதில்லை. இப்ப இருக்கிறவர்கிட்ட சொல்லி அஞ்சாறு மரங்களை வெட்டச்


சொல்லணும்; அப்படிப் பண்ணினா அங்கே விபத்து நடக்கவே சான்ஸ் இருக்காது!"

"சொல்ல வேண்டியதுதானே?"

"சொல்லணும். இவர்கூட ராத்திரி பகல்னு பார்க்காமெ எங்க கூட ஒத்துழைக்கிறாரு. எங்கே என்ன வேலை நடந்து கிட்டிருந்தாலும் சரி; நேரம் காலம் பார்க்க மாட்டாரு — 'டொம்'முன்னு வந்து நிப்பாரு. குறிச்ச காலத்துல வேலை நடக்கலேன்னா விடமாட்டாரு. இப்ப இருக்கிற பஸ் ஸ்டாண்டை இத்தனெ அற்புதமா. இறையன்பு கலெக்டர் தானுங்களே அக்கறை எடுத்துகிட்டு கட்டி முடிச்சாரு. அதுமட்டுமா? நீங்க பார்த்திருப்பீங்க ...பொன்னே ரிக்கரை பை பாஸ் ரோடு? அதை அகலமாக நேராக்கி — விபத்துங்களைத் தவிர்க்கணும்கிறது அண்ணா கண்ட கனவுங்க. அதை இப்ப இருக்கிற கலெக்டர் தான் நிறைவேத்தினாரு. அந்த ரோடு அருமையா மாறிட்டுப் பார்த்தீங்களோ?".

"பார்த்தோம்" என்றோம். நாம்.

"இனிமே சாலை சீரமைப்புக்கு அரசாங்கம் நிதி ஒதுக்குனா... இந்தக்



தாமல் கிராமத்தில் பட்டு நெசவு

காஞ்சிபுரம் மாவட்டத்துல சீரமைக்க வேண்டிய சாலைங்க ஒண்ணுகூட இல்லைங்க — புதுசா ரோடு போட்டாதான் உண்டு!" என்று கூறிச் சிரித்தார் திரு.பி.முருகேசன். எம்.எல்.ஏ. "அதேமாதிரி பஸ் ரூட்டுங்களும். பஸ் போகாத ஊரே இந்த மாவட்டத்துல இல்லேங்க!".

"இது நெசவாளர் நிறைஞ்ச ஊராச்சே. அதுபத்தி எதுவும் நீங்க சொல்லலியே?"

"ஆமாமா. மூணு மாசத்துக்கு முந்தி வரைக்கும் அவங்க பாடு அவஸ்தைதாங்க; பல கோடி ரூபா அளவுக்கான கைத்தறித் துணிங்க தேங்கிட்டதுதான். அதுக்குக் காரணம். கலைஞர் கிட்ட போயி நிலைமையை விளக்கிச் சொன்னேன். செய்த வேலைக்குப் பலன் இல்லாததால...அவர்களெல்லாம் வேலை வெட்டி இல்லாமே வேதனை பட்டுகிட்டிருக் காங்கன்னேன். கோ—ஆப்டெக்ஸ்ஸெல்லாம் இவங்ககிட்ட ஏராளமான அளவுக்குத் துணி வாங்கணும்னு உடனே ஒரு ஆர்டர் போட்டாரு. ஒரு கோடி ரூபாய்க்கு மேலான துணிங்க அவங்க வாங்கினாங்க. அதுக்கப்புறம்... நெசவாளிங்க இப்ப நிம்மதியா குடும்பம் நடத்தறாங்க. இதுமட்டுமா? கலைஞர் அரசுலதான் கைத்தறி நெசவாளர்களுக்கும். அரசு ஊழியர்களுக்கு தர்றாப்ல ஒய்வூதியம் தரப்படும்னு அறிவிச்சாங்க. பார்வை பழுதானா...அதுக்குன்னு சிகிச்சைக்கு 190 ரூபா தர்றாங்க. தறி கெட்டுப் போச்சுன்னா அதைச் சீர்பண்றதுக்காக எட்டாயிரம் ரூபா...அதாவது கடனா நாலாயிரமும். மானியமா நாலாயிரமும் இந்த அரசுதாங்க தருது. கேட்டதெல்லாம் கிடைக்குது. ஜென்ம ஜென்மத்துக்கும் கலைஞர் அரசை மக்கள் மறக்கமாட்டாங்க" — என்று சொல்லிவிட்டு எழுந்தார், எம்.எல்.ஏ.வான திரு.பி.முருகேசன்.

**– சோழராஜா**

## வாய்-மையே வென்றது!

**கழக அரசு 1967-ல் பெருவெற்றி பெற்று ஆட்சி அமைத்தபோது அறிஞர் அண்ணா அவர்கள் பத்திரிகையாளர்களைச் சந்தித்தனர். ஒருவர் கேட்டார்:**

**"இந்த மாபெரும் வெற்றிக்கு மூலகாரணம் எது என்று நீங்கள் கருதுகிறீர்கள்?**

**"வாய்மையே காரணம்!" என்று புன்னகையோடு பதில் கூறினார் அண்ணா.**

**"வாய்மை என்றால்?"**


**"முன்பிருந்த ஆட்சியின் அலங்கோலத்தைப் பட்டிதொட்டியெங்கும் போய் வாய்மூலம் பேசியும், படித்தவர்களுக்கு மை மூலம் எழுதியும் மக்களுக்கு எடுத்துச் சொன்னோம். அதுவே இந்த வெற்றிக்கான காரணமாகும்!**

**- அறிஞர் அண்ணாவின் சொல்நயம் அனைவரையும் வியக்க வைத்தது.**

# குளங்களிலும் தூர் எடுப்பு

ஆறு, ஏரி, வாய்க்கால் ஆகியவை மட்டுமல்ல; காஞ்சிபுரம் மாவட்டத்தில், முக்கிய இடங்களில் உள்ள குளங்களும் தூர்வாரி அழகுபடுத்தப்பட்டு வருகின்றன.

காஞ்சி நகருக்குள் உள்ள விளக்கடி கோயில் தெருவில் இருக்கும் ரங்கசாமி குளம் அவ்வகையில்



விளக்கடி கோயில் தெரு, ரங்கசாமி குளம்

குறிப்பிடத்தக்க ஒன்றாக விளங்குகிறது.

அக்குளம் ஆழப்படுத்தித் தூர் எடுக்கப்பட்டது மட்டுமல்ல; படிக்கட்டுகளும், சுற்றுச் சுவரும் அமைக்கப்பட்டுள்ளன.

இது மட்டுமல்ல; சுற்றுப்புறச் சுவர்களில் – உள்ளே 30 – வெளியே 30, வண்ண ஓவியங்கள் வரையப்பட்டு வசீகரப்படுத்தப்படுகிறது. புகழ்பெற்ற ஓவியர் 'கோபன்' – அந்த அழகோவியங்களைத் திறம்படத்தீட்டி வருகிறார். ஐவகை நிலங்கள், காஞ்சிபுரம் மாவட்டச் சுற்றுலாத் தலங்கள் முதலான ஓவியங்கள் அச்சுவற்றில் இடம் பெறுமாம்!

"குளத்திற்கு வருவோர் மட்டுமல்ல; சாலையில் போவோர் வருவோரும், காஞ்சிக்கு வரும் சுற்றுலாப் பயணிகளும் நின்று கண்டுகளித்து நெஞ்சம் மகிழவே இந்த ஏற்பாடு என்றார் மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர் திரு.கிருஷ்ணசாமி.

இதேபோலப் பாலுசெட்டி சத்திரம் குளமும் தூர்வாரிச் சுவரெழுப்பி அழகுபடுத்தப்பட்டுள்ளது.




# களைகட்டி வரும் காஞ்சி நகராட்சி

நூறாண்டுகளைக் கடந்த பழமை வாய்ந்த நகராட்சியாக விளங்குகிறது காஞ்சிபுரம் நகராட்சி. ஒரு காலத்தில் அறிஞர் அண்ணா அவர்களே பணிபுரிந்த இந்த நகராட்சி மன்றம் 1866ல் தோற்றுவிக்கப்பட்டதாகும்.

பெண் உறுப்பினர்கள் 15 பேரும், ஆண் உறுப்பினர்கள் 30 பேரும் உடைய இந்நகராட்சி மன்றத்தின் 15வது தலைவராகத் திரு.எஸ்.எஸ்.திருநாவுக்கரசு இருக்கிறார். துணைத்தலைவர் திரு.ஜி.கருணாநிதி.

"காஞ்சிபுரம் நகராட்சி மன்றத்தின் இரண்டாண்டு காலச் சாதனைகள் பற்றிச் சொல்லுங்களேன்?" என்று கேட்டாலும் கேட்டோம் — பக்கத்தில் உதவியாளரையும், இரண்டு மூன்று நகராட்சி மன்ற உறுப்பினர்களையும் வைத்துக்கொண்டு — "இத்தனை இலட்சத்தில் அத்தனை இலட்சத்தில்" என்று அடுக்கினார் அவர்.

இடையிடையே உதவியாளரும், உறுப்பினர்களும் "இது எம்.எல்.ஏ நிதி", "இது எம்.பி. நிதியில் நடக்கிற வேலை", என்று அவ்வப்போது குறுக்கே குரல் கொடுத்தனர். சில இடங்களில் "இதுக்கு கலெக்டரே அரும் பாடுபட்டு சாங்ஷன் வாங்கித் தந்தார்...உதவி பண்ணினார்" என்று நகராட்சி மன்றத் தலைவரே கூறினார்.

அவ்வாறு அவர் தெரிவித்தவற்றை இங்கே தொகுத்துத் தருகிறோம்.

எஸ்.வி.என்.பிள்ளைத் தெருவிலிருந்து தொடங்கி, வந்தவாசி சாலையில் போய்ச்சேரும் 'பைபாஸ்' சாலை; நகராட்சிப் பாடசாலைக் கட்டடங்கள் 10 பழுது பார்க்கப்பட்டுள்ளன. வைகுண்டம் — ஆ. பள்ளிக் கட்டடம் கட்டப்பட்டிருக்கிறது; புதிதாக ஆழ்குழாய்க் கிணறு அமைக்கப்பட்டிருக்கிறது; ஆனந்தா பேட்டையில் 2 பாலங்கள் கட்டப் பட்டிருக்கின்றன; பிள்ளையார் பாளையத்தில் புதிய பள்ளிக் கட்டடம் கட்டப்பட்டிருக்கிறது; அங்கேயே ஒரு சத்துணவுக்கூடக் கட்டடமும், ஒரு மேனிலைப்பள்ளிக் கட்டடமும் கட்டப்பட்டுள்ளது; திருவீதி பள்ளம் அருகே ஒரு கால்வாய் தூர் எடுத்து ஆழப் படுத்தப்பட்டது. யாகசாலைப் பள்ளி புதுப்பிக்கப்பட்டது.



திரு. எஸ்.எஸ்.திருநாவுக்கரசு, நகர்மன்றத் தலைவர்

பத்து இலட்சம் ரூபாய் செலவில், அண்ணா அரங்கம் அழகுற புதுப்பிக்கப்படவிருக்கிறது; டெண்டர்விட்டாயிற்று; விரைவில் அதற்கான பணிகள் துவக்கப்படும்.

கேளம்பாக்கத்தில்ல உள்ள கழிவுநீர்க் கால்வாயினை — அகலப்படுத்தி, ஆழப்படுத்தும் பணி நடந்து கொண்டிருக்கிறது; நகருக்குள் ஓடும் மஞ்சள் நீர்க் கால்வாய் தூர் எடுக்கப்பட்டிருக்கிறது; நகரை ஒளி மயமாக்க 350 சோடியம் லைட்டுகளும், 350 டியூப் லைட்டுகளும் போடப்பட்டிருக்கிறது; ராஜாஜி மார்க்கட் புதுப்பிக்கப்பட்டது; குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் மூலம் வெள்ளகுளம் பகுதியில் அடுக்குமாடி வீடுகள் கட்டப்படவிருக்கின்றன; சுற்றுலா நகர் இது என்பதால் — சுற்றுலாத்துறை மூலமும் நிதியுதவி பெற்று, அத்துடன் நகராட்சி நிதியையும் சேர்த்து, நகரில் உள்ள முக்கியக் கோயில்களைச் சுற்றித் தார்ச் சாலை போட ஆயத்தநிலையில் இருக்கிறோம்; சட்டமன்ற உறுப்பினர் நிதி மூலமும், மாவட்ட ஆட்சித்தலைவரின் பரிபூரண ஒத்துழைப்பினாலும் காஞ்சிபுரம் பேருந்து நிலையம் பிரமாதமாக அமைக்கப்பட்டிருக்கிறது.

மொத்தத்தில் நாம் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் பார்த்த காஞ்சிபுரத்திற்கும், இப்போது புதுப்பொலிவோடு காணப்படும் காஞ்சிக்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது என்பதை நாம் உணர்ந்தோம்.

அடுத்த வருஷம் வந்து பாருங்க, இந்த ஊர் இன்னம் பிரமாதமா இருக்கும்'' என்று மிகுந்த மகிழ்ச்சியோடு கூறி முடித்தார், காஞ்சிபுரம் நகராட்சியின் தலைவராக இருக்கின்ற திரு.எஸ்.எஸ். திருநாவுக்கரசு.



தூர் வாரப்பட்ட மஞ்சள் நீர்க் கால்வாய்



அண்ணா கண்ட கனவான காஞ்சிபுரம் பொன்னேரிக்கரை சாலை அகலப்படுத்தப்பட்டுள்ளது.

நகராட்சிமன்றத் துணைத்தலைவரான திரு.ஜி.கருணாநிதியைப் பார்த்துப் பேசியபோது — "வேற கட்சிக்காரர் தலைவரா இருக்கிற நகராட்சிங்கிற பாரபட்சம் துளிக்கூட இல்லாமெ கலைஞர் அரசு எங்க நகராட்சிக்கு ஏராளமாகவே நிதியுதவி செய்துகிட்டிருக்கு சார்" என்று பெருமிதத்தோடு சொன்னார்.

மேலும் அவர் தெரிவித்ததாவது:

"இன்னம் விவரமா சொல்லணும்னா... முன்னே இருந்த ஆட்சியில செய்தும் செய்யாமலும் பாதியில விட்டுட்டுப் போன அஞ்சாறு ரோடு உட்படப் பல பணிகளையெல்லாம் இப்ப — இந்த ஆட்சி வந்தப்புறம் பண்ணின நிதி ஒதுக்கீட்லதான் செய்து முடிச்சம்; யாரோ தொடங்கின்து தானேங்கிற பேதமெல்லாம் பார்க்கலைங்க. மொத்த ஊராட்சிகளுக்கும், நகராட்சிக்கும் கலைஞர் தரும் நிதியைக் கணக்குப் பார்த்திங்கன்னா, எங்க காஞ்சிபுரத்துக்குச் செய்ற உதவிதானுங்க அதிகமாயிருக்கும். "ஊருக்கு நல்ல்து செய்வேன்" என்ற கொள்கையோடு செயல்பட்டுவரும் கழக அரசு, இது அண்ணா பிறந்த ஊர்ங்கிறதாலயோ என்னவோ, எங்க நகராட்சி மூலமா நாங்க ஓய்வே இல்லாமெ மக்களுக்காக உழைக்கிற அளவுக்கு உதவி பண்ணி வர்றதை யாராலயும் மறுக்கவோ — மறக்கவோ முடியாதுங்க. நகராட்சி ஆணையர் பெரோஷ்கான், மாவட்ட ஆட்சித்தலைவர் இறையன்பு, எல்லோருமே எங்க வேகத்துக்கு ஒத்து வர்றாங்க; நாங்களும் அவங்க வேகத்துக்கு ஒத்துப் போறோம்" — என்றார்.

'தமிழரசின் இலவச வெளியீடான 'அரசு செய்தி' மூலம் அரசின் சாதனைகள் மிக எளிதில் மக்களைச் சென்று அடைவதாகக் கூறிய அவர், தன் அறையிலேயே ஒட்டிவைத்திருந்த அந்த வார 'அரசு செய்தி'யையும் மகிழ்வோடு நமக்குக் காட்டினார்.



திரு. ஜி.கருணாநிதி, நகர்மன்றத் துணைத்தலைவர்

நகர்மன்றத் தலைவரும், துணைத் தலைவரும் வெவ்வேறு கட்சியினராயினும், ஊருக்கு நல்லது செய்வதில் ஒற்றுமையோடு பாடுபட்டு வருகிறார்கள்.

— ராஜி

# "முன்னேறிவரும் இம்மாநிலத்தில் முதலீடு செய்வதின் மூலம், இலக்கு அடிப்படையிலான எம்முயற்சிகளில் பங்குபெறுக!"

## முதல்வர் அழைப்பு



தகவல் தொழில்நுட்பத் தொழிலதிபர்களின் கூட்டம் 4–9–98 அன்று தலைமைச்செயலகத்திலுள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையில் நடைபெற்றது.
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
கலைஞர் **மு.கருணாநிதி** அவர்கள்
ஆற்றிய உரை வருமாறு:

"இந்தியாவின் தலைசிறந்த தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களின் தலைவர்களை நான் சந்திக்கும் இன்றைய தினம் ஒரு முக்கியமான நாளாகும்.

தமிழகம் தொழில் துறையில் தனி முத்திரையைப் பதிக்கின்ற வகையில் வியக்கத் தகுந்த முன்னேற்றம் கண்டு வருவதை நீங்கள் எல்லோரும் நன்கு அறிவீர்கள். இந்தியாவிலேயே தொழில் துறையில் தமிழகம் மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளது. இந்த முன்னேற்றத்தைத் தொடர்ந்து காப்பாற்றுவதோடு நின்றுவிடாமல், தொழில் துறையில் முதல் இடத்தை எட்டிப்பிடித்திட தேவையான கட்டமைப்பு வசதிகள், மேம்பட்ட வேலைத் திறன், திறமை வாய்ந்த மனித வளம், இணக்கமான சூழ்நிலையோடு, தொழில் தொடங்குவோருக்கு ஒளிவுமறைவற்ற-சாதகமான தொழில் கொள்கையை இந்த அரசு தொடர்ந்து கடைப்பிடிப்பதன் மூலம் தொழில் துறையில் தமிழகம் முதலிடத்தை எட்டிப் பிடிக்கும் என்பதில் நான் உறுதியுடன் இருக்கிறேன். இன்றைய நிலையில் தகவல் தொழில்நுட்பம் முக்கியப் பங்கு வகிக்கிறது.

எழுபதுகளின் தொடக்கத்தில் சாதாரண கருத்துப் படிவமாக விளங்கிய தகவல் தொழில்நுட்பம், இன்றைய தினம் உலகெங்கும் வியாபித்துள்ளது. எந்தத் தொழிலாக இருப்பினும் அதன் ஒவ்வொரு பிரிவும் தகவல் தொழில் நுட்பத்தோடு தொடர்புகொண்டுள்ளது மட்டுமின்றி, அதன் மூலமாகவே பயிற்றுவிக்கப்படுகிறது. தொண்ணூறுகளில் உலகப் பொருளாதாரத்தில் இத்தகவல் தொழில் நுட்பமே பிரதானப் பங்கு வகிக்கிறது. மனித வளத்தை மேம்படுத்துவதில், நிதி, இருப்புக் கணக்கு, மேலாண்மை, சந்தை, வங்கி மற்றும் மூலதனச் சந்தை ஆகியவைகளில் ஏராளமான வாய்ப்புகளை உருவாக்கியுள்ளது. இன்றைய நிலையில் தகவல் தொழில்நுட்பம் இன்றி எந்த ஒரு தொழிலும் இயங்கமுடியாது என்பதே உண்மை. அளவில் பெரியதும் மக்கள்தொகை மிகுந்ததுமான நாடுகளில் மேம்பட்ட இத்தகவல் தொழில்நுட்பமே முக்கியத்துவம் பெறுகிறது. அரசின் செயல்பாடுகளை மேம்படுத்துவதிலும், மக்களுக்குத் தேவையான கல்வி, சுகாதாரம் போன்ற சேவைகளைச் சீரிய முறையில் வழங்குவதிலும், சட்டதிட்டங்களைச் சிறந்த முறையில் செயல்படுத்தி, அமைதியாகவும் ஒழுங்கு முறையோடும் மக்கள் வாழ்வதை உறுதி செய்வதிலும் இத்தகவல் தொழில்நுட்பம் முக்கியப் பங்கு வகிக்கிறது என்றால் அது மிகையாகாது.

தமிழகத்தின் தகவல் தொழில்நுட்பம் சீரான வளர்ச்சியைக் கண்டு வருகிறது. 1994-95ல் மென்பொருள் ஏற்றுமதியில் தமிழகத்தின் பங்கு 36 கோடி ரூபாய் என்கிற அளவில் இருந்தது, ஆனால், 1997-98ல் 425 கோடி ரூபாய் என்ற அளவுக்கு உயர்ந்துள்ளது. கணினி ஹார்டுவேர் சாதனங்களை 750 கோடி ரூபாய்க்கு தமிழகம் ஏற்றுமதி செய்துள்ளது.

கல்விக்கும், தொழிலுக்கும் தேவையான கட்டமைப்பு வசதிகளுக்கு உகந்த உள்ளார்ந்த உந்துணர்வை நாம் அளிப்பதன் மூலம் தமிழகத்தை இத்தகவல் தொழில் நுட்பத்தில் உயர்ந்த இடத்திற்குக் கொண்டு சென்றிட முடியும், இந்த அடிப்படை நோக்கத்தில், இந்த அரசு எடுத்துள்ள முயற்சிகளின் பலனாக, உள்நாட்டு மற்றும் வெளிச்சந்தைகளிலும் தமிழகம் முதன்மை மென்பொருள் மையமாகத் திகழும்.

தகவல் தொழில் நுட்பத்தின் முன்னேற்றத்திற்காக இந்த அரசு பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

தகவல் தொழில்நுட்பத் தொழில் முன்னேற்றத்திற்காக இந்த அரசு தனது முழு ஒத்துழைப்பினை வழங்கி வருவதோடு, "புதிய தகவல் தொழில்நுட்பக் கொள்கையை" அறிமுகம் செய்து, தமிழகத்தில் இத்தொழிலைத் தொடங்கு முன்வருவோருக்கு மிகப்பெரிய அளவில் சலுகைகளையும், ஊக்கத்தினையும் அளித்துவருகிறது.

முத்திரைத்தாள் கட்டணம், சொத்துவரி மாற்றம், கட்டமைப்பு வசதிக்கான பதிவுக் கட்டணம் ஆகியவற்றிலிருந்து முழு விலக்கும், விற்பனை வரி விலக்கு, மின்வெட்டிலிருந்து விலக்கு, நகர அமைப்பு விதிமுறைகளிலிருந்து விலக்கு போன்ற எண்ணற்ற சலுகைகளை இந்த அரசு வழங்கி வருகிறது.

உங்களுடைய விருப்பத்திற்கேற்ற வகையில் இந்த அரசின் தகவல் தொழில்நுட்பக் கொள்கை வகுக்கப்பட்டுள்ளது. இது உங்களிடையே மிகுந்த வரவேற்புக்குள்ளாகும் என்புதை அறிவதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

முதலாவதாக, திறமையான மனிதவளத்தை மேம்படுத்துவதில் இந்த அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. தமிழகத்தில் ஆண்டுதோறும் 23 ஆயிரம் பொறியியல் பட்டதாரிகள் தேர்ச்சி பெறுகிறார்கள். அதில் 13 ஆயிரம் பட்டதாரிகள் இத்தகவல் தொழில்நுட்பம் மற்றும் அதன் தொடர்புடைய பாடங்களில் - அண்ணா பல்கலைக்கழகம், இந்தியத் தொழில்நுட்பவியல் நிறுவனம், கோவை பி.எஸ்.ஜி.தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் திருச்சி பிராந்தியப் பொறியியல் கல்லூரி போன்ற சிறந்த நிறுவனங்களிலிருந்து தேர்ச்சி பெறுகிறார்கள்.

இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் மிக அதிக அளவில் 22 ஆயிரம் மென்பொருள் வல்லுநர்கள் பணிபுரிகிறார்கள். இத்தொழில்நுட்பத்தை மேலும் மேம்படுத்தும் வகையில் 70 கோடி ரூபாய் முதலீட்டில் இந்த அரசு அண்மையில் "தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பவியல் நிறுவனம் (டானிடெக்)" என்ற அமைப்பை உருவாக்கியுள்ளது. இப்பயிற்சி நிறுவனம் உலகின் முன்னணி பயிற்சி நிறுவனங்களுக்கு இணையான தரத்துடன் அமையத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்நிறுவனத்தை ஒரு தொழில் சார்ந்த அமைப்பாக மாற்றுவதே எங்கள் நோக்கமாகும். இதன் அடிப்படையில் தேர்ந்த தகவல் தொழில்நுட்பவியல் நிறுவனங்கள் இந்நிறுவனத்தின் மூலதனத்தில் பங்கு கொள்வதுடன், அதன் செயல்பாடுகளான ஆய்வுக்கூடம் நிறுவுதல், ஊக்கத்தொகை அளித்தல் போன்றவற்றில் பங்குகொள்ள வேண்டுமென்று அழைக்கிறேன். இந்நிறுவனத்தின் மூலம் முதுநிலை பட்டயப் படிப்பு நேற்றைய தினம் தொடங்கப்பட்டுள்ளது என்பதை அறிவிப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். மேலும், முதுநிலை பட்டப்படிப்பு வரும் கல்வி ஆண்டு முதல் தொடங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உலகத் தரம் வாய்ந்த கட்டமைப்பு வசதிகளைப் பெற்றுள்ள "டைடெல்" தொழில்நுட்பப் பூங்கா அமைப்பதும் எங்கள் நோக்கமாகும். இத்தகைய தொழில்நுட்பப் பூங்கா - பத்து இலட்சம் சதுர அடி பரப்பளவில், உலகத்தரம் வாய்ந்த மென்பொருள் தொழில்நுட்பத்தைக் கொண்ட அலுவலக வளாகங்களை நியாயமான வாடகையில் நகர எல்லைக்குள் கொண்டிருக்கும். மேலும், சென்னையில் இருந்து 25 கிலோமீட்டர் தொலைவில் உள்ள கேளம்பாக்கத்தில் நேர்த்தியான கட்டமைப்பு வசதிகளைக் கொண்ட 200 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. தொழில் தொடங்கவுள்ள தகவல் தொழில்நுட்பவியல் நிறுவனங்கள் தங்கள் வசதிக்கேற்ப நிறுவனங்களை அமைத்துக் கொள்ளவும் - பணியாளர்களுக்குத் தேவையான வீட்டுவசதிகளை ஏற்படுத்திக்கொள்ள ஏதுவாகவும் இந்த இடம் இருக்கும்.

உலகளாவிய இந்தத் தகவல் தொழில்நுட்பத் தொழிலை மேம்படுத்தவும், அங்கீகரிக்கவும் இந்த அரசு

## நாட்டின் இலக்கணம்

*"வெளிச்சம் மங்காமல், குறையாமல், அணையாமல் இருப்பது நல்ல விளக்கு. ஓட வேண்டிய அளவு, ஓட வேண்டிய நேரத்தில் நீர் ஓடுவதுதான் நல்ல ஆறு! மழைக் காலத்தில் ஒழுகாமலும், வெயில் காலத்தில் வியர்க்காமலும், காற்றோட்டமும், வெளிச்சமும் உள்ளவீடு நல்ல வீடு! வீட்டுக்கு உள்ள இலக்கணம்தான் நாட்டுக்கும்! 'நல்ல ஆட்சி என்றால் எப்படி இருக்க வேண்டும்' - நல்ல விளக்குக்கு வெளிச்சம் எப்படியோ, நல்ல வயலுக்கு விளைச்சல் எப்படியோ - அப்படித்தான் நல்ல ஆட்சியில் மக்களுக்கு நிம்மதி வேண்டும். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வள்ளுவர் சொல்லி யிருக்கிறார் - 'பசி, பிணி, பகை இல்லா திருப்பது நல்ல நாடு' என்று".*

**- "அறிஞர் அண்ணாவின் மாதுளை" என்ற நூலிலிருந்து...**

டிட்கோ (TIDCO), சிட்பிஐ (SIDBI), ஐ.எல்.எப்.எஸ்.(ILFS) ஆகிய நிறுவனங்களுடன் இணைந்து தொழில் முனைவோர்க்கு உதவிட முதலீட்டுத் தொகையாக 30 கோடி ரூபாயை முதற்கட்டமாக இந்த அரசு ஒதுக்கியுள்ளது.

இத்தொகையின்மூலம் புதிய தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களைத் தொடங்குவதற்கும் நடத்திவரும் கம்பெனிகளை விரிவாக்கவும் மற்றும் மென்பொருள் உற்பத்தியை வடிவமைத்துப் பெருக்குவதற்கும் இத்தொகை வழங்கப்படுகிறது. இவ்வசதிகளைத் தொழில் தொடங்கும் நிறுவனங்கள் பயன்படுத்திக்கொள்ளும் என்று நாங்கள் நம்புகிறோம்.

இத்தகவல் தொழில் நுட்பம் முன்னேற்றம் காண்பதற்கு, தரம் வாய்ந்த தொலைத் தொடர்பு வசதி மிகவும் இன்றியமையாதது. இவ்வசதிகளைத் தமிழகத்தில் மேம்படுத்தும்பொருட்டு, தமிழகத்தை மகாநகர் டெலிகாம் நிகாம் லிமிடெட் (MTNL) என்ற அமைப்பில் கொண்டுவர மத்திய அரசை கேட்டுக் கொண்டுள்ளோம். இன்னும் ஓரிரு மாதங்களில் இவ்வசதி கிடைப்பதன் மூலம் தமிழகம் தேர்ந்த தொலைத்தொடர்பு வசதியை பெறும் என்பதில் ஐயமில்லை.

ஏற்கெனவே நான் குறிப்பிட்டவாறு, அரசு, மக்களுக்கு அளிக்கும் பணிகளை மேம்படுத்தத் தகவல் தொழில் நுட்பவியல் மிகச் சிறந்த இடம் வகிக்கிறது. அரசு வழங்கும் சேவைகளில் தகவல் தொழில் நுட்பவியலை மிகுந்த அளவில் பயன்படுத்துவதை நாங்கள் வலியுறுத்தி வருகிறோம். நாங்கள் யாருக்குப் பணிபுரிகிறோமோ, அம்மக்களுக்கு நெருக்கமாகச் சென்றடையும் வகையில் பணிகளை அளிக்க முடிவு செய்துள்ளோம். அடுத்த 24 மாத கால அளவில் மாநிலத்தின் மூலை முடுக்குகளில் எல்லாம் சமுதாய இணையம் மையங்களை அமைத்திட திரு.சாம் பிட்ரோடாவுடன் செப்டம்பர் 7ஆம் நாளன்று ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திடுகிறோம். இது அடிநிலை மக்கள் வரை தகவல் தொழில் நுட்பவியலைப் பற்றிய சிறந்த விழிப்புணர்வை விரைந்து ஏற்படுத்தும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். ஒவ்வொருவரும் இதனை உணர்ந்து, அதன் முக்கியத்துவத்திற்கேற்பப் பயன்படுத்திக் கொள்ள இது மிகவும் உதவும்.

அடுத்த பத்தாண்டுகளில் தமிழ்நாட்டை 100 சதவிகித எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் உள்ள மாநிலமாக மாற்றுவதோடு மட்டும் நாங்கள் மனநிறைவை அடையப் போவதில்லை. எங்கள் குறிக்கோள் இதைவிடவும் அதிகமானது. அடுத்த 10 ஆண்டுகளில் எங்கள் மாநிலத்தில் உள்ள அனைவரையும் கணினியைப் பயன்படுத்த அறிந்தவர்களாகச் செய்ய வேண்டுமென்பதே எங்கள் விருப்பமாகும். எனவே அடுத்த கல்வி ஆண்டில் இருந்து பள்ளி, கல்லூரி படிப்பில் தகவல் தொழில்நுட்பவியலை ஒரு பாடமாக வைக்க நாங்கள் முடிவு செய்துள்ளோம்.

## கரித்துண்டுகள்

நீ -
தீயில் கரிந்தவன்
நான் -
பசியில் எரிந்தவன்!
எனினும்
இருவரில் சில வேறுபாடே
நீ மரக்கரித்துண்டு!
நான் -
மனிதக் கரித்துண்டு!

-எஸ்.விநாயகமூர்த்தி

இப்பணியில் தனியார் துறையைச் சேர்ந்த தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களைப் பெரிய அளவில் ஈடுபடுத்த நாம் கருதியுள்ளோம்.

இன்று நாம் மிகவும் பரப்பரப்பான காலகட்டத்தில் வாழ்ந்து வருகிறோம். விரைந்து வளர்ந்து வரும் சமுதாயத்தின் அங்கங்களாக; வரலாற்றின் ஆற்றல் வாய்ந்த தொழில்துறையின் உறுப்பினர்களாக இருந்து வரும் நாம் தகவல் - அறிவு என்ற புதியதோர் புரட்சிகரமான மாற்றத்தையும் கண்டுவருகிறோம். தகவல் தொழில்நுட்பத் துறைக்குத் தலைமை ஏற்று நடத்தும் பொறுப்போடு அதனை வழிகாட்டி நடத்துவதும் நமது குறிக்கோளாகும்.

நமது தகவல் தொழில்நுட்பத்துறை தொடர்பாகவும், நம் குழந்தைகளின் கல்வித் தொடர்பாகவும் நாம் அளிக்கக் கருதியுள்ள வழிகாட்டுதல் குறிப்புகள் குறித்து உங்களுடைய மிகச் சிறந்த எண்ணங்களையும், தெளிந்த கருத்துகளையும் அளிக்கும்படி உங்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன். ஏனெனில் இன்றைய குழந்தைகளிடம்தான் நாளைய எதிர்காலம் உள்ளது. இக்குழந்தைகள் போட்டிமிக்க உலகில் வெற்றிபெற்று அதனைத் தக்க வைத்துக்கொள்ள அவர்களுக்கு நாம் சிறந்த முறையில் அறிவூட்டி கல்வி அளிப்பது நம்முடைய கடமையாகும். வருங்காலம் தகவல் தொழில்நுட்பவியலைச் சார்ந்தே உள்ளது. எனவே, இருபத்தொன்றாம் நூற்றாண்டில் நமக்குரிய இடத்தைப் பெறுவதற்கு உகந்த எல்லா முயற்சிகளையும் நாம் மேற்கொள்ளக் கருதுகிறோம். முன்னேறிவரும் இம்மாநிலத்தில் முதலீடு செய்வதன்மூலம், இலக்கு அடிப்படையிலான எமது முயற்சிகளில் பங்கு பெறுமாறு உங்கள் அனைவரையும் அழைக்கிறேன்.

# நமக்கு நாமே

நமக்கு நாமே திட்டத்தின் கீழ் 1997–98ஆம் ஆண்டிற்குக் காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் தலா ரூ.1 இலட்சம் வீதம் 13 ஊராட்சி ஒன்றியங்களுக்கு ரூ.13 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது. 38 பணிகள் எனக்கூறி முடிக்கப்பட்டுள்ளது.


1998–99க்கு இம்மாவட்டத்தில் 151 பணிகள் எடுக்கப்பட்டு அவற்றில் 132 இத்திட்டத்தின் கீழ் முடிக்கப்பட்டுள்ளது.

1998–99 க்கு நமக்கு நாமே திட்டத்தின் கீழ், இம்மாவட்டத்தில் 161 பணிகள் எடுத்துச் செய்ய நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியில் 10 பணிகள் முழுக்க முழுக்கப் பொதுமக்களின் முழுப்பங்களிப்போடு ரூ.29,11,000/– செலவில் நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ளது. பணிகள் நடைபெற்று வருகின்றன. அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் தாமல் பொன்னியம்மன்பட்டரை கிராமத்தில் ஒரு புல் பண்ணை ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்ட உட்கட்டமைப்பின் கீழ் பால் உற்பத்தியாளர் சங்கம் மூலம் அமைக்கப் பட்டுள்ளது.

## சட்டமன்ற உறுப்பினர்த் தொகுதித் மேம்பாட்டுத் திட்டம்

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் (1998–99) கீழ் அச்சிறுபாக்கம் ஊராட்சி ஒன்றியத்தில் ஒரத்தி உயர்நிலைப் பள்ளிக்கு ரூ.2.35 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு கூடுதல் பள்ளிக் கட்டடம் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் மூலமும், காஞ்சிபுரம் அரசினர் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு கூடுதல் பள்ளிக் கட்டடம் பொதுப்பணித்துறை மூலமும், திருக்கழுக்குன்றம் பெண்கள் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் ஒரு கூடுதல் பள்ளிக் கட்டடம் ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில் பொதுப்பணித்துறை மூலமும் திருப்பெரும்புதூர் அரசினர் மேல்நிலைப்பள்ளியில் ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு கூடுதல் பள்ளிக் கட்டடம் பொதுப்பணித்துறை மூலமும் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இவை தவிர, காஞ்சிபுரம் சாமிநாத முதலியார் மேல்நிலைப்பள்ளியில் கூடுதல் பள்ளிக் கட்டடம் ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சி ஆணையர், காஞ்சிபுரம் மூலமும், ஆலந்தூர் நகராட்சிப் பள்ளியில் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு கூடுதல் பள்ளிக் கட்டடம்



நகராட்சி ஆணையர், ஆலந்தூர் மூலமும், இடைக்கழிநாடு பேரூராட்சியில் முதலியார் குப்பம் உயர்நிலைப்பள்ளியில் ரூ.2.35 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு கூடுதல் பள்ளிக் கட்டடம் செயல் அலுவலர், பேரூராட்சி மூலமும் நந்தம்பாக்கம் பேரூராட்சியில்

துளசிங்கபுரம் பள்ளிக்கட்டடம் ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில் செயல் அலுவலர், நந்தம்பாக்கம் பேரூராட்சி மூலமும் செயல்படுத்த நிர்வாக அங்கீகாரம் வழங்கப்பட்டு, பணிகள் போர்க்கால அடைப்படையில் நடைபெற்றுவருகின்றன.

## நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

1998–99ல் செங்கல்பட்டு நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், திருப்போரூர் பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு ஒரு கூடுதல் கட்டடம், ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில் பொதுப்பணித்துறை மூலம், காஞ்சிபுரம் சேர்மன் சாமிநாத முதலியார் பள்ளிக் கட்டட, விரிவாக்கப் பணிகளுக்கு ரூ.10 இலட்சம், சின்ன காஞ்சிபுரம் யாகசாலை நகராட்சிப் பள்ளிக்கு கூடுதல் கட்டடம் ரூ.5 இலட்சம் செலவிலும் பணிகள் எடுக்கப்பட்டுள்ளது. நகராட்சி ஆணையாளர், காஞ்சிபுரம் இப்பணிக்கு ஒப்புதல் வழங்கியுள்ளார்.



புதுப்பட்டினம் விழாவில்...

1997–98 ஆம் ஆண்டிற்கு 35 சாண எரிவாயுக்கலன்கள் எனக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டு 35 சாண எரிவாயுக்கலன்களும் முடிக்கப்பட்டு மக்கள் பலன் அடைந்துள்ளனர். குறிப்பாகத் தாமல் ஊராட்சியில் 4 சாண எரிவாயுக்கலன் அமைக்கப்பட்டு நல்லமுறையில் இயங்கி வருகிறது. இதற்கான பயனீட்டுச்சான்றும் ஊரக வளர்ச்சி இயக்குநருக்குப் பணிந்தனுப்பப்பட்டது.

## மா.சிங்காரவேலர் நினைவு வீட்டுவசதித் திட்டம்

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள திருப்போரூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள புதுக்கல் பாக்கம் கிராமத்தில், 'மா.சிங்காரவேலர் நினைவு வீட்டுவசதி திட்டத்தின்' கீழ், மீனவர்களுக்கு ஒரு வீட்டிற்கு ரூ.32,000 மதிப்பீட்டில் 63 தொகுப்பு வீடுகள் 1997–98 ஆம் ஆண்டு ரூ.20.16 இலட்சம் மதிப்பீட்டில் கட்ட ஆணையிடப்பட்டுள்ளது.



63 தொகுப்பு வீடுகளையும் பயனாளிகளே கட்டி வருகின்றனர். மேற்கூரை சமதளத்தில் அனைத்து வீடுகள் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. 63 தொகுப்பு வீடுகளும் அடித்தளம் வரை முடிக்கப்பட்டுள்ளன. தொடர்ந்து பயனாளிகளின் மூலமே இப்பணி நடைபெற்று வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. ❁

## சிறுசேமிப்பு

# பணத்தை நாம் பாதுகாத்தால் பணம் நம்மைப் பாதுகாக்கும்

சிறுசேமிப்பைப் பொறுத்தவரையில், தமிழ்நாட்டிலேயே முதலாவது மாவட்டம் என்ற பெருமை பெற்றிருக்கிறது, காஞ்சிபுரம் மாவட்டம்.

மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளருள் ஒருவரான திரு.வி.லோகநாதன் அவர்களிடம் இது பற்றிக் கேட்டோம்.

''இதற்குமுன் இந்த மாவட்டம் எத்தனையாவது இடத்தில் இருந்தது ?''

“96-97ல் ஆறாவது இடத்தில் இருந்ததுங்க!“

“ஒரு வருஷத்துல எப்படி திடீர்னு முதலாவது இடம்?... தனியார் நிதி நிறுவனமெல்லாம் “கவர்ச்சிகரமான வட்டின்னெல்லாம் எதைனா அறிவிக்கிறாங்களே? அப்படி ஏதாவது...''

“ஐயையோ அதெல்லாம் ஒண்ணுமில்லை; இது அரசாங்கமாச்சேங்க, அப்படியெல்லாம் முடியும்களா?“

- என்று கேட்டுவிட்டு, அவரே தொடர்ந்தார்:

“இந்தத் துறையோட வெற்றிக்குக் காரணமே கலெக்டர்தாங்க. எப்பிடின்னா... காஞ்சிபுரம் மாவட்டத்துல இருக்கிற 648 ஊராட்சி.. 6 நகராட்சி... 23 டவுன் பஞ்சாயத்து... 13 ஊராட்சி ஒன்றியங்களோட தலைவருங்களுக்கெல்லாம் சிறுசேமிப்புத் திட்டத்தை மக்கள் இயக்கமா மாத்த உதவும்படி, தானே கையெழுத்திட்டு அஞ்சாறு தடவை கடிதம் அனுப்பினார். அதைத் தவிர - சின்னச் சின்ன நாடகம்... வீடியோவெல்லாம் வழக்கம்போல ஊர்ஊராப்போயி ஒட்டினம். பெயிண்டிங் மூலம், முக்கிய இடங்கள் இருக்கிற சுவர்லேல்லாம் எழுதிவச்சம். எந்த ஒரு அதிகாரி எங்கே எந்தக் கூட்டத்துக்குப் போனாலும் சிறுசேமிப்புப் பத்திப் பேசனும்னு கலெக்டரே கேட்டுகிட்டார். அவரும் எங்கே போனாலும் மக்களுக்குச் சுளுவா புரியறாப்ல சிறுசேமிப்புப் பத்திப் பேசுவார்; மாணவ மாணவிகள் மூலமெல்லாம் அந்தத் திட்டத்தை ஊர்ல பரப்பனும்பார். இப்படித்தான் இந்தக் காஞ்சிபுரம் மாவட்டத்துல சிறுசேமிப்புத் திட்டத்தை வளர்த்தம்; இதனாலதான்க இந்த தடவெ நாங்க முதலிடம் பெற முடிஞ்சது!“



ஜி. ரமேஷ்குமார்


சிறிது நேர இடைவெளிக்குப்பின்..... அவர் மேலும் தொடர்ந்தார்;
“இத்தகைய வெற்றிக்குக் காரணமான 25 பேர்களுக்கு, சுதந்திரத்தினைத்தன்னிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர், தன்கையாலேயே தங்கப் பதக்கம் வழங்கி கவுரவித்தார். அதில் சிறந்த முறையில் விளம்பரப் பணிகளை மேற்கொண்ட மாவட்டச் செய்தி மக்கள் தொடர்புத்துறை அலுவலரும் ஒருவர்!“

1997-98ல், காஞ்சிபுரம் சிறுசேமிப்பு இலக்கு ரூ.20 கோடியாகும்.

ஆனால், இங்கே மொத்தம் மற்றும் நிகர வசூல் முறையே ரூ.34 கோடி. மொத்த வசூல் ரூ.6.5 கோடி. திரும்பப் பெறப்பட்ட தொகை போக நிகர வசூல் ரூ.34.03 கோடி; அதாவது, 170 சதவிகிதம்.!

இந்த வகையில்தான் காஞ்சிபுரம் மாவட்டம், மாநிலத்திலேயே முதலிடம் பெற்றிருக்கிறது!

வேலையில்லாப் பெண்கள், வீட்டு வேலை பார்த்த பிறகு கூட சிறுசேமிப்புத் திரட்டுவதில் ஈடுபடுகிறார்கள் இம்மாவட்டத்தில். இந்த வகையில் 150 பெண்களுக்கு வேலை வாய்ப்பளிக்கப்பட்டிருக்கிறது.



## இது கோயில் அல்ல; காஞ்சி புகைவண்டி நிலையம்!

"அவர்கள், ஒரு மாதத்திற்கு இருபத்தையாயிரம் ரூபாய் சிறு சேமிப்பிற்குச் சேர்ப்பதாக வைத்துக் கொள்ளுங்கள்; அதில் நான்கு சதவிகிதக் கமிஷன் ஆயிரத்து ஐநூறு ரூபாய் எளிதாகப் பெறமுடியும். இந்தப் பெண்கள் தவிர, ஏராளமான சிறுசேமிப்பு முகவர்களும் இங்குண்டு'' என்றார் திரு.வி.லோகநாதன்.

காஞ்சிபுரம் மாவட்டம் முழுவதும் ஆங்காங்கே சிறுசேமிப்பு விளம்பரங்களை நாம் பார்த்தோம்.

''சேமிக்கும் பெண்கள் நாட்டின் கண்கள்''!....

''செலவினைச் சுருக்கிடுவோம்; சேமிப்பைப் பெருக்கிடுவோம்!''

''வீட்டை காக்கும் சிக்கனம் நாட்டையும் காக்கிறது!''

'ஒவ்வொரு கிராமத்தையும் சிறுசேமிப்புக் கிராமமாக மாற்றுவோம்; கிராம வளர்ச்சியில் பங்கேற்போம்!''

- என்பன போன்ற எல்லோருக்கும் எளிதில் புரியும்படியான தமிழ் விளம்பர வாசகங்களில் ஒரு தனிக்கவர்ச்சி தெரிந்தது.

பி.காம்., பி.எல்., படித்துள்ள பட்டதாரியான திரு.ஜி.ரமேஷ்குமார் என்கிற நபர் ஒருவர், வக்கீல் தொழில் செய்வதையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டுச் சிறுசேமிப்பு முகவராக ஆர்வத்தோடு செயல்பட்டுவருகிறார் என்பதறிந்து, அவரைப் போய்ப்பார்த்தோம்.

''அஞ்சலக ரெக்கரிங் டெபாசிட் கணக்குல 1994ல் நான் சேர்ந்தேன். இப்ப.. மாதந்தோறும் அறுபது ரூபா போட்டு, ஒவ்வொரு மாதமும் ஒரு கணக்கு வீதம் ஐந்தாண்டுக்கு சிறுசேமிப்புக் கணக்கு துவக்கி வர்றேன். இப்ப ஐம்பத்து நாலுமாசம் கட்டியாச்சு. இதுவே அறுபது மாசம் முடிஞ்சா - அதாவது அஞ்சு வருஷம் ஆனப்புறம் எனக்கு, 1999ல் ஒவ்வொரு மாதமும் ஐயாயிரம் ரூபாய் கிடைக்கும் சார். அதை அப்படியே கிஸான் விகாஸ்ல போடறதா இருக்கேன். இப்ப எனக்கு நாற்பத்தோரு வயசு ஆகுது; ஐம்பத்தஞ்சி வயசாகிறபோது சுமார் முப்பத்தெட்டாயிரம் ரூபாய் வீதம் கிடைக்கும். அதுக்கு மேல என்னங்க வேண்டியிருக்கு, எந்தப் பிரச்சினையும் இல்லாமெ, என்னோட ஓய்வுகால வாழ்க்கையை நிம்மதியா... மகிழ்ச்சியா என்னால கழிக்க முடியும்...''

''ஏன் நீங்க பேங்குலயோ தனிப்பட்ட நிதி நிறுவனத்துலயோ பணம் போடலாம்னு நினைக்கலே - அதிக வட்டி வருமில்ல? என்று குறுக்கிட்டோம், நாம்.

''பணத்தைச் சேர்க்கிறது ஒரு பக்கம் இருந்தாலும், அதைப் பாதுகாக்கிறதும் நம்பிக்கையும் தானுங்களே முக்கியம்? கொஞ்ச காலமாகப் பல நிதி நிறுவனங்கள்ல நடந்த மோசடி பத்தியெல்லாம் சேதி வருது பார்த்தீங்கள்ல? இதே

# அண்ணா பேசுகிறார்...

தமிழ் மக்களின் உள்ளத்தைக் கொள்ளைகொண்ட நாவன்மை படைத்தவர்களுள், மிகுந்த செல்வாக்குள்ள ஒருவர் "அண்ணா". தமிழ்ப்பேச்சு முறையில் அண்ணா, உண்மை மறுமலர்ச்சியைக் கையாண்டவர். பழைமை முறையில், கூட்டத் தலைவரையும் பொதுமக்களையும் போற்றிப் போற்றி முன்னுரையை நீட்டிப் பேசும் வழக்கம் அவருக்கு இல்லை. எடுத்துக்காட்டு :



"இலட்சியங்களைச் சடுதியில் அடைவதென்பது எந்த இயக்கத்திலும் சுலபமான காரியமன்று, அதிலும் நமது இயக்க இலட்சியங்களோவெனில், பல ஆண்டுகள் போர் புரியினும், மேலும் மேலும் போர்க்களமே நமது கண்முன் தெரியும்படியான நிலைமையைத் தரவல்லது! தேர்தலுக்கு ஆறு மாதங்களுக்கு முன்பு ஆரம்பித்து வெற்றியோ தோல்வியோ அடைந்து, வெற்றி கண்டால் ஆனந்தத் தாண்டவ மாடுவதும், தோல்வி நேரிடின் கொட்டாவி விட்டுத் தூங்கப் போவதும், அரசியல் கட்சிகளின் இலட்சணமாக இருக்கிறது...

நாம், மனித சமுதாயத்திலே, சமத்துவம், சகோதரத்துவம், விடுதலை – நிலவ வேண்டுமென ஆசைப் படுகிறோம். பல நூற்றாண்டுகளாக நம் நாட்டிலே இந்நிலை இல்லை என்பதைச் சரித்திரங் கூறுகிறது. மக்கள் சமத்துவம் சகோதரத்துவம் விடுதலை பெறுவதென்பது சுலபத்திலே தீர்ந்து விடக் கூடியதன்று. இந்த இலட்சி யங்களின் சாயல்களைப் பெறுவதற்கு ஐரோப்பிய நாடுகளில் புரட்சிகள் நடந்து இரத்த ஆறுகள் ஓடி இருக்கின்றன. மக்களிடையே சமத்துவம் நிலவுவதென்றால், அதைத் தடைப்படுத்தும் கொள்கைகள் அழிக்கப்பட வேண்டும். அந்தக் கொள்கைகளைக் கொண்ட இயக்கங்களுடன் போரிடத்தான் வேண்டும். அந்தப் போரின் அவசியத்தை மக்களிடை எடுத்துக்கூறி அதில் ஈடுபடக்கூடிய அளவு பக்குவம், பலம் – இவற்றைப் பெறும்படியாக, மக்கள் தயார் செய்யப்பட வேண்டும். சுருங்கக் கூறின், அறிவுப்படை அணிவகுப்பு நமது முதற்பணி. அதில் நாம் ஓரளவிற்கு வெற்றி பெற்றுவிட்டோம்! நாம் கண்ட வெற்றிக்குப் பிறகு, அது நமக்குச் சர்வ சாதாரணமாகத் தோன்றக்கூடும்; அலட்சியமாகவும் அதை நோக்கக்கூடும். ஆனால், புராதனத்தையே புனிதமெனக் கருதும் இந்நாட்டிலே புதிய அறிவுப்படை திரட்டப்படுவதென்றால் அது ஓர் ஒப்பற்ற வெற்றி என்பதை யார் மறுக்க முடியும்?...

சமுதாய சீர்திருத்தங்களுக்கெனத் தோன்றிய சமாஜங்கள், கூடங்கள் யாவும் பெரிதும் மதப் பற்றையே தலையாகக் கொண்டிருந்தன. மதப் போர்வை இருந்ததால் மக்கள் தாராளமாகத் தங்கு தடையின்றி அவ்வியக்கங்களில் சேரவும், அவற்றிலே மட்டற்ற நம்பிக்கை வைக்கவும் ஏதுவாயிற்று. ஆனால், பரந்து விளங்கிய அவ்வியக்கங்கள், சமுதாயத்திலே பிரமாதமான மாறுதலைச் செய்து காட்டவில்லை! ஏனெனில், பெரிய மாறுதல்களிலே மக்களுக்கு ஆர்வம் எழும் வகையிலே, அறிவுச்சுடர் புகவில்லை. மதத்திலே இலயித்துள்ள எந்த இயக்கத்தாலும், மனமாற்றத்தை, மனப்புரட்சியை உண்டாக்க முடியாது! புதிய தத்துவார்த்தங்கள், புதிய குருக்கள், விருத்தியுரைகள் ஏற்படலாம். ஏதாவதொரு மதத்திற்குச் சற்றே முரணான திட்டம் ஏற்படினும், அதற்காக ஏதேனும் ஒரு பழம் ஏட்டை எடுத்து, புதிய அர்த்தம் சொல்ல வேண்டி வந்ததே தவிர சமூகக் கோளாறுகளை ஒழிக்க, முதலில் கோளாறுகளின் காரணங்களைப் பட்டவர்த்தனமாக எடுத்துக்கூறும் விதத்திலே அந்த இயக்கங்கள் வரவில்லை. அடிமைத்தனத்திலுள்ளவர் தொகையே இங்கு அதிகம். ஆகவே, இத்தகையோர் அன்னியரை விரட்ட விடுதலைப் போர் தொடுத்துப் பயனில்லை என்பதைத் தோழர் ஈ.வெ.ரா. எடுத்துக் காட்டினார். 'வெளிநாட்டு விரோதியை விரட்டியடிக்கும் சக்தி நமக்கு வேண்டுமானால், இங்கு அடிமைப்படுத்துவோர் இருக்கலாகாது' என்றார். 'வெள்ளையனை ஓட்டி, சுய ஆட்சி பெறவேண்டுமென்ற ஆவலில் அதிக மக்கள் பங்கு எடுத்துக்கொள்ள வேண்டுமானால், அதே விடுதலை ஆர்வம் இங்கு முதலில் எழவேண்டும்' என்றார். இங்கு அக்கிரகாரத்தையும் சேரியையும் உள்ளடக்கிய ஊர்களிலே வசித்துக்கொண்டு, இங்கு வெளியே செல்ல வேண்டுமானால் பூனைக்கும் பல்லிக்கும் பயந்து வாழும் நிலையில் இருந்துகொண்டு, இங்கு விதவையை மணந்துகொண்டால் ஆண்டவன் ஆணையை மீறியதாகும் என்ற மனோபாவத்தை வைத்துக்கொண்டு, "எங்கள் ஊரை ஆட்டி வைக்கும் நீங்கள் யார், போங்கள் இந்த நாட்டைவிட்டு" என்று நாம் எங்ஙனம் சொல்லமுடியும்? சொன்னாலும் அவன் எங்ஙனம் போவான்?...பழைய ஏடுகளுக்கே, பல நூற்றாண்டுகளாக அடிமைப்படுத்தப்பட்ட நம்மை, சமூகத்தில் சிறுபான்மையினர், ஆயுத பலமின்றி 'ஆத்ம பலத்தாலேயே' ஆயிரக்கணக்கான வருஷங்களாக அடிமைப்படுத்திய நம்மைப் பிறப்பினாலேயே ஒருவன் நமக்கு மேலானவன் – பூசுரன் – என்ற மனோபாவத்தை வளர்த்துக்கொண்டே நம்மை, வெள்ளைக்காரரின் பீரங்கிப்படை அடிமைப்படுத்தியதிலே ஆச்சரியமொன்று மில்லை! ஆகவே, அடிமை மனப்பான்மையை வளர்க்கும் எதுவாயினும் அதை எதிர்த்துப் போரிட வேண்டிய அவசியம் நமக்கு ஏற்படுகிறது!".

*– மா.சு.சம்பந்தன் எழுதி 'மணிவாசகர் பதிப்பகம்' வெளியிட்ட "சிறந்த பேச்சாளர்கள்" என்ற புத்தகத்திலிருந்து.*

---

காஞ்சிபுரத்துல கூட ஒரு நிதி நிறுவனம் (பெயரைச் சொல்கிறார்) ரொம்பப் படிச்சவங்கள்லாம் கூட ஆர்வத்தோட போயி அதுல சேர்ந்து, ஏராளமான பணத்தைப் போட்டு வெச்சாங்க; இப்பதான்.. போனவாரம் இந்த நிறுவனமே எல்லோருக்கும் ''அம்பேல்'' சொல்லிட்டுப் போயிட்டு! அவ்வளவு பேரு பணமும் காலி. எதுலயும் ஒரு நம்பிக்கையும் நாணயமும் வேணும்க. இந்த சிறுசேமிப்புல வட்டி கொஞ்சம்தான். சிறுகச் சிறுகத்தான் பணம் வரும். ஆனா, நம்பிக்கையோட சிறுகச் சேர்த்து நாணயத்தோட பெருக வாழ முடியும்களே! இப்பிடியெல்லாம் யோசனை பண்ணி பணத்தெ நாம காப்பத்துனா, வருங்காலத்துல பணம் நம்மைக் காப்பத்தும்க!' என்று உறுதிபடப் பேசினார், திரு. ரமேஷ்குமார்.

அவருடைய பேச்சு ''சிறுசேமிப்பில் இன்னுமா நீங்கள் சேரவில்லை'' என்று நம்மையே கேட்பது போலிருந்தது.

**– பி.எல்.ராஜேந்திரன்**

# அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

*தமிழகம் தழைத்தோங்கிட*

*மாண்புமிகு முதல்வர்*

**கலைஞர்** *அவர்கள்*

*உருவாக்கிச் செயல்படுத்தி*

*வரும் திட்டங்களில்*

*'அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்'*

*நாடெங்கும் சிறப்புறச்*

*செயல்படுத்தப்பட்டு வருகிறது;*

*காஞ்சிபுரம் மாவட்டத்தில் இத்திட்ட*

*வளர்ச்சி இணையற்றுத் திகழ்கிறது;*

***தாமல்:*** காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த இக்கிராமத்தில் ஒருமுகப்படுத்தப்பட்ட திட்டத்தின்கீழ் 91 பணிகள் ரூ.59.24 இலட்சத்திற்குத் தொடங்கப்பட்டு 83 அவற்றில் முடிக்கப்பட்டுள்ளன. அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் 12 பணிகள் 30.68 இலட்சத்திற்கு எடுக்கப்பட்டு, அவற்றில் 6 முடிக்கப்பட்டுள்ளன.

இதில் சமுதாயக்கூடம், நியாயவிலைக்கடை, கல்வெர்ட், கால்வாய், இணைப்புச்சாலை, பள்ளி விளையாட்டு மைதானம் மேம்பாடு செய்தல், மேல்நிலைப்பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்டுதல், தொகுப்பு வீடுகள் கட்டுதல், சத்துணவுக்கூடம், தனியார் கழிப்பிடம், புகையில்லா அடுப்பு, பால் உற்பத்தியாளர் சங்கம் மூலம் புல் பண்ணை அமைத்தல், குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் பைப்லைன் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி கட்டுதல், நீர்பாசனக்கால்வாய் ஏரிக்கலங்கள் கட்டுதல் போன்ற திட்டங்கள் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

***உத்திரமேரூர் – சாலவாக்கம்***

இத்திட்டத்தின் கீழ், இக்கிராமத்தில் 16 பணிகள் ரூ.18.75 இலட்சத்தில் எடுக்கப்பட்டு, அதில் 14 முடிக்கப்பட்டுள்ளன. ஒருமுகப்படுத்தப்பட்ட திட்டத்தின்கீழ், 143 பணிகள் ரூ.74.55 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் எடுக்கப்பட்டு, அதில் 118 முடிக்கப்பட்டுள்ளன. சிறுபாலம், நெல் அடிக் களம், இணைப்புச்சாலை, மாணவர்கள் தங்கும் விடுதி, தொகுப்பு வீடுகள், தொலைகாட்சி அறை, பயணியர் நிழற்குடை, தெருவிளக்கு அமைத்தல், தனியார் கழிப்பிடம் அமைத்தல், புகையில்லாத அடுப்பு, சுடுகாட்டிற்குப் பாதை அமைத்தல், கிராமக்குளம் மேம் படுத்துதல், கூடுதல் பண்ணைக் கட்டடம், பாசனக் கால்வாய் மேம்






படுத்துதல், விசைப்பம்பு பராமரிப்பு போன்ற பணிகள் இவற்றில் அடங்கும்.

### குன்றத்தூர் (இ) படப்பை

அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் 21 பணிகள் ரூ.33.12 இலட்சம் மதிப்பீட்டில் எடுக்கப் பட்டதில் 12 முடிக்கப் பட்டுள்ளன. ஒருமுகப் படுத்தப்பட்ட திட்டத்தின் கீழ் 155 பணிகள் ரூ.47.98 இலட்சம் மதிப்பீட்டில் எடுக்கப்பட்டதில் இதுவரை 84 முடிக்கப் பட்டுள்ளன.

மீன் மார்க்கெட் கட்டுதல், பாலம் அமைத்தல், சமையல் கூடம், இணைப்புச்சாலை, தெருவிளக்கு அமைத்தல், நியாயவிலைக்கடை, உயர்நிலைப்பள்ளிக்குக் கூடுதல் கட்டடம், விஞ்ஞானக்கூடம், கால்நடை மருத்துவமனை, தொகுப்பு வீடுகள், தனியார் கழிப்பிடம், ஜீவுன்தாரா கிணறு, தார்ச்சாலை, புகையில்லா அடுப்பு, மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி, பைப்லைன் விஸ்தரிப்புப் பணிகள் இதில் அடங்கும்.

### மடிப்பாக்கம்

தாமஸ் மலை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள அண்ணா மறுமலர்ச்சித்திட்டத்தின் கீழ் 20 பணிகள் 52.45 இலட்சம் மதிப்பீட்டில் எடுக்கப்பட்டன; அவற்றில் 15 முடிக்கப்பட்டுள்ளன. ஒருமுகப்படுத்தப்பட்ட திட்டத்தில் 15 பணிகள் ரூ.37.44 இலட்சம் மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு, 7 முடிக்கப்பட்டுள்ளன.

கூடுதல் பள்ளிக் கட்டடம், சத்துணவுக்கூடம், விநியோகக்கடை, நூலகக் கட்டடம், கைப்பம்பு, சாலை மேம்படுத்துதல், கழிவுநீர்க் கால்வாய், பேருந்து நிலையம் மேம்படுத்துதல், பயணியர் நிழற்கொடை, சோடியம் விளக்குகள் அமைத்தல், தனியார் கழிப்பிடம், புகையில்லா அடுப்பு, குளம் பராமரிப்பு, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, மோட்டார் அமைத்தல் போன்ற பணிகள் இதில் அடங்கும்.

### மூவரசம்பட்டு.

இவ்வூராட்சியானது தாமஸ் மலை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ளது. அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் 17 பணிகள் ரூ.28.92 இலட்சம் மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு, 11 பணிகள் முடிக்கப் பட்டுள்ளன. ஒருமுகப்படுத்தப்பட்ட திட்டத்தின் கீழ் 7 பணிகள் ரூ.21.27 இலட்சம் மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு, அவைகளில் 4 முடிக்கப்பட்டுள்ளன.



உயர்நிலைப்பள்ளிக்குக் கூடுதல் கட்டடம், கழிப்பறை, தொலைக்காட்சி அறை, தார்ச் சாலை, சத்துணவுக்கூடம் பழுதுபார்த்தல், சமையல் அறை, சிமெண்ட் கான்கிரிட் சாலை அமைத்தல், சிறுபாலம், புகையில்லா அடுப்பு, பொதுவிநியோகக்கடை, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, பைப்லைன் விஸ்தரிப்பு, பம்ப் ரூம் கட்டுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

> "அறப்போருள்ளத்துக்கு துணிவு வேண்டும்; தூய்மை வேண்டும்; தன்னல மறுப்பு மிக மிகத் தேவை; இதுதான் அறப்போரின் இலக்கணம். தாக்குவது எளிது; தாங்கிக் கொள்வது கடினம். எனினும் சீரியதோர் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டவர்கள் அறப்போர் உள்ளம் பெற்றாக வேண்டும். அறப்போரின் முதற்கட்டம் அவரவரும் தத்தமக்குள்ளாகவே, எழும் எண்ணங்களுடன் – எழுச்சிகளுடன் – கோப தாபங்களுடன் – ஆசாபாசங்களுடன் போரிட்டும் வெற்றி காண்பதாகும். அந்த வெற்றி அளித்திடும் அளவிடற்கரிய ஆற்றல் விளக்கிடக்கூட இயலாது; உணரத்தான் முடியும். மிக மிக நீண்ட காலம் பூமிக்கடியில் புதையுண்டு கிடக்கும் கரித்துண்டுதானே ஒளிவிடும் 'வைரம்' ஆகிறது என்கின்றனர்....?
>
> – அறிஞர் அண்ணா

***வல்லம்***

காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள வல்லம் ஊராட்சியில் அண்ணா மறுமலர்ச்சித்திட்டத்தின் கீழ் 16 பணிகள் 23.90 இலட்சம் மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு 7 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. ஒருமுகப்படுத்தப்பட்ட திட்டத்தின்கீழ் 106 பணிகள் ரூ.40.99 இலட்சம் மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு 24 பணிகள் முடிந்துள்ளன. கல்வெர்ட் கட்டுதல், நூலகக் கட்டடம் கட்டுதல், சமையல் அறை கட்டுதல், சத்துணவு மையம் கட்டுதல், சமையல் அறை கட்டுதல், பள்ளிக் கழிப்பறை, கூடுதல் பள்ளிக்கட்டடம், தார்ச்சாலை, சாலை மேம்பாடு செய்தல், கழிவுநீர்க் கால்வாய் கட்டுதல், தொகுப்பு வீடுகள் கட்டுதல், பயணியர் நிழற்கொடை, மயானச்சாலை, தனியார் கழிப்பிடம், சாண எரிவாயுக்கலன், மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அமைத்தல், பைப்லைன் விஸ்தரிப்பு போன்ற பணிகள் இதில் அடங்கும்.




***கடலூர்***

லத்தூர் ஊராட்சி ஒன்றியம் – கடலூரில் – அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் 12 பணிகள் இங்கே ரூ.18.83 மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு, 8 முடிக்கப்பட்டுள்ளன. ஒருமுகப்படுத்தப்பட்ட திட்டத்தின்கீழ், 81 பணிகள் ரூ.39.75 மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு 32 முடிக்கப்பட்டுள்ளன. சத்துணவுக்கூடம் அமைத்தல், பொது விநியோகக்கடை, கைப்பம்பு அமைத்தல், மின்சார விளக்கு அமைத்தல், களம் அமைத்தல், தொகுப்பு வீடுகள் கட்டுதல், கல்வெட்டு கட்டுதல், பயணியர் நிழற்குடை, கூடுதல் பள்ளிக்கட்டடம், தனியார் கழிப்பிடம், புகையில்லா அடுப்பு, மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அமைத்தல் போன்ற பணிகள் இவற்றில் அடங்கும்.

***சூணாம்பேடு***

சித்தாமூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த சூணாம்பேட்டில், அண்ணா மறுமலர்ச்சித்திட்டத்தின்கீழ் 28 பணிகள் ரூ.38.98 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் எடுக்கப்பட்டு 2 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. ஒருமுகப்படுத்தப்பட்ட திட்டத்தின்கீழ் 110 பணிகள் ரூ.27.32 இலட்சம் மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு 54 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. கூடுதல் பள்ளிக் கட்டடம், சமையல் அறை, குளம் மற்றும் ஏரி சீரமைத்தல், நூலகக் கட்டடம் கட்டுதல், கல்வெர்ட் கட்டுதல், தார்ச்சாலை, தரைப்பாலம், பள்ளிகளுக்கு விஞ்ஞானக்கூடம், தொகுப்பு வீடுகள் கட்டுதல், பைப்லைன், கடை, நியாயவிலைக்கடை, தனியார் கழிப்பிடம், சத்துணவுக்கூடம், தெருவிளக்கு அமைத்தல், மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி




அமைத்தல் போன்ற பணிகள் இதன் கீழ் எடுக்கப்பட்டுள்ளன.


***செம்பாக்கம்***


திருப்போரூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள செம்பாக்கத்தில் அண்ணா மறுமலர்ச்சித்திட்டத்தின் கீழ் 7 பணிகள் ரூ.16.95 இலட்சம் மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளது – ஒருமுகப்படுத்தப்பட்ட திட்டத்தின் கீழ் 81 பணிகள் ரூ.30.21 இலட்சம் மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு 67 பணிகள் முடிக்கப்பட்டிருந்தது. சத்துணவுக்கூடம் கட்டுதல், பொதுவிநியோகக் கடை கட்டுதல், கூடுதல் பள்ளிக் கட்டடம், விஞ்ஞானக்கூடம், தொகுப்பு வீடுகள், தொலைக் காட்சி அறை, பயணியர் நிழற்குடை, தனியார் கழிப்பிடம், புகையில்லா அடுப்பு, புதிய கிணறு எடுத்தல், மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அமைத்தல், பைப்லைன் மற்றும் பம்பு ரூம் கட்டுதல் போன்ற பணிகள் எடுக்கப்பட்டுள்ளன.

***நத்தப்பேட்டை***

காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த நத்தப்பேட்டை அண்ணா மறுமலர்ச்சிக் கிராமத்தில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் 23 பணிகள் ரூ.61,77,000 மதிப்பீட்டிலும், ஒருமுகப்படுத்தப்பட்ட திட்டத்தின்கீழ் 84 பணிகள் ரூ.103 இலட்சம் மதிப்பீட்டிலும் செயல்படுத்த நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் பள்ளிக்கட்டடம், பள்ளிக் கழிப்பறை, சத்துணவுக் கட்டடம், பொது விநியோகக் கடைக் கட்டடம், சமையற்கூடம், கல்வெர்ட், மயானப்பாதை, சோடியம் விளக்குகள், கான்கீரீட் சலை மற்றும் கழிவுநீர்க் கால்வாய் ஆகிய பணிகளும் ஒருமுகப்படுத்தப்பட்ட திட்டடத்தின் கீழ் சிறுபாலம்,





சாலைகள மேம்பாடு, வடிகால் அமைத்தல், தொகுப்பு வீடுகள், தனிநபர் கழிப்பிடம், ஜீவன்தாரா கிணறுகள், குளம், பராமரிப்பு, தூளா அடுப்புகள், விசைப்பம்புகள், பைப்லைன் விஸ்தரிப்புப் பணிகள் ஆகிய பணிகளும் எடுத்துச் செய்யப்பட உள்ளன.


## *இலுப்பப்பட்டு*

வாலாசாபாத் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த இலுப்பப்பட்டு அண்ணா மறுமலர்ச்சிக் கிராமத்தில் அண்ணா மறுமலர்ச்சித்திட்டத்தின்கீழ் 13 பணிகள் ரூ.22,00,000 மதிப்பீட்டிலும், ஒருமுகப்படுத்தப்பட்ட திட்டத்தின் கீழ் 69 பணிகள் ரூ.55,00,000 மதிப்பீட்டிலும், செயற்படுத்த நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் பள்ளிக் கட்டடம், கழிவறை, சமையறக்கூடம், பொது விநியோகக்கடை, பாலம், தார்சாலை, சோடியம் ஆவிவிளக்குகள், மயானபாதை, சிறுபாலங்கள் ஆகிய பணிகளும், ஒருமுகப் படுத்தப் பட்ட திட்டத்தின் கீழ் தெருக்கள் – மேம்பாடு மயானப் பாதை, தார்ச் சாலை, தொகுப்பு வீடுகள், ஜீவன் தாரா கிணறுகள், தனிநபர் கழிப்பிடம், குட்டை சீரமைப்பு, தூளா அடுப்புகள், விசைப்பம்பு மற்றும் பைப் லைன் விஸ் தரிப்புப் பணிகள் எடுத்துச் செய்யப் பட உள்ளது.



மாமல்லபுரம் கான்கிரீட் சாலை



***ஊரப்பாக்கம்***

காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஊரப்பாக்கம் அண்ணா மறுமலர்ச்சிக் கிராமத்தில் – அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீ, 71 பணிகள் ரூ.35 இலட்சம் மதிப்பீட்டிலும், ஒருமுகப்படுத்தும் திட்டத்தின்கீழ் 71 பணிகள் ரூ.78 இலட்சம் மதிப்பீட்டிலும் செயற்படுத்த நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் கான்கிரீட் சாலைகள், கழிவுநீர்க் கால்வாய் மற்றும் சோடியம் ஆவிவிளக்குகள் அமைக்கவும், ஒருமுகப்படுத்தப்பட்ட திட்டத்தின்கீழ் சிறுபாலம், சாலைகள், தொகுப்பு வீடுகள், ஜீவன்தாரா கிணறுகள், தனிநபர் கழிப்பிடங்கள், தூளா அடுப்புகள், விசைப்பம்புகள் ஆகிய பணிகள் எடுக்கப்படவும் உள்ளன.

***வல்லம்***

திருப்பெரும்புதூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த வல்லம் அண்ணா மறுமலர்ச்சிக் கிராமத்தில், அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் 6 பணிகள் ரூ.13 இலட்சம் மதிப்பீட்டிலும், ஒருமுகப்படுத்தப்பட்ட திட்டத்தின்கீழ், 66 பணிகள் ரூ.32 இலட்சம் மதிப்பீட்டிலும் செயற்படுத்த நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் – தார்ச்சாலை, சமையற்கூடம், சத்துணவு மையக் கட்டடம், பொது விநியோகக்கடை, கழிப்பறை, சோடியம் ஆவிவிளக்குகள் ஆகிய பணிகளும், ஒருமுகப்படுத்தப்பட்ட திட்டத்தின்கீழ் சாலை மேம்பாடு, பள்ளிக் கட்டடம், நியாயவிலைக் கடை, தொகுப்பு வீடுகள், ஜீவன்தாரா கிணறு, தனிநபர் கழிப்பிடங்கள், குளம் பராமரிப்பு, தூளா அடுப்புகள் மற்றும் விசைப் பம்புகள் ஆகிய பணிகள் எடுக்கப்பட்டுள்ளன.

***திரிசூலம்***

தாமஸ்மலை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த திரிசூலம் அண்ணா மறுமலர்ச்சிக் கிராமத்தில், அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் 10 பணிகள் ரூ.50 இலட்சம் மதிப் பீட்டிலும், ஒருமுகப் படுத்தப் பட்ட திட்டத்தின்கீழ் 17 பணிகள் ரூ.38 இலட்சம் மதிப்பீட்டிலும் செயற்படுத்த நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் சாலைகள், பாலங்கள், பள்ளிக் கட்டடம், சுற்றுச்சுவர், கல்வெர்ட், பொது விநியோகக் கடை, தெருவிளக்குகள் ஆகிய பணிகளும், ஒருமுகப்படுத்தப்பட்ட திட்டத்தில் சிறுபாலம், கல்வெர்ட், சாலைகள் மேம்பாடு, தனிநபர் கழிப்பிடங்கள், ஏரி ஆழப்படுத்துதல், தூளா அடுப்புகள், விசைப்பம்பு மற்றும் பைப்லைன் விஸ்தரிப்பு ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

***பொழிச்சலூர்***

தாமஸ மலை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த பொழிச்சலூர் அண்ணா மறுமலர்ச்சிக் கிராமத்தில், அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் 15 பணிகள் ரூ.66 இலட்சம் மதிப்பீட்டிலும், ஒருமுகப்படுத்தப்பட்ட திட்டத்தின்கீழ் 77 பணிகள் ரூ.68 இலட்சம் மதிப்பீட்டிலும் செயற்படுத்த நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் கூடுதல் பள்ளிக்கட்டடம், கழிப்பறை, சமையற்கூடம், பேருந்து நிலைய மேம்பாடு, மயானப்பாதை, பொது விநியோகக்கடை, சத்துணவுக் கட்டடம், கான்கிரீட் சாலைகள், சோடியம் ஆவிவிளக்குகள் ஆகிய பணிகளும், ஒருமுகப்படுத்தப்பட்ட திட்டத்தின்கீழ் தார்சாலைகள், பொது விநியோகக்கடை, தனிநபர் கழிப்பிடங்கள், விசைப்பம்புகள், பைப்லைன் விஸ்தரிப்பு போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

***புதுப்பட்டினம்***

திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்த புதுப்பட்டினம் அண்ணா மறுமலர்ச்சிக் கிராமத்தில், அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் 17 பணிகள் ரூ.75 இலட்சம் மதிப்பீட்டிலும், ஒருமுகப்படுத்தப்பட்ட திட்டத்தின் கீழ் 69 பணிகள் ரூ.1.87 இலட்சம் மதிப்பீட்டிலும் செயற்படுத்த நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் – பள்ளிக் கட்டடங்கள், கழிப்பறைகள், சத்துணவு மையக் கட்டடங்கள், பொது விநியோகக் கடை கட்டடங்கள், கான்கிரீட் சாலை, சோடியம் விளக்குகள், மயானப்பாதை ஆகிய பணிகளும், ஒருமுகப்படுத்தப்பட்ட திட்டத்தின்கீழ், தார்ச்சாலைகள், பள்ளிக் கட்டடம், குளம் பராமரிப்பு, தொகுப்பு வீடுகள், தனிநபர் கழிப்பிடங்கள், புகையில்லா அடுப்புகள், பைப்லைன் விஸ்தரிப்பு மற்றும் விசைப்பம்புகள் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

***குன்னத்தூர்***

மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த குன்னத்தூர் அண்ணா மறுமலர்ச்சிக் கிராமத்தில், அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் 15 பணிகள் ரூ.14 இலட்சத்திலும், ஒருமுகப்படுத்தப்பட்ட திட்டத்தின்கீழ் 63 பணிகள் ரூ.36 இலட்சத்திலும் செயல்படுத்த நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் தெருவிளக்குகள், நியாயவிலைக்கடை, சத்துணவுக்கூடம், கல்வெர்ட், கதிரடிக்கும் தளம், கைப்பம்புகள் ஆகிய பணிகளும், ஒருமுகப்படுத்தப்பட்ட திட்டத்தின்கீழ் பேருந்து நிழற்குடை, நீர்த்தேக்கத் தொட்டி, தொகுப்புவீடுகள், ஜீவன்தாரா கிணறுகள், தனிநபர் கழிப்பிடங்கள், ஏரி பழுதுபார்ப்பு, தூளா அடுப்புகள், விசைப்பம்புகள் போன்ற பணிகளும் மேற்கொள்ளப்பட உள்ளன.

***வேடந்தாங்கல்***

அச்சிறுபாக்கம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த வேடந்தாங்கல் அண்ணா மறுமலர்ச்சிக் கிராமத்தில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ், 21 பணிகள் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டிலும், ஒருமுகப்படுத்தப்பட்ட திட்டத்தின்கீழ் 86 பணிகள் ரூ.63 இலட்சம் மதிப்பீட்டிலும் செயற்படுத்த நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் பள்ளிக் கட்டடம், சத்துணவுக்கூடம், கழிப்பறைகள், சமையற்கூடம், நியாயவிலைக்கடை, சோடியம் விளக்குகள், கல்வெர்ட் ஆகிய பணிகளும் ஒருமுகப்படுத்தப்பட்ட திட்டத்தின் கீழ், தொலைக்காட்சி அறை, பேருந்து நிழற்குடை, சாலை மேம்பாடு, அங்கன்வாடிக் கட்டடம், தொகுப்புவீடுகள், ஜீவன்தார கிணறுகள், தனிநபர் கழிப்பிடங்கள், தூளா அடுப்புகள் விசைப்பம்புகள் மற்றும் பைப்லைன் விஸ்தரிப்பு போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

1998–99ல், மொத்தத்தில் – ஒருமுகப் படுத்தும் திட்டத்தில் 551 பணிகளும், அண்ணா மறுமலர்ச்சித்திட்டத்தில் 121 பணிகளும் எடுக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

– இவ்வாறு அண்ணா பிறந்த காஞ்சிபுரம் மாவட்டத்தில், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் எல்லா வகையிலும் ஏற்றம் பெற்று வருகின்றது.

**நி க ர ற் ற கா ஞ் சி**

*'கி.பி.5 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கவிஞர் காளிதான் – நாம் பூவெனப் படுவது பொறிவாழ் பூவே ' என்பதைப் போல – "நகரெனப்படுவது காஞ்சி நகரே" (நகேரஷு காஞ்சி) என்று சிறப்பித்துக் கூறியுள்ளார்.*

*"கல்வியில் கரையிலாத காஞ்சிமா நகரம்" என்று திருநாவுக்கரசர் பாடியுள்ளார்.*

*"தொண்டை நன்னாடு சான்றோருடைத்து" என்று ஔவையார் பாடியிருக்கிறார்.*

*"மாதவம் செய்தது தொண்டை நன்னாடு" என்று சேக்கிழார் பாடியுள்ளார்!*

# சோலைவனமாகும் சுடுகாடு

சுடுகாடு என்றாலே திரைப்படங்களிலெல்லாம் நாய் நரிகள் ஊளையிடுவதும், கள்ளி-சப்பாத்தி மண்டிக்கிடப்பதுமான இடங்கள் காட்டப்படுமல்லவா? காஞ்சிபுரம் மாவட்டத்தில் - குறிப்பாகக் காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள இடுகாடுகளையெல்லாம் அவ்வாறன்றிச்



ஊராட்சி மன்றத் தலைவர்

சோலைவனமாக்கும் திட்டமொன்றும் மாவட்ட ஆட்சித்தலைவரால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதன்படி - இடுகாட்டைச் சுற்றிலும் அழகிய வண்ணப் பூச்சுடன் கூடிய சுற்றுச்சுவர்கள் எழுப்பப்படுகின்றது. சுவர் ஓரமெல்லாம் பூச்செடிகள், நிழல் தரும் மரக்கன்றுகள் நடப் படுகின்றன. இடுகாட்டின் உட்பகுதி சமன் செய்யப்பட்டு, முட் செடிகளெல்லாம் அகற்றப்பட்டு வருகின்றன.

மேற்கூறையோடு கூடிய சுடுகாட்டு மேடைகள் கட்டப்பட விருக்கின்றன.

இவ்வாறான பணிகள் நடை பெறும் கோனேரிகுப்பம் இடுகாடு ஒன்றை நேரில் நாம் போய்ப் பார்த்தோம். சரியான எல்லையோடு சுற்றுச் சுவர் எழுப்பி முடிக்கப் பட்டு, மரக்கன்றுகள் நடப் படுகின்றன. கோனேரிகுப்பம் ஊராட்சித் தலைவர் திருமதி பி.பாத்திமா அவர்களும் வேறு சிலரும் நம்மைக் காண அங்கே வந்துசேர்ந்தனர்.

"இந்த வேலை பற்றி நீங்கள்லாம் கலெக்டரைக் கேட்டப்புறம் தான் அவர் இம்மாதிரி ஏற்பாடுகளையெல்லாம் செய்யறாரா?". என்றோம்.

"நல்லா கேட்டிங்க போங்க. இங்கே சுத்து வட்டாரத்துல இருக்கிற ஜனங்கள் எல்லாம் இங்கோ்ந்து இந்தச் சுடுகாட்டையே தூக்கணும்; திறந்த வெளியில பிணம் எரிக்கிறதெப் பார்க்கறது, அதன் வாடையுமே சகிக்கலைன் னெல்லாம் எனக்கே மனுக் கொடுத் திருக்காங்க; அதையெல்லாம் நானே மேலிடத்துல தெரிவிச் சிருக்கேன். அதுக்கப்புறம் இதுபத்தி யோசிச்சு, எங்ககிட்டேல்லாம் பேசித்தான் கலெக்டர் இந்தமாதிரி செய்யறாங்க. இப்ப, புகார் செஞ்சவங்களே வாயடச்சிப் போய்ட் டாங்க!" என்றார் அந்த அம்மையார்.





காஞ்சிபுரத்தில், சின்ன வயதில் அண்ணா படித்த பச்சையப்பன் இடைநிலைப் பள்ளி

## "தமிழ்நாடு அரசின் வீடியோ செய்திப் படங்களை சென்னைத் தொலைக்காட்சியில் ஒளிபரப்பிட வாரந்தோறும் 30 நிமிடம் இலவசமாக ஒதுக்கித் தரவேண்டும்!"

**புதுடில்லி மாநாட்டில் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.வ.முல்லைவேந்தன் அவர்கள் கருத்துரை**

"மத்திய அரசு முன்னின்று நடத்துகின்ற இந்தச் செய்தி மற்றும் திரைப் படத்துறை அமைச்சர்களின் 23–வது மாநாட்டில் தமிழ்நாடு அரசின் சார்பில் கலந்துகொள்வதிலே நான் பெருமைப்படுகிறேன்.



இந்த மாநாட்டிற்குத் தலைமையேற்கும் மாண்புமிகு மத்திய செய்தி ஒலிபரப்புத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மற்றுமுள்ள பல்வேறு மாநிலங்களின் செய்தித்துறை அமைச்சர் பெரு மக்களுக்கும், செய்தித் துறை அலுவலர் களுக்கும் எங்கள் மாண்புமிகு தமிழ்நாடு அரசு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சார்பில் நல்வாழ்த்தைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

திரைப்படத்துறைக்குத் தொழில் அந்தஸ்து அளித்துள்ளமைக்காக, முதலாவதாக மத்திய அரசுக்குத் தமிழக அரசின் சார்பில் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்; இதன் மூலம் அத்துறையானது பல்வேறு நிதி நிறுவனங்களின் நிதியாதாரங்களைப் பெற்றிட முடியும். அதுகுறித்து தமிழ்நாடு அரசு விரைவிலேயே ஒரு நல்ல முடிவெடுத்து அறிவிக்கும். திரைப்படத்துறைக்குத் தொழில்துறை அந்தஸ்து அளிக்கும் அதே நேரத்தில் அவர்கள் பல்வேறு சலுகைகள் மற்றும் மானிய உதவிகளுக்காக மாநில அரசினை நாடுவார்கள், எனவே இது தொடர்பாக மத்திய அரசு மாநில அரசுகளுக்கு இயன்ற அளவு நிதிஉதவி அளிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்திய அரசியல் சட்டத்தின் 7–வது பிரிவின் கீழ் பொது அதிகாரப் பட்டியலில் திரைப்படத் துறையைச் சேர்ப்பது குறித்து ஏற்கெனவே எங்கள் அரசு அதிருப்தி தெரிவித்திருக்கிறது. இந்தப் பரந்த இந்திய நாடு பல்வேறு வகையான கலாச்சாரம், பண்பாடு, மொழி, நாகரிகம் ஆகியவற்றைக் கொண்டது ஆகும். இதையெல்லாம் மனதில் கொண்டுதான் இந்திய அரசியல் நிர்ணயச் சட்டத்தினை உருவாக்கியவர்கள் திரைப்படத் துறையினை மாநில அரசுக்கான பட்டியலில் வைத்துள்ளனர் என்பதை உணரவேண்டும். அதை எடுத்துக்காட்டுகிற இந்த நேரத்தில் தமிழ்நாடு அரசு, திரைப்படத்துறை மேலும் வளர்ச்சி பெறச் செய்யவும், அத்துறையிலே மேலும் பல புதுமைகளை ஏற்படுத்தவும் எல்லா வகையான நடவடிக்கைகளையும் எடுத்துவருகிறது. இந்நிலையில், திரைப்படத்துறையைப் பொதுப் பட்டியலில் இணைக்கவேண்டிய அவசியம் என்ன? – என்று என்னால் கண்டுணர முடியவில்லை.

### அவசரச் சட்டம்

திரைப்படத் தொழில் எதிர்நோக்கியுள்ள பல பிரச்சினைகளை மிகுந்த பரிவோடு எங்கள் அரசு கவனித்து வருகிறது. தற்பொழுது படத்தயாரிப்பில் ஏற்பட்டுள்ள தேக்க நிலை, திரைப்படங்களை வினியோகிப்பதில் உள்ள சிக்கல்கள் ஆகியவற்றின் காரணமாகக் கேளிக்கை வரி அமைப்பை மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று அண்மையில் தமிழகத்தில் உள்ள திரைப்படத்துறையின் முக்கியமானவர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து முறையிட்டுக் கொண்டார்கள். அதன்பேரில் முதல்வர் கலைஞர் அவர்கள் அத்துறை வளர்ச்சிக் கான பல சலுகை களையும், குறிப்பாகக் கேளிக்கை வரிச்சட்டச் சலுகையினையும் அறிவித்தார்கள்.

## சாமானியர்களின் எண்ணம்

*சாமானியர்களின் சகாப்தம் இது! இது குறித்து எத்தகையவர்கள் – எத்துணைக் கருத்து வேறுபாடு – மாறுபாடு கொண்டு இருந்தாலும், சாமானியர்களின் – ஏழை எளியவர்களின் எண்ணங்கள் ஈடேற்றப்பட்டுத் தீரும் நேரமிது என்பதனை மறந்திடவே முடியாது. "ஏழை சொல் அம்பலம் ஏறும் காலம்" என்பதும் சரியே !*

*சாமானியர்கள், அவர்கள் எத்துணை ஏழ்மையிலும், அறியாமையிலும் உழன்று உருக்குலைந்து காணப்படினும், அவர்தம் கருத்தோட்டத்தை மதித்திடல் வேண்டும்! அதன்படி நடந்திடவும் வேண்டும் என்பதைத்தான் உங்களுக்குச் சுட்டிக் காட்டிட விரும்புகின்றேன். சாமானியர்களின் விருப்பங்களை, எண்ணங்களை, எழுச்சியை எடுத்துக் காட்டிடும் பிரதிநிதியாகவே உங்களிடம் பேசிடவும் விரும்புகின்றேன்.*

*– அறிஞர் அண்ணா*



அதன்படி 24.7.1998ல், மாநிலக் கேளிக்கை வரிச் சலுகைகளை வழங்கும் அவசரச் சட்டம் மாநில அரசால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

தற்போது நடைமுறையில் உள்ள கேளிக்கை வரியினை மேலும் குறைப்பது உள்ளாட்சி அமைப்புகளுக்கான வருவாயில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்.

எங்கள் மாநிலத்தைப் பொறுத்த வரையிலே இன்னொரு குறிப்பிடத்தக்க செய்தி என்னவென்றால், திரைப்படத் தொடர்பான பிரச்சினைகளைக் களைவதற் கென்றே, செய்தி–சுற்றுலாத் துறைச் செயலாளர் தலைமையில் மாநில அளவிலும், மாவட்ட ஆட்சித்தலைவர்கள் தலைமையில் மாவட்ட அளவிலும் தனிக்குழுக்கள் அமைக்கப்பட்டு இயங்கிவருகின்றன.

**முன்னணியில் நிற்கும்**

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் மேலான அறிவுரைப்படி, திருட்டு வீடியோ மற்றும் காம்பாக்ட் டிஸ்க் பரவலாக்கத்தை அடியோடு தடுக்கவும், தீவிர நடவடிக்கை எடுப்பதில் எங்கள் அரசு முன்னணியில் இருக்கிறது என்பதை என்னால் பெருமையோடு சொல்லிக் கொள்ள முடியும். மத்திய அரசின் 1957–ஆம் ஆண்டு உரிமைப் பதிவுச் சட்டப்படி (Copyright Act) திருட்டு வீடியோ தயாரிப்போர் கண்டுபிடிக்கப்பட்டு தண்டிக்கப்படுகிறார்கள்.

ஆனால், அதன்படி தவறிழைப்போருக்கு அளிக்கப்படுகின்ற குறைந்தபட்சத் தண்டனையையும், அபராதத்தையும் அதிகரிக்கும் வகையில் அச்சட்டத்தின் 63 மற்றும் 63A ஆகிய பிரிவுகள் திருத்தப்பட வேண்டும் அல்லது தனி ஷரத்துக்கள் சேர்க்கப்படவேண்டும். ஏனெனில், மாநில அரசு இதற்கெனத் தனிச்சட்டம் இயற்றமுடியாது.

இதற்கிடையில் அந்தச் சட்டப்பிரிவைக் கடுமையாக நடைமுறைப்படுத்தும்படி மாநிலத்தின் காவல்துறைத் தலைமை அதிகாரிக்கு அறிவுரை வழங்கப்படவுள்ளது.

இதனடிப்படையில், வேறு சில சட்டபூர்வ நடவடிக்கைகளும் தமிழ்நாடு அரசால் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. அதாவது, இனிமேல் புதிதாக யாரும் வீடியோ பார்லர் அல்லது வீடியோ தியேட்டர் தொடங்க அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும், வீடியோ திருட்டுகளைத் தடுப்பதற்காக மாநிலத் தலைநகரான சென்னையிலும், 5 பெரிய மாவட்டங்களின் தலைநகரங்களிலும் காவல்துறை தனி கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

கேபிள் டி.வி. தொடர்பான 1995 சட்டத்தின்படி, அதற்கான உரிமம் வழங்கும் அதிகாரம் அஞ்சல் துறைத் தலைவரிடமே உள்ளது; இந்நிலையை மாற்றி – சென்னை மாநகரில் காவல்துறை ஆணையாளரும், மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்களுமே அவ்வாறு உரிமம் வழங்கும் அதிகாரம் உடையவர்களாக மாற்றப்படவேண்டும் என்று முந்திய கூட்டத்தின் போதே நான் கருத்தறிவித்திருக்கிறேன். அதை இன்றுவரை ஏற்று நடைமுறைப்படுத்தப்படாமல் இருப்பது துரதிர்ஷ்டவசமானது.

இந்த மாநாட்டிற்கான நிகழ்ச்சி நிரல் பத்தி 10(1)ல் தமிழ்நாடு அரசு இதுவரை அங்கீகரிக்கப்பட்ட அலுவலர்களை நியமிக்கவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது; ஆனால் எங்கள் அரசு, சென்னை மாநகரைப் பொறுத்தவரை காவல்துறை ஆணையரையும், மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித்தலைவர்களையும் அதற்கென அங்கீகரிக்கப்பட்ட அலுவலர்களாக (Authorised Officers) அறிவித்துள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கேபிள் டி.வி.பிரச்சினை**

கேபிள் டி.வி. என்பது இப்போது கிராமங்கள் வரையிலும் பரவியுள்ளது. அதன் உரிமையாளர்கள் சங்கம் அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஒருவர் இந்த எல்லைவரை ஒளிப்பரப்பலாம், இன்னொருவர் அந்த எல்லைவரை ஒளிப்பரப்பலாம் என்று அவர்களுக்குள்ளாகவே முறை வைத்துக்கொண்டு செயல்பட்டு வருகிறார்கள். அதன்படி, ஒருவர் ஒளிபரப்பு எல்லைக்குள் அடுத்தவர் கேபிள் டி.வி. ஒளிபரப்பமுடியாது என்ற நிலை உள்ளது, இதனால்,, அவர்கள் எந்த நிகழ்ச்சியை ஒளிபரப்புகிறார்களோ அதைப்பார்க்க வேண்டிய கட்டாயத்திற்குத்தான் அந்தந்தப் பகுதி மக்கள் ஆளாவார்களே தவிர, நுகர்வோர்களின் விருப்பத்திற்கேற்ப கேபிள் டி.வி.க்கள் இயக்கப்படுவதில்லை.

இதை நெறிமுறைப்படுத்த நாம் ஒரு வழிமுறையை வகுத்தாக வேண்டும்.

மத்திய அரசு திரைப்படப் பிரிவின்கீழ் திரைப்படங்களும், செய்திப்படங்களும் (Feature Films and Documentaries) தயாரித்து வெளியிடப்படுகின்றன. அவை மாநிலங்களின் கலாச்சாரம், பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றுக்கு ஒத்துப்போவதாகவோ உடன்பாடுள்ளதாகவோ இல்லை. ஆகவே, அவ்வாறான படங்கள் தயாரிக்கப்படும்போது மத்திய அரசானது மாநில அரசுகளையும் கலந்தாலோசித்துச் செயல்படுவது பயனுள்ளதாக இருக்கு.

**உரிமை தருக**

தமிழ்நாடு அரசின் திரைப்படப்பிரிவு ஒவ்வொரு மாதமும் வீடியோ செய்திப் படங்களைத் தயாரித்து வெளியிட்டு வருகிறது. அவை, உரிய கட்டணம் செலுத்தி சென்னைத் தொலைக்காட்சி மூலம் வெளியிடப்பட்டு வருகின்றன. அதுகுறித்து மத்திய அரசின் செய்தி ஒலிபரப்பு அமைச்சகத்தை நான் கேட்டுக் கொள்ளுவது ஒன்றுண்டு; தமிழக அரசு அவ்வாறு பெரும் செலவில் அரசு சாதனைகள் பற்றித் தயாரித்து வெளியிடும் வீடியோ மலர்களை, எல்லோரும் க்ாணத்தக்க முக்கிய நேரத்தில் ஒளிபரப்ப வேண்டும் என்றும், இதற்காக நிரந்தரமாக வாரம் 30 நிமிட நேரத்தை ஒதுக்கித் தருமாறும் சென்னைத் தொலைக்காட்சிக்குத் தாங்கள் அறிவுறுத்திட வேண்டுகிறேன். குறிப்பிட்ட அந்த 30 நிமிட நேரத்தை விற்பனை செய்திடும் உரிமத்தையும் தமிழ்நாடு திரைப்படப் பிரிவுக்கே வழங்கவேண்டும்.



அறிஞர் அண்ணா, ரோமாபுரியில்
போப்பாண்டவரைச் சந்தித்தல் (17—4—1968)

பொதுச் சுகாதாரம், நுண்ணூட்டச்சத்து, வேளாண்மை மற்றும் மத்திய அரசு நலத்திட்டங்கள் குறித்து தமிழக அரசு உருவாக்கும் செய்திப் படங்களைத் தொலைக்காட்சியிலே வெளியிட ஒரு 30 நிமிட நேரத்தை மாதந்தோறும் தொலைக்காட்சி எங்களுக்கு — அதாவது மாநில அரசுக்கு ஒதுக்கித் தரலாம்.

தமிழ்நாடு அரசின் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவனம் 38 ஆண்டு காலமாகச் சிறப்புற இயங்கிவரும் ஒரு பெரும் அமைப்பு ஆகும். திரைப்படத்தயாரிப்பு தொடர்பான பல்வேறு பாடங்கள் இங்கே பயிற்றுவிக்கப்படுகின்றன.

ஆனால், அங்கே படித்து முதலிடத்தில் தேர்ச்சி பெறுகின்ற மாணவர்களுக்குக்கூட, மத்திய அரசு தொலைக்காட்சி நிலையங்களில் வேலைவாய்ப்பு அளிக்கப்படுவதில்லை. அத்தகைய இளம் திறமையாளர்களுக்கும் வாய்ப்புகள் அளிக்கப்படவேண்டும்.

அதேபோல, அனைத்திந்திய வானொலி நிலையத்திலும் ஒலிப்பதிவுப்பிரிவு போன்ற பணியிடங்களுக்குத் தமிழ்நாடு திரைப்படப் பிரிவு மற்றும் தொலைக்காட்சி நிலையத்தில் முறைப்படி ஒலிப்பதிவு, ஒலிப்பதிவுத் தொழில் நுட்பவியல் பட்டயம் பெற்றவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்று இம்மாநாட்டிலே கேட்டுக் கொள்கிறேன்.

திரைப்பட இயக்குநர், திரைக்கதை அமைப்பு, படத்தொகுப்பு, நடிப்பு போன்றவற்றிற்கான எங்கள் நிறுவனத்தில் அளிக்கப்படும் பட்டயப் படிப்புத் தேர்வு, மத்திய அரசு தேர்வாணையத் தினாலும் (UPSC) அங்கீகரிக்கப்பட்டு, மத்திய அரசு அமைப்புகளில் தக்க வேலை வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும்.

இந்த நிறுவனத்திற்கு, அகில இந்தியத் தொழில் நுட்பக் கல்விக் குழு (All India Council of Technical Education) உரிய அங்கீகாரம் அளித்திட இந்த மாநாடு மூலமாகத் தொடர்புடையவர்களை நான் விரும்பி வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

அப்படிச் செய்வதன் மூலம் — இந்த நிறுவனத்திலே பணிபுரிகின்ற ஆசிரியர்களுக்கு மற்ற தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு இணையான ஊதியம் வழங்கி உவப்படையச் செய்திட இயலும்.

இது மட்டுமல்ல; அதன் காரணமாக நவீன இயந்திரங்களைத் துறையின் வளர்ச்சி கருதி வாங்கிடவும் வழிபிறக்கும்.

நவீன இயந்திரங்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்கிறபோது தீர்வு மற்றும் சுங்க வரி விதிப்பு தளர்த்தப்பட வேண்டும். தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவனத்தின் மேம்பாடு கருதி இச்சலுகையை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

### இணைந்து செயல்படலாம்

அரசுத் திட்ட விளம்பரங்கள் குறித்த பணிகளிலே மாநில அரசும், மத்திய அரசும் இணைந்து செயல்பட வேண்டும் என்பதைத் தமிழக அரசு திரும்பத் திரும்ப வலியுறுத்தி வருகிறது.

இது குறித்து இம்மாநாட்டு நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளதுபோலப் பயன்மிக்கதோர் திட்டம் தீட்டிச் செயல்படுத்தியாக வேண்டும். அதே நேரத்தில் மாநில அரசுகளின் திட்டங்களும் அதுபற்றிய அறிவிப்புகளும் சமுதாயத்தின் கீழ்த்தட்டு மக்களுக்கும் சென்று சேரவேண்டுமானால் ஒரு குறிப்பிட்ட நேரம் தொலைக்காட்சியில் ஒதுக்கப்பட வேண்டும் என்பதை மீண்டும் வலியுறுத்தித் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மத்திய அரசு பிரசார் பாரதி அமைப்பிலே மாநில அரசு பிரதிநிதிகளும் அங்கம் வகிக்கச் செய்திட வேண்டும்.

மத்திய அரசு – மாநில அரசுப் பிரதிநிதிகள், பல்கலைக்கழகங்கள் இன்னபிற கலாச்சார அமைப்புகளின் பிரதிநிதிகளும் ஒருங்கிணைந்து ஒரு பொதுவான குழு அமைத்து – பிரசார் பாரதி மூலம் உருவாக்கப்படும் திட்டங்களுக்குத் தக்க ஆலோசனைகள் வழங்கலாம்.

திரைப்படச் சான்றிதழ் வழங்கிடும் குழுவினால் அமைக்கப்படும் மத்திய அரசு தணிக்கைக் குழுவிலே, மாநில அரசுப் பிரதிநிதிகள் இடம் பெறாமலிருப்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலை நீக்கப்பட்டு, மாநில அரசுப் பிரதிநிதிகளும் அக்குழுவிலே இடம் பெறச் செய்திட வேண்டும். சாகித்ய அகாடெமியில் மாநில அரசுப் பிரதிநிதிகள் இடம் பெறச் செய்வது போல – பிராந்திய தணிக்கைக் குழுவிலும் மாநில அரசுப் பிரதி நிதிகள் இடம்பெறுமாறு வகை செய்யவேண்டும்.

தமிழ்நாட்டில், சேலத்தில் அகில இந்திய வானொலி நிலையம் ஒன்று அமைக்கப்பட வேண்டுமென்ற நீண்ட கால கோரிக்கை இன்னும் நிறைவேற்றப்படாமல் உள்ளது. இக்கோரிக்கையை நிறைவேற்ற மாண்புமிகு செய்தி–ஒலிபரப்புத்துறை அமைச்சர் அவர்கள் விரைவிலேயே நடவடிக்கை எடுத்து அப்பகுதியில் வாழும் மக்களின் விருப்பத்தினை நிறைவு செய்வார்கள் என்று நம்புகிறேன்.

### பரிபூரண ஒத்துழைப்பு

மேலும் ஒரு கோரிக்கையினையும் உங்கள் முன் வைக்கிறேன். தமிழ்நாட்டின் மேற்குப் பகுதிகளில் உள்ள ஒசூர் போன்ற இடங்களில் அரசு தொலைக்காட்சி நிலைய நிகழ்ச்சிகள் தெளிவாகத் தெரிவதில்லை. எனவே நடப்பு நிதியாண்டிலேயே ஒசூரில் குறைந்த சக்தி தொலைக்காட்சி (கடப) அஞ்சல் நிலையம் அமைத்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வானொலி – தொலைக்காட்சி மற்றும் பத்திரிகைத் தொடர்புச் சாதனங்கள் குறித்த பல்வேறு செய்திப் பரிமாற்றம் செய்துகொள்ளுவதற்கு, இந்த மாநாடு பெரிதும் உதவுவதாக இருந்தது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுவதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

இது தொடர்பாக மத்திய அரசால் எடுக்கப்படுகின்ற நல்ல திட்டங்களுக்காக, மாண்புமிகு கலைஞர் அவர்களின் நிகரற்ற தலைமையின் கீழ் அமைந்துள்ள தமிழ்நாடு அரசு தமது பரிபூரண ஒத்துழைப்பினைத் தொடர்ந்து வழங்கும் .

*– மத்திய அரசு செய்தி ஒலிபரப்புத்துறை 31–8–1998 அன்று புதுடில்லியில் நடத்திய மாண்புமிகு செய்தி ஒலிபரப்புத்துறை அமைச்சர்களின் 23–வது மாநாட்டின் முன் வைத்த கருத்துரை.*

### இதுதான் காஞ்சி

*காஞ்சியில் பிறந்த "திக்நாதர்" என்பார் புத்த சமயத்தவர்; இந்தியாவில் புத்த சமயத்தைப் பரப்பியவர்.*

*அரச வம்சத்தில் பிறந்து புத்த சமயத்தைச் சார்ந்த போதி தருமன், காஞ்சியைச் சார்ந்தவரேயாவார்; இவர், சீனா வரை சென்று புத்த சமயத்தைப் பரப்பிய பெருமையாளர்.*

□□□

காஞ்சிக்கு அருகில் உள்ள திருப்பருத்திக் குன்றில் இரண்டு சமணக் கோயில்கள் உள்ளன. அக்காலத்தில் சமணர்கள் இங்கே தங்கித் தமது சமயத்தை பரப்பியதாக வரலாறு கூறுகிறது. சமண சமயத்தினர் இப்போதும் அப்பகுதியில் வாழ்ந்து வருகிறார்கள்.

□□□

பெரிய காஞ்சிபுரம் "சிவ காஞ்சி" என்றும், சிறிய காஞ்சிபுரம் விஷ்ணு காஞ்சி என்றும் கூறப்படுகிறது. இதன் மூலம், அந்நாளில் இவ்விரு சமயங்களும் காஞ்சிபுரத்தில் பெற்றிருந்த செல்வாக்கை நாம் உணரலாம்.

□□□

இந்தியாவிலேயே நிகரற்றது காஞ்சிபுரம் பட்டுத்தான்; அதற்கடுத்தது ஆரணிபட்டு. பெரிய இடத்து திருமணங்கள்காஞ்சிபுரம் பட்டினாலேயே பெருமைப் படுகிறது!.

# நிலவொளிப் பள்ளிகள்

காஞ்சிபுரம் நகரம் பட்டுத்தொழிலில் முன்னேறியுள்ள நகரம் ஆகும். இங்கு பட்டு மற்றும் இதரத் தொழில்களில் பணிபுரியும் கல்வியறிவு இல்லாத மற்றும் வயது முதிர்ந்த மாணவ-மாணவிகளின் எண்ணிக்கை அதிகம். இவர்களில் கல்வி அறிவு பெற ஆர்வமுள்ள மாணவ-மாணவிகளை ஊக்குவிக்கும் நிமித்தம் காஞ்சிபுரத்தில் கீழ்க்கண்டுள்ள நான்கு இடங்களில் 'நிலவொளிப் பள்ளிகள்' துவக்கப்பட்டு நல்லமுறையில் நடைபெற்று வருகின்றன.

நிலவுவரும் நேரத்தில் துவக்கப்படும் பள்ளிகள் ஆனதால் இந்தப் பெயர் பொருத்தம் தானே!

மொத்தம் 156 பேர் இதன்மூலம் கல்வி கற்று வருகின்றனர்.

இந்த மாணவர்களுக்குக் கல்வி பயிற்றுவிக்கும் பள்ளிகளில் குழல் விளக்குகள் மற்றும் மின்விசிறிகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. மாணவ, மாணவிகளுக்குப் பாடப்புத்தகங்கள், நோட்டுப்புத்தகங்கள், பலகைகள் மற்றும் எழுதுபொருட்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

இப் பணியில் இருபது பகுதிநேர ஆசிரியர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். எட்டாவது வகுப்பு பயிலும் மாணவர்களில் 151 நபர்களை டிசம்பர் '98ல் நடைபெற உள்ள எட்டாம் வகுப்பு தனித்தேர்வுக்கு அனுப்பிவைப்பதற்கான நபர்வாரி விண்ணப்பங்கள் அரசுத் தேர்வாணைக் கழகத்திற்கு 'அறிவொளி இயக்கத்தின்' மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

காஞ்சிபுரம் நகரத்தின் சுற்றுப்புறப் பகுதியில் உள்ள வயது முதிர்ந்த கல்வி அறிவு பெற ஆர்வமுள்ள மாணவ, மாணவிகளுக்கெனச் செவிலிமேடு பேரூராட்சி எல்லைக்குள் ஒரு நிலவொளிப்பள்ளியைத் துவங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



பிள்ளையார்பாளையம் நிலவொளிப் பள்ளி



கைலாசநாதர் கோயில்

# புராணங்களில் காஞ்சி

யானைகளை நிறையக் கொண்டது சேரநாடு; பசிப்பிணி போக்கும் சோற்று வளத்தைக் கொண்டது சோழநாடு; முத்து வளத்தைக் கொண்டது பாண்டிய நாடு; சான்றோர்களைக் கொண்டு விளங்கியது தொண்டை நாடு. இவ்வாறு அவ்வையார் சேர, சோழ, பாண்டிய, தொண்டை முதலிய நாடுகளின் சிறப்பியல்புகளைத் தனிப்பாடலில் பாடியுள்ளார்.

சான்றோர்கள் நிறைந்து வாழும் தொண்டை நாட்டில் அமைந்துள்ளது காஞ்சி மாநகர். இது மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய முப்பெரும் பெருமைகளைக் கொண்டது. அயோத்தி, வடமதுரை, அரித்துவார், காசி, காஞ்சி, அவந்தி, துவராகை முதலிய ஏழு நகரங்கள் மக்களுக்கு முத்தியைத் தரும் நகரங்கள் என சமயச் சான்றோர் குறிப்பிடுவர். காசிக்கு இணையாக வைத்துப் போற்றப்படும் நகரம் காஞ்சிபுரம். எனவே, 'காஞ்சியில் பிறந்தால் முக்தி; காசியில் இறந்தால் முக்தி' என்ற பழமொழி பிறந்தது.

காஞ்சிபுரம் புனிதத்தலம் என்று புராணங்கள் போற்றுகின்றன. எனவே, புராணங்கள் காஞ்சிபுரத்திற்கு வேறு சிறப்புப் பெயர்களையும் தந்துள்ளன.

பிரம்மதேவன் வழிபட்டதால், "பிரம்மபுரம்'' என்றும், திருமால் வழிபட்டமையால் "விண்டுபுரம்'' என்றும் உமையாள் சிவனை எண்ணித் தவம் இருந்தமையால் "தபோமயம்'' என்றும் சிவபெருமான் உமையாளுக்குக் காட்சித் தந்த இடமாகையால் "சிவபுரம்" என்றும் புராணக் கதைகள் காஞ்சிபுரத்தைக் குறிக்கும் சிறப்புப் பெயர்க்ளைச் சுட்டியுள்ளன. காஞ்சியில் இருக்கின்ற "சக்திபீடம்" முதன்மைப் பீடம் ஆகையால் "ஆதிபீடம்" என்றும் அழைக்கப்படுகிறது.

சங்கப் பாடல்களும் காஞ்சி மாநகரின் சிறப்புகளைக் குறிப்பிட்டுள்ளன. உருத்திரங்கண்ணனார் என்ற சங்கப் புலவர் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட இளந்திரையனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பெரும் பாணாற்றுப்படை பாடியுள்ளார்.

"திருமாலின் உந்தியில் உள்ளதும் நான்முகம் இருக்கப் பெற்றதுமான தாமரைப் பொகுட்டைப் போலும் பழமையும் சிறப்பும் தூய்மையும் கொண்டது இந் நகரமாகும் என்றும், "விழாக்கள் நிறைந்த பழமையான மூதூர்'' என்றும் காஞ்சிமாநகர் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் காஞ்சிபுரம் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. மணிமேகலையில் "கச்சிமாநகர் புக்க காதை" என்ற தனிக் காதையே அமைந்து காஞ்சியின் சிறப்பை எடுத்துக் கூறுகிறது.

இவ்வாறு சங்க இலக்கியங்கள், காப்பியங்கள், புராணங்கள் காஞ்சி மாநகரின் சிறப்பைக் குறிப்பிடுகின்றன. (கார்ஞ்சியில் பல்வேறு சமயத்தவர் வாழ்ந்து வந்தனர்) பௌத்தம், சமணம், சைவம், வைணவம் ஆகிய சமயங்கள், பல்வேறு காலகட்டங்களில் காஞ்சியில் சிறந்து விளங்கின. சீனப் பயணியான "யுவான்சுவாங்" அசோகர் காலப் புத்தர் தூபி காஞ்சியில் இருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார். ஆயின் அந்தப் புத்த

**ச.க.இராமர் இளங்கோ,**
இயக்குநர்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

> உச்சிக்கு மிஞ்சின நேரமும் இல்லை
> கச்சிக்கு மிஞ்சின பதியும் இல்லை.
>
> **(கச்சி : காஞ்சி)**

தூபி இன்று இல்லை. தொல்பொருள் ஆய்வுத் துறையினர் நடத்திய அகழ்வாராய்ச்சியில் புத்த தூபி இருந்ததற்கான தடயம் உள்ளது என்றும் சுட்டியுள்ளனர்.

சைவ சமயப் பிரிவினராக இருந்த கபாலிகர், பாசுபதர் ஆகியோர் இந்த நகரங்களில் தங்கி, தங்கள் சமயக் கருத்துக்களைப் பரப்பினர். தேவாரம் பாடிய சுந்தரர், திருநாவுக்கரசர், சம்பந்தர் ஆகிய மூவரும் பெரிய புராணத்தைப் பாடிய சேக்கிழாரும் காஞ்சிபுரத்தைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளனர்.

பல்வேறு வகையாகப் பிரிந்திருந்த இந்து சமயத்தை ஒன்றாக்கிய ஆதிசங்கரர் காஞ்சிக்கு வந்துள்ளார். அதன் விளைவாக "காமகோடி" மடம் உருவாயிற்று, வைணவ சமயத்திற்குப் புதுநெறியை வகுத்துத் தந்த இராமானுசர் இங்கு தங்கி மடங்களைத் தோற்றுவித்தார்.


கல்வியில் கரையில்லாத, காஞ்சி மாநகரில் வடமொழிக்கும், தமிழ் மொழிக்கும் பெருமை சேர்ந்த கவிஞர்கள் தோன்றியுள்ளனர். மகேந்திர வர்மன் ஆட்சிக் காலத்தில் வடமொழி செல்வாக்குப் பெற்று விளங்கியது. "காவியதரிசனம்" என்ற வடமொழி நூலைத் "தண்டியலங்காரம்" என்ற பெயரில் தமிழில் எழுதிய தண்டி என்பவர் இந்த நகரத்தில் வாழ்ந்தவராவார். பாரவி என்ற கவிஞர் வடமொழி நூல்கள் பலவற்றை எழுதியுள்ளார். மகேந்திரவர்மன் வடமொழியில் "மத்த விலாசப் பிரகசனம்" என்ற நூலை எழுதியுள்ளார்.

காஞ்சி மாநகரத்தில் வாழ்ந்த வடமொழி அறிஞர்களால் வடமொழி ஏற்றம் பெற்றது. வடமொழி வரலாற்றில் காஞ்சியின் பங்கு சிறப்பானது. பதி, பசு, பாசம் என்ற சைவ சித்தாந்தக் கருத்துக்களை மக்கள் அனைவரும் எளிதில் புரியும்படி செய்த சிவஞான முனிவர் "காஞ்சி புராணம்" என்ற நூலை எழுதினார். காஞ்சி மாநகர் சிறப்புகளை இந்நூல் வழி விளக்கியுள்ளார்.

காஞ்சியில் வாழ்ந்த, "சிவஞான முனிவரின் மாணவரான கச்சியப்ப முனிவர் "கந்தபுராணம்" என்னும் நூலையும், அரங்கநாத முதலியார் "கச்சிக் கலம்பகம்" நூலையும் பாடியுள்ளனர். காஞ்சியின் பெருமையை முழுமையாக விளக்குவதை முதன்மையாகக் கொண்டு மேற்குறித்த நூல்கள் தோன்றின.

பட்டினத்தார் ஏகாம்பரநாதரைப் பாட்டுடைத் தலைவராக்கி "திருவேகம்பர் திருவந்தாதி" என்ற நூலைப் படைத்துள்ளார். 20 ஆம் நூற்றாண்டில் தமிழ் மக்கள் மத்தியில் மொழி இன உணர்ச்சியையும் சமூக மாற்றத்தையும் உருவாக்கிய பேரறிஞர் அண்ணா அவர்கள் இங்குதான் பிறந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

காஞ்சிபுரத்தில் 82 கோயில்கள் உள்ளன. கோயில்களைச் சுற்றி நகரம் அமைந்துள்ளது. காஞ்சியில் ஏகாம்பரநாதர் கோயில், காமாட்சி அம்மன் கோயில், வரதராசப் பெருமாள் கோயில் முதலியன குறிப்பிடத்தக்கன. இவற்றில் "தேசமெல்லாம் புகழ்ந்தாடுங் கச்சித்



ஏகாம்பரேஸ்வரர் கோயில்

திருவேகம் பன்செம்பொற் கோயில்" என்று மாணிக்கவாசகரால் பாடப் பட்ட பெருமையுடைய "காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயில் குறிப்பிடத் தக்கது.

"காஞ்சி" என்ற சொல்லுக்குரிய பொருளை ஆய்வாளர் ரத்தினம் என்பார் பின்வருமாறு ஆராய்ந் துள்ளார்:

1) கச்சி என்பது காஞ்சிபுரத்தின் மருஉ ஆகும். காஞ்சி என்பது வடமொழியில் கஞ்சி எனத் திரிந்து, தமிழில் "கச்சி" என வழக்கில் வந்தது.

2) காஞ்சி என்னும் சொல்லுக்கு மகளிர் இடையில் அணியும் மேகலை என்பது பொருள்.

3) காஞ்சி எனும் திணைக்கு நிலையாமை என்பது பொருள். "நிலையாமைக் கருத்துக்களைக் கூறும் தத்துவவாணர்கள் நிறைந்த நகரமாகையால் இப்பெயர் பெற்றது".

4) காஞ்சிபுரத்தை "க - பிரமன், அஞ்சித்தல் - பூசித்தல், புரம் - நகரம் எனப் பிரித்து நோக்கினால் பிரம்மனால் பூசிக்கப்பட்ட நகரம் ஆகையால் காஞ்சிபுரம் எனப் பெயர் பெற்றது.

5) பூவரசு மரங்களைக் காஞ்சி மரங்கள் என்று நம் முன்னோர் கூறினர். காஞ்சிபுரத்தில் பூவரசு மரங்கள் நிறைந்து காணப் படுகின்றன.

இவ்வாறு கூறப்பட்ட ஐந்து பெயர்க் காரணங்களில் இறுதி யாகச் சுட்டப்படும் காஞ்சி, மரங்கள் (பூவரசு) நிறைந்த ஊர் ஆகையால் இவ்வூர் காஞ்சிபுரம் எனப் பெயர் பெற்றது என்று ஆய்வாளர் ரத்தினம் முடிவு' கூறியிருப்பது ஏற்புடையதாக அமைகிறது.

இறைவன் எங்கும் நிறைந்தவர், நிலம், நீர், காற்று, நெருப்பு, வான் முதலிய ஐந்து பூதங்களில் நிறைந்து காணப்படுகிறார். தமிழகத்தில் உள்ள ஐந்து சிவன் கோயில்கள் தத்துவ நெறியில் அமைந்த இக்கருத்தை விளக்குகின்றன.

"ஏகாம்பரநாதர் கோயில் நிலம் (மணல்) தலமாகவும், திரு வானைக்கா கோயில் நீர்த் தலமாகவும், திருவண்ணா மலைக் கோயில் நெருப்புத் தலமாகவும், திருக்காளத்திக் கோயில் காற்றுத் தலமாகவும், தில்லை நடராசர் கோயில் வானத் தலமாகவும் விளங்குகின்றன" என்று சொல் கிறார்கள்.

ஒளியின் பிம்பங்களாக நாம் திகழுகிறோம். நமது பண்டைப் பெருமைகளை நாம் உணர வேண்டும். நம்முடைய பரம்பரை பெரியது. நமது தமிழினம், மானமே பெரிதென மதித்த இனம், எவ்வுயிரையும் தன்னுயிர்போல் காத்து வந்தவன் தமிழன். பிறரை எதிர்பார்த்து வாழாதவன் தமிழன். பிறருக்குப் புறமுதுகு காட்டி ஓடாதவன் தமிழன். இமயத்தில் புலி பொறித்து, கடாரத்தை வென்று, ரோம் நகருக்குப் பொன்னாடை விற்றவன் தமிழன்.

ஆதாரம்: **அண்ணாவின் சொற்செல்வம்** நூலிலிருந்து.



கைலாசநாதர் கோயில் சிற்பங்கள்

ஏகாம்பரம் என்ற சொல்லுக்குப் பொருள் கூறுகையில் "ஒற்றை மாமரத்தடியில் சிவபெருமான் அமர்ந்திருப்பதால் அவருக்கு ஏகாம்பரநாதர்" என்று பெயர் வந்தது என்று கூறப்படுகிறது. பழங் காலத்தில் இறைவனை மக்கள் மரத்தடியில் வழிபட்டு வந்தனர். பின்பு சிலை அமைத்து வழிபட்டனர். இவ் உண்மையினை உணர்த்தும் வகையில் ஏகாம்பரநாதர் பெயர் விளங்குகிறது.


சிவஞான முனிவர் இயற்றிய காஞ்சிப் புராணத்தில் "கச்சி மயானம்" பற்றி ஒரு கதை உள்ளது. அக்காலத்தில் பண்டாசுரன் என்னும் அரக்கன் மக்களின் வீரியத்தை உண்ணும் வரத்தைப் பிரம்மனிடம் பெற்றான். பண்டாசுரன் தொல்லை யால் துன்புற்ற மக்கள் தேவர், அசுரர் முதலியோர் சிவனை வழிபட்டு அவ்வரக்கனை அழிக்க வேண்டினர். சிவபெருமான் பண்டா சுரன் உட்பட எல்லோரையும் யாக குண்டலத்தில் போட்டு அழித்தார். பின்னர் இவ்வுலகு தோன்ற இலளிதா தேவியைப் படைத்தார். சிவஞான முனிவர் குறிப்பிட்ட "கச்சி மயானம்" ஏகாம்பரநாதர் கோயிலில் இடம் பெற்றுள்ளது.

– முனைவர் சி.இரத்தினம் எழுதிய 'காஞ்சிபுரம் ஏகாம்பர நாதர் கோவில் – ஓர் ஆய்வு' நூலின் அணிந்துரையிலிருந்து.

**நாலந்தாப் பல்கலைக்கழகத் தலைவராக இருந்த தருமபாலர், காஞ்சிபுரத்தைச் சேர்ந்தவரேயாவார்!**

# செவ்வாழை

## — அறிஞர் அண்ணா



செங்கோடன், அந்தச் செவ்வாழைக் கன்றைத் தன் செல்லப் பிள்ளைபோல் வளர்த்து வந்தான். இருட்டுகிற நேரம் வீடு திரும்பினாலும்கூட, வயலிலே அவன்பட்ட கஷ்டத்தைக்கூடப் பொருட்படுத்தாமல், கொல்லைப்புறம் சென்று, செவ்வாழைக் கன்றைப் பார்த்துவிட்டு, தண்ணீர் போதுமானபடி பாய்ச்சப்பட்டிருக்கிறதா என்று கவனித்து விட்டுத்தான், தன் நான்கு குழந்தைகளிடமும் பேசுவான். அவ்வளவு பிரேமையுடன் அந்தச் செவ்வாழையை அவன் வளர்த்து வந்தான். கன்று வளர வளர அவன் களிப்பும் வளர்ந்தது. செவ்வாழைக்கு நீர் பாய்ச்சும் போதும், கல் மண்ணைக் கிளறிவிடும்போதும், அவன் கண்கள் பூரிப்படையும் மகிழ்ச்சியால். கரியனிடம் — அவனுடைய முதல் பையன் காட்டியதைவிட அதிகமான அன்பும், அக்கரையும் காட்டுகிறாரே என்று ஆச்சரியம், சற்றுப் பொறாமைகூட ஏற்பட்டது, குப்பிக்கு.

"குப்பி! ஏதாச்சும் மாடு கீடு வந்து வாழையை மிதிச்சிடப் போகுது. ஜாக்ரதையாக் கவனிச்சுக்கோ. அருமையான கன்று — ஆமாம், செவ்வாழைன்னா சாமான்யமில்லே. குலை, எம்மாம், பெரிசா இருக்கும் தெரியுமோ? பழம், வீச்சு வீச்சாகவும் இருக்கும். உருண்டையாகவும் இருக்கும் — ரொம்ப ருசி — பழத்தைக் கண்ணாலே பார்த்தாக்கூடப் போதும்; பசியாறிப் போகும்" என்று குப்பியிடம் பெருமையாகப் பேசுவான் செங்கோடன்.

அப்பா சொல்லுவதை நாலு பிள்ளைகளும் ஆமோதிப்பார்கள் — அதுமட்டுமா — பக்கத்துக் குடிசை, எதிர்க் குடிசைகளிலே உள்ள குழந்தைகளிடமெல்லாம், இதே பெருமையைத்தான் பேசிக் கொள்வார்கள். உழவர் வீட்டுப் பிள்ளைகள், வேறெ எதைப் பற்றிப் பேசிக் கொள்ள முடியும் — அப்பா வாங்கிய புதிய மோட்டாரைப் பற்றியா, அம்மாவின் வைரத்தோடு பற்றியா, அண்ணன் வாங்கிவந்த ரேடியோவைப் பற்றியா, எதைப்பற்றி பேசமுடியும்? செவ்வாழைக் கன்றுதான், அவர்களுக்கு, மோட்டார், ரேடியோ, வைரமாலை, சகலமும்!

மூத்த பயல் கரியன், "செவ்வாழைக் குலை தள்ளியதும், ஒரு சீப்புப் பழம் எனக்குத்தான்' என்று சொல்லுவான்.

"ஒண்ணுக்கூட எனக்குத் தரமாட்டாயடா — நான் உனக்கு மாம்பழம் தந்திருக்கிறேன்? கவனமிருக்கட்டும் — வறுத்த வேர்கடலை கொடுத்திருக்கிறேன்; கவனம் இருக்கட்டும்" — என்று எதிர்க் குடிசை எல்லப்பன் கூறுவான்...

கரியனின் தங்கை, காமாட்சியோ, கண்ணைச்

சிமிட்டிக்கொண்டே "உனக்கு ஒரு சீப்புன்னா, எனக்கு இரண்டு தெரியுமா? அம்மாவைக் கேட்டு ஒரு சீப்பு, அப்பாவைக் கேட்டு ஒரு சீப்பு" என்று குறும்பாகப் பேசுவாள்.

மூன்றாவது பையன் முத்து, "சீப்புக் கணக்குப் போட்டுக்கிட்டு ஏமாந்து போகாதிங்க – ஆமா – பழமாவதற்குள்ளே யாரார் என்னென்ன செய்துவிடுவாங்களோ, யாருகண்டாங்க" என்று சொல்லுவான் – வெறும் வேடிக்கைக்காக அல்ல – திருடியாவது மற்றவர்களைவிட அதிகப்படியான பழங்களைத் தின்றே விடுவது என்று தீர்மானித்தே விட்டான்.

செங்கோடனின் செல்லப் பிள்ளையாக வளர்ந்து வந்தது செவ்வாழை. உழைப்பு அதிகம் வயலில். பண்ணை மானேஜரின் ஆர்ப்பாட்டம் அதிகம். இவ்வளவையும் சகித்துக் கொள்வான் – செவ்வாழையைக் கண்டதும் சகலமும் மறந்து போகும். குழந்தைகள் அழுதால், செவ்வாழையைக் காட்டித்தான் சமாதானப்படுத்துவான்! துஷ்டத்தனம் செய்கிற குழந்தையை மிரட்டவும், செவ்வாழையைத்தான் கவனப்படுத்துவான்! குழந்தைகள், பிரியமாகச் சாப்பிடுவார்கள், செவ்வாழையை என்ற எண்ணம் செங்கோடனுக்கு பண்ணை வீட்டுப் பிள்ளைகள் ஆப்பிள், திராட்சை தின்ன முடிகிறது – கரியனும் முத்துவும், எப்படி விலை உயர்ந்த அந்தப் பழங்களைப் பெற முடியும்? செவ்வாழையைத் தந்து தன் குழந்தைகளை குதூகலிக்கச் செய்ய வேண்டும் என்ற எண்ணந்தான், செங்கோடனை, அந்தச் செவ்வாழைக் கன்றைச் செல்லமாக வளர்க்கும்படிச் செய்தது. உழவன் செங்கோடனிடம், எவ்வளவு பாடுபட்டாலும், குழந்தைகளுக்குப் பழமும் பட்சணமும் வாங்கித் தரக்கூடிய 'பணம்' எப்படிச் சேர முடியும்? கூலி நெல், பாதி வயிற்றை நிரப்பவே உதவும் – குப்பியின் 'பாடு' குடும்பத்தின் பசியைப் போக்கக் கொஞ்சம் உதவும். இப்படிப் பிழைப்பு! பலனில் மிகப்பெரும் பகுதியோ, பண்ணைக்குச் சேர்ந்துவிடுகிறது. இந்தச் செவ்வாழை ஒன்றுதான் அவன் சொந்தமாக மொத்தமாக பலன் பெறுவதற்கு உதவக்கூடிய, உழைப்பு! இதிலே பங்கு பெற, பண்ணையார் குறுக்கிட முடியாதல்லவா? அவருக்காகப் பாடுபட்ட நேரம் போக, மிச்சமிருப்பதிலே, அலுத்துப் படுக்க வேண்டிய நேரத்திலே பாடுபட்டு, கண்ணைப் போல வளர்த்துவரும், செவ்வாழை! இதன் முழுப் பயனும் தன் குடும்பத்துக்கு! இது ஒன்றிலாவது தான் பட்ட பாட்டுக்கு உரிய பலனைத் தானே பெற முடிகிறதே என்ற சந்தோஷம் செங்கோடனுக்கு.

இவ்வளவும் அவன் மனதிலே, தெளிவாகத் தோன்றிய கருத்துக்கள் அல்ல. புகைப்படலம் போல, அந்த எண்ணம் தோன்றும், மறையும் – செவ்வாழையப் பார்க்கும்போது பூரிப்புடன் பெருமையும் அவன் அடைந்ததற்குக் காரணம் இந்த எண்ணந்தான்.

கன்று வளர்ந்து கள்ளங்கபடமின்றி, செங்கோடனுக்குக் களிப்பும் வளர்ந்தது. செங்கோடனின் குழந்தைகளுக்கு இப்போது, விளையாட்டு இடமே, செவ்வாழை இருந்த இடந்தான்! மலரிடம் மங்கையருக்கும், தேனிடம் வண்டுகளுக்கும் ஏற்படும் பிரேமைபோல, அந்தக் குழந்தைகளுக்குச் செவ்வாழையிடம் பாசம் ஏற்பட்டு விட்டது.

"இன்னும் ஒரு மாசத்திலே குலை தள்ளுமாப்பா?" கரியன் கேட்பான், ஆவலுடன், செங்கோடனை.

'இரண்டு மாசமாகும்டா கண்ணு" என்று செங்கோடன்



செங்கோடனின் கண்களுக்கு அந்தச் செவ்வாழைக் குலை, முத்துவிஜயாவின் வைரமாலையை விட விலை மதிப்புள்ளதாகத்தான் தோன்றிற்று. குலை முற்ற முற்ற, செங்கோடனின் குழந்தைகளின் ஆவலும், சச்சரவும், பங்குத் தகராறும், அப்பாவிடமோ அம்மாவிடமோ 'அப்பீல்' செய்வது ஓங்கி வளரலாயிற்று. "எப்போது பழமாகும்?" என்று கேட்பாள் பெண். 'எத்தனை நாளைக்கு மரத்திலேயே இருப்பது?" என்று கேட்பான் பையன். செங்கோடன், பக்குவமறிந்து குலையை வெட்டி, பதமாகப் பழுக்க வைத்துப் பிள்ளைகளுக்குத் தர வேண்டுமென்று எண்ணிக் கொண்டிருந்தான். உழைப்பின் விளைவு! முழுப் பலனை நாம் பெறப் போகிறோம் – இடையே தரகர் இல்லை – முக்காலே மூன்று வீசம் பாகத்தைப் பறித்துக் கொள்ளும் முதலாளி இல்லை. உழைப்பு நம்முடையது என்றாலும் உடைமை பண்ணையாருடையது – அவர் எடுத்துக் கொண்டது போக மீதம்தானே தனக்கு என்று, வயலில் விளையும் செந்நெல்லைப் பற்றி எண்ண வேண்டும் – அதுதானே முறை! ஆனால் இந்தச் செவ்வாழை அப்படி அல்ல! உழைப்பும் உடைமையும் செங்கோடனுக்கே சொந்தம்.

இரண்டு நாளையில், குலையை வெட்டிவிடத் தீர்மானித்தான் – பிள்ளைகள் துள்ளின

சந்தோஷத்தால். மற்ற உழவர் வீட்டுப் பிள்ளைகளிடம் 'சேதி' பறந்தது – பழம் தர வேண்டும் என்று சொல்லி, அவலோ, கடலையோ, கிழங்கோ, மாம்பிஞ்சோ, எதை எதையோ 'அச்சாரம்' கொடுத்தனர் பல குழந்தைகள், கரியனிடம்.

பாடுபட்டோம், பலனைப் பெறப் போகிறோம். இதிலே ஏற்படுகிற மகிழ்ச்சிக்கு ஈடு எதுவும் இல்லை. இதைப் போலவே, வயலிலும் நாம் பாடுபடுவது நமக்கு முழுப்பயன் அளிப்பதாக இருந்தால் எவ்வளவு இன்பமாக இருக்கும்! செவ்வாழைக்காக நாம் செலவிட்ட உழைப்பு, பண்ணையாரின் நிலத்துக்காகச் செலவிட்ட உழைப்பிலே, நூற்றுக்கு ஒரு பாகம்கூட இராது – ஆனால் உழைப்பு நம்முடையதாகவும் வயல் அவருடைய உடைமையாகவும் இருந்ததால் பலனை அவர் அனுபவிக்கிறார் பெரும் பகுதி. இதோ, இந்தச் செவ்வாழை நம்ம கொல்லையிலே நாம் உழைத்து வளர்த்தது – எனவே பலன் நமக்குக் கிடைக்கிறது – இதுபோல, நாம் உழைத்துப் பிழைக்க நம்முடையது என்று ஒரு துண்டு வயல் இருந்தால், எவ்வளவு இன்பமாக இருக்கும். அப்படி ஒரு காலம் வருமா! உழைப்பவனுக்குத்தான் நிலம் சொந்தம் – பாடுபடாதவன் பண்ணையாராக இருக்கக் கூடாது என்று சொல்லும் காலம் எப்போதாவது வருமா என்றெல்லாம் கூட, இலேசாகச் செங்கோடன் எண்ணத் தொடங்கினான். செவ்வாழை இது போன்ற சித்தாந்தங்களைக் கிளறிவிட்டது அவன் மனதில். குழந்தைகளுக்கோ நாக்கிலே நீர் ஊறலாயிற்று.

செங்கோடன் செவ்வாழைக் குலையைக் கண்டு களித்திருந்த சமயம், பண்ணை பரந்தாமர், தமது மருமகப் பெண் முத்து விஜயத்தின் பிறந்தநாள் விழாவை விமரிசையாகக் கொண்டாட ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தார். அம்பிகை கோயில் அபிஷேக ஆராதனை செய்வதற்காக, 'ஐயரிடம்' சொல்லிவிட்டார். கணக்கப் பிள்ளையைக் கூப்பிட்டு, 'பட்டி' தயாரிக்கச் சொன்னார். பல பண்டங்களைப் பற்றிக் குறிப்பு எழுதும்போது, 'பழம்' தேவை என்று தோன்றாமலிருக்குமா? 'இரண்டு சீப்பு வாழைப்பழம்' என்றார் பண்ணையார்.



ஏனுங்க பழம் – கடையிலே நல்ல பழமே இல்லை – பச்சை நாடாத்தான் இருக்கு" என்று இழுத்தான் சுந்தரம், கணக்கப்பிள்ளை.

"சரிடா, அதிலேதான் இரண்டு சீப்பு வாங்கேன்?– வேறெ நல்ல பழமா எங்கே இருக்கு!" என்று பண்ணையார் சொல்லி முடிப்பதற்குள், சுந்தரம், "நம்ம செங்கோடன் கொல்லையிலே, தரமா ஒரு செவ்வாழைக் குலை இருக்குதுங்க – அதைக் கொண்டுக்கிட்டு வரலாம்" என்றான். 'சரி' என்றார் பண்ணையார்.

செங்கோடனின் செவ்வாழைக்குலை! அவனுடைய இன்பக் கனவு!! உழைப்பின் விளைவு!! குழந்தைகளின் குதூகலம்!!


அதற்கு மரண ஓலை தயாரித்துவிட்டான் சுந்தரம்!

எத்தனையோ பகல் பார்த்துப் பார்த்து, செங்கோடனின் குடும்பம் பூராவும் பூரித்தது அந்தக் குலையை! அதற்குக் கொலைகாரனானான் சுந்தரம். மகிழ்ச்சி, பெருமை, நம்பிக்கை இவைகளைத் தந்து வந்த, அந்தச் செவ்வாழைக் குலைக்கு வந்தது ஆபத்து.

தெருவிலே, சுந்தரமும் செங்கோடனும் பேசும்போது குழந்தைகள், செவ்வாழையைப் பற்றியதாக இருக்கும் என்று எண்ணவே இல்லை! செங்கோடனுக்குத் தலை கிறுகிறுவென்ற சுற்றிற்று – நாக்குக் குழறிற்று – வார்த்தைகள் குபுகுபுவென்று கிளம்பி, தொண்டையில் சிக்கிக் கொண்டன.

மாட்டுப் பொண்ணுக்கு பிறந்த நாள் பூஜை – என்று காரணம் காட்டினான் சுந்தரம். என்ன

செய்வான் செங்கோடன்! என்ன சொல்வான்? அவன் உள்ளத்திலே, வாழையோடு சேர்ந்து வளர்ந்த ஆசை – அவன் குழந்தைகளின் நாக்கில் நீர் ஊறச் செய்த ஆசை – இன்று, நாளை, என்று நாள் பார்த்துக் கொண்டிருந்த ஆவல் – எனும் எதைத்தான் சொல்ல முடியும்? கேட்பவர் பண்ணை பரந்தாமர்! எவ்வளவு அல்பனடா, வாழைக் குலையை அவர் வாய் திறந்து, உன்னை ஒரு பொருட்டாக மதித்துக் கேட்டனுப்பினால் முடியாது என்று சொல்லிவிட்டாயே! அவருடைய உப்பைத் தின்று பிழைக்கிறவனுக்கு, இவ்வளவு நன்றி கெட்டதனமா? கேவலம், ஒரு வாழைக் குலை! அவருடைய அந்தஸ்துக்கு, இது ஒரு பிரமாதமா! – என்று ஊர் ஏசுகிறது போல், அவன் கண்களுக்குத் தெரிகிறது.



'அப்பா! ஆசை காட்டி மோசம் செய்யாதே! நான் கூடத்தான் தண்ணீர் பாய்ச்சினேன் – மாடு மிதித்துவிடாதபடி பாதுகாத்தேன் – செவ்வாழை ரொம்ப ருசியாக இருக்கும். கல்கண்டுபோல இருக்கும் என்று நீதானே என்னிடம் சொன்னாய். அப்பா! தங்கச்சிக்குக்கூட, 'உசிர்' அந்தப் பழத்திடம். மரத்தை அண்ணாந்து பார்க்கும்போதே, நாக்கிலே நீர் ஊறும். எங்களுக்குத் தருவதாகச் சொல்லிவிட்டு, இப்பொழுது ஏமாற்றுகிறாயே. நாங்கள் என்னப்பா, உன்னை கடையிலே காசு போட்டுத் திராட்சை, கமலாவா வாங்கித் தரச் சொன்னோம. நம்ம கொல்லையிலே நாம் வளர்த்ததல்லவா!" – என்று அழுகுரலுடன் கேட்கும் குழந்தைகளும், 'குழந்தைகளைத் தவிக்கச் செய்கிறாயே, நியாயமா?' என்று கோபத்துடன் கேட்கும் மனைவியும், அவன் மனக்கண்களுக்குத் தெரிந்தனர்! எதிரே நின்றவரோ, பண்ணைக் கணக்கப்பிள்ளை! அரிவாள் இருக்குமிடம் சென்றான். '[illegible] குலையை வெட்டப் போறாரு – செவ்வாழைக்குலை' என்று ஆனந்தக் கூச்சலிட்டுக் கொண்டு, குழந்தைகள் கூத்தாடின. செங்கோடனின் கண்களிலே நீர்த்துளிகள் கிளம்பின! குலையை வெட்டினான் – உள்ளே கொண்டு வந்தான் – அரிவாளைக் கீழே போட்டான் – 'குலையைக் கீழே வை அப்பா, தொட்டுப் பார்க்கலாம்' என்று குதித்தன குழந்தைகள். கரியனின் முதுகைத் தடவினான் செங்கோடன். "கண்ணு! இந்தக் குலை, நம்ம ஆண்டைக்கு வேணுமாம் கொண்டு போகிறேன் – அழாதிங்க – இன்னும் ஒரு மாசத்திலே, பக்கத்துக் கண்ணு மரமாகிக் குலை தள்ளும். அது உங்களுக்குக் கட்டாயமாகக் கொடுத்து விடறேன்" என்று கூறிக்கொண்டே, வீட்டை விட்டுக் கிளம்பினான். குழந்தையின் அழுகுரல், மனதைப் பிளப்பதற்குள்.

செங்கோடன் குடிசை அன்று பிணம் விழுந்த இடம் போலாயிற்று. இரவு நெடுநேரத்திற்குப் பிறகுதான் செங்கோடனுக்குத் துணிவு பிறந்தது வீட்டுக்குவர! அழுது அலுத்துத் தூங்கிவிட்ட குழந்தைகளைப் பார்த்தான். அவன் கண்களிலே, குபுகுபுவெனக் கண்ணீர் கிளம்பிற்று. துடைத்துக் கொண்டு, படுத்துப் புரண்டான் – அவன் மனதிலே ஆயிரம் எண்ணங்கள். செவ்வாழையை, செல்லப் பிள்ளைபோல் வளர்த்து என்ன பலன்....!

அவருக்கு அது ஒரு பிரமாதமல்ல – ஆயிரம் குலைகளையும் அவர் நினைத்த மாத்திரத்தில் வாங்க முடியும்! ஆனால் செங்கோடனுக்கு...? அந்த ஒரு குலையைக் காண அவன் எவ்வளவு பாடுபட்டான் – எத்தனை இரவு அதைப் பற்றி இன்பமான கனவுகள் – எத்தனை ஆயிரம் தடவை, குழந்தைகளுக்கு ஆசை காட்டியிருப்பான்! உழைப்பு எவ்வளவு! அக்கரை எத்துணை! எல்லாம் ஒரு நொடியில் அழிந்தன!

நாலு நாட்களுக்குப் பிறகு, வெள்ளித் தட்டிலே, ஒரு சீப்பு செவ்வாழைப் பழத்தை வைத்துக் கொண்டு, அன்ன நடை நடந்து

அழகுமுத்து விஜயா, அம்பிகை ஆலயத்துக்குச் சென்றாள்.

நாலு நாட்கள் சமாதானம் சொல்லியும், குழந்தைகளின் குமுறல் ஓயவில்லை. கரியன் ஒரே பிடிவாதம் செய்தான், ஒரு பழம் வேண்டுமென்று. குப்பி, பழங்காலத்திலிருந்து ஒரு காலணாவை எடுத்துக் கொடுத்தனுப்பினாள், ஒரு பழம் வாங்கிக்கொள்ளச் சொல்லி. பறந்தோடினான் கரியன்.

கடையிலே செவ்வாழைச் சீப்பு, அழகாகத் தொங்கிக் கொண்டிருந்தது. கணக்கப்பிள்ளை, பண்ணை வீட்டிலே இருந்து நாலு சீப்பை முதலிலேயே தீர்த்துவிட்டான் - அவன் விற்றான் கடைக்காரனுக்கு - அதன் எதிரே, ஏக்கத்துடன் நின்றான் கரியன்! "பழம், ஒரு அணாடா, பயலே - காலணாவுக்குச் செவ்வாழை கிடைக்குமா - போடா" என்று விரட்டினான், கடைக்காரன். கரியன் அறிவானா, பாபம், தன் கொல்லையிலே இருந்த செவ்வாழை, இப்போது கடையில் கொலுவீற்றிருக்கிறது என்ற விந்தையை! பாபம்! எத்தனையோ நாள், அந்தச் சிறுவன், தண்ணீர் பாய்ச்சினான், பழம் கிடைக்குமென்று! பழம் இருக்கிறது, கரியனுக்கு எட்டாத இடத்தில்! விசாரத்தோடு வீட்டிற்கு வந்தான், வறுத்த கடலையை வாங்கிக் கொரித்துக் கொண்டே, செங்கோடன். கொல்லைப் புறத்திலிருந்து வெளியே வந்தான், வாழை மரத்துண்டுடன்.

"ஏம்பா! இதுவும் பண்ணை வீட்டுக்கா?" என்று கேட்டான் கரியன்.

"இல்லேடா, கண்ணு! நம்ம பார்வதி பாட்டி செத்துப் போயிட்டா, அந்தப் பாடையிலே கட்ட" என்றான் செங்கோடன்.

அலங்காரப் பாடையிலே, செவ்வாழையின் துண்டு!

பாடையைச் சுற்றி அழுகுரல்!

கரியனும், மற்றக் குழந்தைகளும் பின்பக்கம்.

கரியன் பெருமையாகப் பாடையைக் காட்டிச் சொன்னான். "எங்க வீட்டுச் செவ்வாழைடா", என்று.

"எங்க கொல்லையிலே இருந்த செவ்வாழைக் குலையைப் பண்ணை வீட்டுக்குக் கொடுத்துவிட்டோம் - மரத்தை வெட்டி "பாடையிலே கட்டிவிட்டோம்" என்றான் கரியன்.

பாபம், சிறுவன்தானே!! அவன் என்ன கண்டான், செங்கோடனின் செவ்வாழை, தொழிலாளர் உலகிலே சர்வ சாதாரணச் சம்பவம் என்பதை.

●

**தமிழக அரசால் ரூ.37.5 இலட்சம் செலவில் காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயில் சீரமைப்புப் பணிகள் நடைபெறுவதை மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் பார்வையிடுதல்.**



# சட்டமன்றத்தில் அண்ணா!

– சி.ஈ.எஸ்.பெருமாள்

*(1959ல், வார இதழ் ஒன்றில்* **'இவர்தான் எங்கள் எம்.எல்.ஏ.,'** *கட்டுரைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற கட்டுரை இது.)*

*"அன்பறிவு தேற்றம் அவாவின்மை இந்நான்கும்*
*நன்குடையான் கட்டே தெளிவு"* – **திருக்குறள் 513**

கோவில் மலிந்த காஞ்சிபுரம். பக்தியின் பிறப்பிடம் மட்டுமல்ல; கனன்றெழுந்து வந்த புலிகேசி புல்லென மாய்க்கப்பட்ட புகலிடம் மட்டுமல்ல; அரசியல் வானிலே விழிப்பை ஏற்படுத்திய சிறப்பிடமும் ஆகும். காஞ்சியின் வானளாவிய கோபுரங்களையும், வையகமெங்கும் புகழ் பரப்பிவரும் எங்கள் எம்.எல்.ஏ., திருசிஎன்.அண்ணாதுரை அவர்களையும் நான் மட்டுமல்ல; மற்ற எவராலும் மறக்கமுடியாது.



ஒரு எம்.எல்.ஏ.வுக்கு உரிய தகுதி, திறமை, நேர்மை, ஒழுக்கம் ஆகிய அத்தனையும் அமையப் பெற்றவரே எங்கள் பிரதிநிதி, சட்டசபையில் அவர் குரலுக்கு 'மவுசு' – மந்திரிகள் பாராட்டு உண்டு.

## குணங்கள்

உருவம் குள்ளம் என்றாலும், உள்ளம் பரந்தது; படித்துப் பட்டம் பெற்று, பாட்டாளிகளின் கண்ணீரைத் துடைக்கும் பொதுப்பணியில் ஈடுபாடு கொண்ட வரலாற்றை நன்கறிவோம். "மக்களிடையே பழகி, நல்ல பல பணிகளை ஏற்று நடாத்திய கழகம், தி.மு.கழகம். நான் அந்தக் கழகத்தினன்; அதன் சார்பில் நிற்கிறேன்!" என்ற அவருடைய தேர்தல் அறிக்கையில், கட்சித் தலைவன் என்ற தருக்கையோ, தற்பெருமையையோ காட்டாத பணிவார்ந்த சொற்களே எங்களைக் கவர்ந்தவை.

எதையும் அன்பாக – அமைதியாக – ஆனால் ஆணித்தரமாகப் பேசும் குழந்தை உள்ளம், அவருடையது. பிறர்

அஞ்சுகின்ற நுணுக்கமான பிரச்சினைகளில் கலந்துகொண்டு, புரியும் விதத்தில், "பிட்டுப் பிட்டு"க் கூறுவதில் அவருக்கு இணை அவர்தான்.

மாற்றுக் கட்சிக்காரர்களின், 'சவுக்கடி'களுக்கு அவர் கூறும் பதிலடியிலிருந்தே அவர் நெஞ்சுறுதியை நிர்ணயிக்கலாம். "போற்றுபவர் போற்றினும், போற்ற மனமற்றோர் தூற்றினும், ஏற்றதொரு கருத்தை எனது உள்ளம் ஏற்றால் துள்ளாது, நில்லாது தொடர்ந்து செல்வேன்!" – இதுபோன்ற மாற்றாருக்கு அஞ்சாத – கொள்கையில் உறுதி கொண்ட பேச்சுகள் ஏராளம்! ஏராளம்!

அவருடைய பேச்சுக்கோ – சிந்தனைக்கோ அரு மருந்தாவது ஒன்றே ஒன்றுதான். அதன் பெயர்தான் பொடி. அது இல்லையென்றால் எதையும் தாங்கும் இதயம் படும் பாடு.... அப்பப்பா! சொல்லிட முடியாது.

**சாதனைகள்**

அவர் எம்.எல்.ஏ, ஆனதும் முதல் காரியமாகச் செய்தது. கட்சி சார்பற்ற முறையில் தண்டலம் கிராமத்தில் மகாநாடு கூட்டி, குடிகளின் குறைகளைக் கவனிக்க வைத்தது. அந்த மகாநாட்டுக்குச் சென்னை முதன் மந்திரி திரு.காமராஜரைத் தலைமை வகித்து நடத்தச் செய்ததும் அவரே. கொட்டிய மழையைக் கூட இலட்சியம் செய்யாமல், அப்போது அவர் ஆற்றிய பணியை நாங்கள் மறந்துவிட முடியுமா?



**சென்னை மாநகராட்சியில், முதன்முதலாகக் கோலோச்சிட ஓயாது பாடுபட்டு வெற்றிக்கனி கொணர்ந்த செயல்வீரர் கலைஞருக்கு, அண்ணா கணையாழி அணிவித்தல் (1959).**

மகாநாடு முடிந்த பின்னும் திரு.காமராஜரை எங்கள் எம்.எல்.ஏ.விட்டாரா, என்ன?

தனித்த முறையில் காமராஜரைச் சந்தித்து, காஞ்சிபுரம் பொருளாதாரத் துறையில் பின்தங்கி இருப்பதைப் 'படம்' பிடித்துக் காட்டி, "குணாளா! மணாளா! எப்படியாவது ஒரு நூற்பு ஆலை ஆரம்பிக்க வழி செய்யக் கருணை காட்டு!" – என்று வேண்டியது நினைவிருக்கிறது.

சமீப காலமாகக் குடிநீர்ப் பஞ்சம் காஞ்சிபுரமெங்கும் ஏற்பட்டு, மக்களின் 'அபயக் குரல்' எழுந்துவந்தது அல்லவா? அதைப் பயன்படுத்திக் கொண்ட சில கட்சிக்காரர்கள், "பார்த்தீர்கள்ா? அண்ணாதுரை சட்டசபைக்குச் சென்றான்; வந்தது வினை!" என்று ஆர்ப்பரித்தனர். "என்னால்தான் இக்கேடு என்பது உண்மையானால் – அபயக் குரலை அவர்களால் அகற்ற முடியுமானால் நான் எதற்கு? எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்யவும் தயார்!" என்று தன்னுடைய வெள்ளை உள்ளத்தைத் திறந்து காட்டினார் அண்ணா.

அடிமேல் அடி அடித்தார்; ஆம். அம்மியும் நகரத்தான் செய்தது. மக்கள் குடிநீர்ப் பஞ்சத்தினின்று மீட்கப்பட்டனர். பாலாறு குடிநீர்த் திட்டம் ரூ.13 இலட்சம் செலவில் ஆரம்பிக்கப்பட்டு இரண்டாம் கட்டம் முடிவடையும் தறுவாயில் உள்ளது. 1959 ஆம் ஆண்டு எப்ரல் மாதத்திலிருந்தே குடிநீர் பயனளிக்கும் என்றால் அதற்கு மூலகாரணம் அண்ணா என்றுதான் சொல்ல வேண்டும். "வறண்ட இடங்களில் வளம் காண மைசூர் சர்க்காருடன் பேச்சுவார்த்தை நடத்தி, பாலாற்றில் நீர்விடச் செய்யவேண்டும்!" என்று சட்டசபையில் தீர்மானம் கொடுத்துத் தூண்டிவருபவரும் அவரே!

பள்ளி மாணவர் பகலுணவு அளிப்பு விழா. கல்வித் துறைத் தலைவர் திரு.என்.டி.சுந்தரவடிவேலர் தலைமையில் நடந்தபோது, தனது எம்.எல்.ஏ. சம்பளத்தில் ரூ.50 தருவதாக உறுதியளித்து, மாணவ மாணவிகளின் பாராட்டுதலைப் பெற்றவர் எங்கள் எம்.எல்.ஏ! மாணவர்களின் எதிர்கால நலனை வரையறுக்கும் முறையில், தொழிற்கல்லூரி (Poly technic) ஒன்று ஆரம்பிப்பதற்கான அரிய முயற்சி எடுத்துக்கொண்ட பலரில் அவர் முக்கியமானவர்.

மற்ற அங்கத்தினர்களைப் போல எங்கள் எம்.எல்.ஏ. சாதாரணமானவர் அல்ல. 'சந்திரரோதயம்', 'சந்திரமோகன்' முதலிய பல நாடகங்களை எழுதி, தாமே நடித்துக் காட்டிப் பச்சையப்பர் கல்லூரி போன்ற பொது நிலையங்களை அமைக்கக் காரணமாய்

இருந்தவர். மறுமலர்ச்சி எழுத்தாளர். அவர் எழுத்தைப் பின்பற்றி எழுந்த – எழுகின்ற – எழுத்தாளர்கள் ஏராளம்! ஏராளம்! சினிமாத் துறையில் அவர் புகுத்திய சீர்த்திருத்தக் கருத்துக்களை அவ்வளவு லேசில் மறந்துவிட முடியுமா?



ஈன்றெடுத்த மண்ணுக்கு இனிய தமிழ்ப்பெயர் சூட்டி, 'தமிழக அரசு தலைமைச் செயலகம்' எனும் பெயர்ப் பலகைத் திறப்புவிழாவில், அண்ணாவும், கலைஞரும் (14.4.1967)

### தோல்விகள்

"எதிர் நீச்சல்காரர்களாகிய நாங்கள், தோல்வியைக் கண்டு கதி கலங்கோம்; எதிர்ப்படுகின்ற சுழிக்கும் சுறாவுக்கும் அஞ்சினால் முத்தெடுக்க முடியாது" என்றார் எங்கள் எம்.எல்.ஏ. முன்பொரு சமயம் சென்னை பெத்தநாயகன் பேட்டையில் நகரசபைத் தேர்தலில் போட்டியிட்டுத் தோற்றார்.

"சட்டசபையை ஊட்டிக்கு மாற்றாதீர்; அதனால் பாட்டாளிகளின் பணம்தானே பாழ்?" என்றார். கேட்டார்களா? "சென்னைக்குத் 'தமிழ்நாடு' என்று பெயர் வைக்கத் தயங்குவது ஏன்?" என்று சட்டசபையில் கேட்டாயிற்று; மேடைதோறும் பேசியாயிற்று. பலன் கிடைத்ததா?

"எண்ணிக்கை அதிகம் இருக்கிற காங்கிரஸ்காரர்கள் துரியோதனன் கூட்டத்தைப்போல, நாங்கள் எண்ணிக்கைக் குறைவால் பாண்டவர்கள்! ஆனால் அவர்கள் எண்ணிக்கை அதிகமிருக்கிற காரணத்தால், பசுவைக் கழுதை என்று சொல்லி எதையும் அமலாக்கிக் கொள்கிறார்கள். 'கழுதை என்கிறீர்களே; பசுதானே இது. அதற்குத் தெளிவு கூறும் உறுப்புகளைப் பாரீர்" என்றாலும் எங்கள் பேச்சு சட்டசபையில் எடுபடுவதில்லை!" என்றார், எங்கள் எம்.எல்.ஏ. அது உண்மைதானே?

### கடந்த காலம்

படித்துப் பட்டம் பெற்று, அரசியலில் புகுந்த, 'அஞ்சாமை'யைச் சொல்வதா? ஐயா, (ஈ.வெ.ரா.)வோடு இருந்து சாதித்த வெற்றிகளைச் சொல்வதா? 'தந்தை'யைப் பிரிந்து 'தனிக்குடித்தனம்' எப்படி நடத்துவது என்றெண்ணிக் கண் கலங்கிய காட்சிகளைச் சொல்வதா? 'கண்ணீர்த் துளிகள்' என்று தந்தையால் பட்டம் சூட்டப்பட்டு, மாற்றாரால் கேலி பேசப்பட்டு வந்த, 'குழந்தைப் பருவத்'தைச் சொல்வதா?' 'தான் இருந்தது போதும்' என்ற தம்பிமார்களிடம் தலைமை பீடத்தை ஒப்படைத்து ஒதுங்கிய 'பரந்த மனத்தை'ச் சொல்வதா? 'மூட்டைப் பூச்சிப்போல் நசுக்கி விடுவேன்' என்று அன்று சொன்ன ராஜாஜி, அண்ணாவை அழைத்துப் பேசிய 'ரகசிய'த்தைச் சொல்வதா? எதைச் சொல்வது? எண்ண அலைகள் எழுந்தன! எதிர்காலம் எதிர்ப்படுகிறது.

### எதிர்காலம்

எதிர்காலத்தில் ஆட்சி பீடம் அவர் கைக்கு மாறும். அரசோச்சும் 'அந்த நாள்' அதி விரைவில் வந்துவிடும். இந்த நினைவு, துணிவுடன் எங்கிருந்தோ பிறக்கிறது? ஏன் பிறக்காது? அவர் கடைக்கண் காட்டினால் – வாய்திறந்தால் – மாணவர் பட்டாளம் எதையும் செய்யச் சித்தமாய் இருக்கும்போது!

மேனாட்டு அரசியலிலே ஆப்ரகாம் லிங்கன் யார்? உலகை ஆட்டிப் படைக்கும் ஐசன்ஹவர், நாஸர் இவர்களெல்லாம் சாதாரண சிப்பாயாக இருந்து, உழைப்பால் உயர்ந்தவர்கள்தானே! 'உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ?'.

அவ்வாறிருக்க எங்கள் அண்ணா ஆட்சிபீடமேறி அரசோச்சுவதா இயலாத காரியம்? □

ஆசிரியரும் வெளியிடுபவரும் : க.முத்துசாமி, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு
சென்னை – தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை–600 002. தொலைபேசி:568926, 568927, 564906



தூய
பட்டு

தூய
சரிகை



ராஜகம்பீரமான ஊதா...

செந்தூரப்பூபோல் சிகப்பு...

மங்களகரமான மஞ்சள்...

வான்வெளிபோல் நீலம்...

கற்பனைக் கடங்கா

அற்புத வண்ணங்களில்

நேர்த்தியான பட்டு,

நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி

தமிழரசு

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23





